www.padippakam.com

விலை ரூ. 3.00

LICENCE No. TN/MS (N) WPP-100

ஈழ சுதந்திரன்

ELASUTANTIRAN



திருவள்ளுவர் ஆண்டு
உ0௨௯
ஆவணி-புரட்டாசி
செப்டம்பர்-1998
புத்தகம்: 11 இதழ்: 9

**விடுதலைப்புலிகளை ஒடுக்குகிறோம் என்று தமிழ்மக்களைப் பட்டினிபோடுவது ஏன்?**

∴ இந்திய மீனவர்களை சுட்டுத் தள்ளுவது ஏன்?

∴ இந்தியருக்குச் சொந்தமான-இலங்கை அரசே ஏற்பாடு செய்த கப்பலைத் தகர்த்தது ஏன்?

∴ போரைத் தொடர்வது தேவைதானா?

# வன்முறைதான் பிரச்சினை என்றால் மலையகத் தமிழர்களுக்கு எதிராகவும் ஏன் ஒடுக்குமுறை?

## ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகம் வினா

**விடுதலைப் புலிகளின் வன்முறைக்கு எதிராகத்தான் போர் என்று சொல்லிக் கொண்டு, இந்திய மீனவர்களைச் சுட்டுத்தள்ளுவதும், தானே ஏற்பாடுசெய்த இந்தியருக்குச் சொந்தமான கப்பலைத் தாக்கித் தகர்த்ததும், இந்திய வம்சாவளி மக்களான மலையகத் தமிழர்களுக்கு எதிராகவும் ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருப்பதும், மொத்தத் தமிழ் மக்களையும் பட்டினி போடுவதும் ஏன் என்று சிறீலங்கா அரசை நோக்கி கேள்விக்கணை தொடுத்துள்ளது ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகம்.**

**போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும், அதற்கு இந்தியா தன் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கோரி அது விடுத்திருக்கும் அறிக்கை வருமாறு:**

''போரை நிறுத்துங்கள். பேச்சு வார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வுகாண முன் வாருங்கள்'' என்று சிறீலங்கா ஆட்சியாளர்களை, குறிப்பாக, ''சமாதான முறையில் இனப்பிரச்சினைக்கு சடுதியில் தீர்வு காண்பேன்'' என்று சொல்லியே கடந்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்திருக்கும் சந்திரிகா குமாரணதுங்கவைக் கேட்டால், ''போர் தமிழ் மக்கள் மீதல்ல; சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வரமறுக்கும் விடுதலைப் புலிகளின் மீது மட்டுமே; அவர்களுடைய வன்முறைப் போக்குக்கு முடிவு கட்டுவதற்கு மட்டுமே'' என்று சந்திரிகா தரப்பிலிருந்து பதில் அளிக்கப்படுகிறது.

### சிறீலங்கரவின் பொய்யுரை

''விடுதலைப் புலிகளை ஒடுக்கிய பிறகு வடபகுதியில் போரில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் படைகள் திருப்பியழைக்கப்படும்'' என்று உலக நாடுகளிடம் சிறீலங்கா அரசு சமாதானமும் கூறி வருகிறது.

ஆனால், உண்மையில் இந்தப் போரை தமிழ மக்களுக்கு எதிராகத்தான் சிறீலங்கா அரசு நடத்தி வருகிறது தமிழ் மக்களை ஒழிப்பதில் தான் சந்திரிகா தனது படைகளையும், நிர்வாகத்தையும் முடுக்கிவிட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை இலங்கையில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் மெய்ப்பித்துக் கொண்டு வருகிறது.

1. போர் புலிகள் மீது மட்டும்தானென்றால், போதிய உணவுப் பொருட்களை அனுப்பி வைக்காமல் தமிழ் மக்களைப் பட்டினி போட வேண்டிய அவசியமில்லை.

ஆம்; வடபகுதித் தமிழ் மக்களின் குறைந்த பட்ச உணவுத் தேவை அளவிலும் நாலில் ஒரு பங்கு கூட அனுப்பி வைக்கப்படுவதில்லை என்று அரசு நிர்வாகிகளே கூறுகின்றனர். பெரும்பாலும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள அப்பகுதிகளுக்குச் செல்லும் உணவுப் பொருள்களில் புலிகள் தம் தேவைகளுக்கு எடுத்துக் கொண்டது போக எஞ்சியவை தான் பொதுமக்களுக்குச் சேரக் கூடியதாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

அத்துடன் ஏற்கெனவே அரைப்பட்டினி, கால்பட்டினியாக இருக்கும் தமிழ் மக்களின் உணவுப் பங்கீட்டு அளவையும் சந்திரிகா அரசு பாதியாகக் குறைத்து விட்டது.

### கொழும்பில் கொடுமை

இவ்வளவும் யுத்தத்தைக் காரணம் காட்டியே செய்யப் பட்டிருக்கிறது எனில் தமிழ் மக்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் யுத்தமும் சேர்த்து நடத்தப்படுகிறது என்பது தானே பொருள்?

2. இலங்கை ஒரே நாடு என்று சொல்கிற போது வட இலங்கைத் தமிழ் மக்கள் தென்னிலங்கைக்குச் செல்வது ஏன் கட்டுப்படுத்தப்பட வேண்டும்? அயல் நாட்டுக்குச் செல்வதைவிட கெடுபிடி முறைகள் ஏன் கையாளப்பட வேண்டும்?

தலைநகர் கொழும்பிலேயே தமிழ மக்கள் அனைவருமே சந்தேகத்துக் குரியவர்களாக, குற்றவாளிகளைப்போல் ஏன் நடத்தப்படவேண்டும்?

காவல் துறையும் இராணுவமும் நினைத்த போதெல்லாம் தமிழ்மக்கள் வசிப்பிடங்களைச் சோதனை போடுவதும், விசாரணைக்கு என்ற பெயரில் கும்பல் கும்பலாக அழைத்துச் செல்லப்படுவதும், கொடுமைப் படுத்தப் படுவதும், பின்னர் அவர்களில் பலர் காணாமல் போவதும் ஏன்?

### தமிழக மீனவர்களை கொல்வது ஏன்?

3 சரி; புலிகளின் பொருட்டு வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் தான் ஒடுக்கு முறைக்கு ஆட்படுத்தப் படுகிறார்கள் என்றால், இந்திய மீனவர்கள் சிறீலங்கா கடற் படையினரால் அடிக்கடிப் பிடித்துச் செல்லப்படுவதும், சுட்டுத்தள்ளப்படுவதும் ஏன் நடக்கிறது? அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும், கஷ்டப்பட்டு அவர்கள் பிடித்த மீன்கள் சிங்களப் படையினரால் கொள்ளையடிக்கப் படுவதும் ஏன்?

4. சிறீலங்கா அரசாங்கமே ஏற்பாடு செய்து, அகதிகளுக்காகப் பொருட்களை ஏற்றிச் சென்ற, கனடா வாழ் இந்தியருக்குச் சொந்தமான 'பிரின்சஸ் காஷ்' என்ற கப்பலை, விடுதலைப் புலிகள் இடைமறித்தார்கள் என்று சாட்டுச் சொல்லி, சிறீலங்கா விமானப் படை குண்டுவீசித் தாக்கித் தகர்த்தது ஏன்? அதுவும் எப்போது? இந்திய சுதந்திரப் பொன்விழாவுக்கு முதல் நாள் 14-8-98 அன்று.

நல்லவேளையாக புலிகள் அக்கப்பலின் கேப்டன் உட்பட அதன் 17 ஊழியர்களையும் முன்கூட்டியே கைது செய்து கொண்டு சென்றதால் அவர்கள் உயிர் தப்பினர். இல்லையென்றால் அக்கப்பலோடு அவர்களையும் கடலில் ஆழ்த்தியிருப்பார்கள்.

இவை சிறீலங்கா ஆட்சியாளர்களின் தமிழர் விரோதப் போக்கை மட்டுமின்றி, இந்திய விரோதப் போக்கையும் புலப் படுத்துவன அல்லவா?

### மலையகத்தில் தீங்கு

5. இலங்கை மலையகத் தமிழர்களை 'இந்திய வம்சாவளியினர்' என்று சிறீலங்கா ஆட்சியினரே ஏனையத் தமிழ் மக்களிடமிருந்து இனம்பிரித்து வைத்துள்ளது. தவிரவும் மலையகம் மத்திய மாகாணத்தில் இருப்பதாலும், மலையகத் தமி

(16ம் பக்கம் பார்க்க)

## ஆதிதிராவிடர் பள்ளிக்கு சூரியஒளி விளக்கு வட்டாட்சியர் கோரிக்கை ஈ.ஏ.ம.க. ஏற்பு

**பாராட்டிக் கடிதமும் அனுப்பப்பட்டது!**

மிகவும் நலிந்த பிரிவினரான முகாம்களில் வாழும் இலங்கைத்தமிழ் அகதி மக்கள் மத்தியில் அவர்களுக்கு உதவும் வகையில் ஈழஏதிலியர் மறுவாழ்வுக்கழகம் சூரியஒளி அடுப்பு மற்றும் விளக்குகளை வழங்கி ஊக்குவித்து வருகின்றது.

கோவை மாவட்டத்தில் இதுபோன்ற நவீனசேவையை நேரில் பார்வையிட்ட பொள்ளாச்சி வட்டாட்சியாளரான திரு. ஆர். குத்புத்தீன் அவர்கள், தமது பகுதியில் உள்ள ஜலப்பட்டி கிராமம் ஈசல் திட்டில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உறைவிடப்பள்ளிக்கு அத்தகைய சூரிய ஒளி விளக்கு ஒன்றை அன்பளிப்பாக வழங்கும்படி ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்திற்குக் கடிதம் எழுதியிருந்தார்.

அவருடைய கோரிக்கையை ஏற்று மேற்படி பள்ளிக்கு சூரியஒளி விளக்கினை அன்பளிப்பாக வழங்க ஒப்புக் கொண்ட ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம், வட்டாட்சியரின் அந்த மனிதாபிமான முயற்சியைப் பாராட்டி அவருக்கு மடலும் எழுதியுள்ளது.

ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்

படிப்பகம்

"ஒருநீர்ப் பிறந்தொ ங்கு நீண்டக் கடைத்தும்
விரிநீர் ுவளையை ஆம்பல் ஒக்கல்லா
பெருநீர் கேண்மை கொளினும் நீரல்லார்
கருமம் வேறு படும்"

(பெரி நீர்நிலையில் செங்கழுநீர் மலரும் சேர்ந்து தோன்றினும் மணமிக்க செவ்வல்லி, மணமில்லாத செங்கழுநீரோடு வேறுபட்டே இருக்கும். அதுபோல பெருந்தன்மையாளர் எத்தனைதான் நட்புப் பாராட்டினாலும் அத்தன்மையில்லாதார் ஒன்றாகவே இருப்பினும் செயலில் மாறுபட்டே இருப்பார்கள்.)

# தெளிவு

## சிறீலங்கா இந்தியப்பகைக்கு இதோ ஓர் எடுத்துக்காட்டு!

சிறீலங்கா ஆட்சியில் எந்தக் கட்சி அமர்ந்திருந்தாலும் அவர்களின் பௌத்த சிங்களப் பேரினவாத அரசு, இந்திய விரோத மனப்பான்மையோடு நடந்து வந்திருப்பதையே 1961ல் நடந்த இந்திய-சீனப் போரின் போதும், 1964ல் நடந்த இந்திய-பாகிஸ்தான் போரின்போதும் பின்னர் 1927ல் வங்காளதேச விடுவலைப் போரையொட்டி நிகழ்ந்த இந்திய-பர்க்கிஸ்தான் மோதலின் போதும் மெய்ப்பித்துள்ளது.

ஆம்; அப்போது இந்திய விரோத நாடுகள் இலங்கையின் துறைமுகங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும், அந்நாட்டு விமானங்கள் இலங்கையில் எரிபொருள் நிரப்பிக் கொள்ளவும் சிறீலங்கா அரசு தாராளமாக அனுமதியளித்தது.

அந்தக் குணம் சிறீலங்கா ஆட்சியாளர்களிடமிருந்து இன்னும் போகவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டே கடந்த 4-9-98 அன்று வெளிநாட்டு இந்தியருக்குச் சொந்தமான கப்பலை சிறீலங்கா விமானப் படை குண்டு வீசித் தாக்கிக் கடலில் மூழ்கடித்ததாகும்.

இது நடந்தது எப்போது என்பதைப் பார்க்க வேண்டும். இந்தியா தன்து சுதந்திரப் பொன்விழாவைக் கொண்டாடி மகிழ்ந்த "ஆகஸ்டு 15"க்கு முதல் நாளாகும்.

இத்தனைக்கும் ஜூலை இறுதியில் கொழும்பில் நடந்த சார்க் மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொண்டு தற்போது இலங்கையில் நடந்துவரும் உள்நாட்டுப் போர் பற்றி அவருடைய கருத்தை அறியப் பன்னாட்டு நிருபர்கள் எத்தனையோ முயற்சி செய்தும், சிறீலங்காவுக்கு எதிராக ஒரு சொல் தானும் சொல்லாமல் திரும்பியிருந்தார்.

அப்படியிருந்தும் இந்திய சுதந்திரப் பொன்விழாவுக்கு முதல்நாள் ஒரு இந்தியருக்குச் சொந்தமான கப்பலை, இந்தியாவிடம் மரியாதை நிமித்தமாகத் தகவல்கூடக் கொடுக்காமல் சிறீலங்கா தாக்கித் தகர்த்ததென்றால், இந்தியா பற்றிய அதன் மதிப்பீடு எவ்வாறானது என்று சொல்லத் தேவையில்லை.

சொல்லப்போனால், கனடா வாழ் இந்தியர் அருண் காஷ்யபுக்குச் சொந்தமான 'பிரின்சஸ்காஷ்' என்ற அந்தக் கப்பல், சிறீலங்கா அரசின் ஏற்பாட்டிலேயே சாக்குகளை ஏற்றிச் சென்றிருக்கிறது.

ஆனால், அதை முன்கூட்டியே உளவறிந்த விடுதலைப் புலிகள், கடலில் அதைச் சுற்றி வளைத்து, சரக்குகளைக் கைப்பற்றியதுடன், அதன் கேப்டன் பங்கார நவீந்திர கர்கரா உட்பட அதில் பணியாற்றிய 17 ஊழியர்களையும் கைது செய்து கொண்டு சென்றதாகக் கூறப்படுகிறது. அதன்பிறகுதான் சிறீலங்கா விமானப்படை அதைத் தாக்கித் தகர்த்திருக்கிறது.

புலிகளோ, தாங்கள் கைது செய்த 17 கப்பல் ஊழியர்களில் 4 இலங்கையரைத் தவிர, கேப்டன் உட்பட அத்தனை இந்தியர்களையும் விடுதலை செய்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

அந்த 4 இலங்கையரிலும் தமிழர் யாரும் இல்லாவிட்டால் பின்பு அவர்களையும் விடுதலைப்புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கக் கூடும்.

ஆமாம்; விடுதலைப் புலிகளால் பிடித்துச் செல்லப்படும் தமிழர்கள் கதிதான் அதோகதியாகுமே தவிர, பகைச்சிங்கள சிப்பாய்கள்கூட எத்தனை காலமானாலும் பத்திரமாகவே திருப்பியனுப்பப் படுகிறார்கள்.

ஆக, சிறீலங்கா சிங்கள பௌத்தப் பேரினவாத அரசின் இந்திய விரோத மனப்பான்மையே இந்திய சுதந்திர நாளையொட்டி நடந்த இந்த நிகழ்வின் மூலமும் உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

சம்பந்தப் பட்டோர் இதைப் புரிந்து கொண்டால் சரி!

வன்னியிலிருந்து

## யாழ். வரும் குடும்பத்தினர் அடிப்படை வசதிகள் இன்றி சிரமம்

வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து குருநகர் குடாக் கடலுக்கூடாக யாழ்ப்பாணம் வந்து சேர்கின்ற குடும்பத்தினர் தமது வாழக்கையை ஆரம்பிப்பதற்கான அடிப்படை வசதிகள் எதுவும் உடனடியாகக் கிடைக்காது பெரும் சிரமங்களையும் கஷ்டங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

குருநகர் இறங்குதுறைக்கு வந்து சேர்ந்ததும் சீநோர் முகாமிற்கு அழைத்துச் செல்லபடுகின்ற குடும்பங்களின் மருத்துவ சேவையை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளை கவனித்து வருகின்றது.

முகாமில் விசாரணைகள் யாவும் முடிவுற்றதும் தத்தம் இருப்பிடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமிடத்து கால்நடையாகவே யாழ். பஸ் நிலையம் செல்லப் பணிக்கப்படுகின்றனர். தலைகளிலும் கைகளிலும் பொதிகளைச் சுமந்து கொண்டு சிறு குழந்தைகளைக் கூட கொடூர வெய்யிலில் காலில் செருப்புக்கூட இல்லாமல் கூட்டிச் செலகின்ற காட்சிகள் வேதனைகள் தருவதாகவுள்ளன.

### கையேந்தும் நிலை

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து தமது சொந்த இருப்பிடங்களுச் செல்கின்ற குடும்பங்களுக்குரிய இலவச பயண அனுமதியை யாழ். அரச செயலகத்தின் புனர்வாழ்வுப் பிரிவு கவனத்திற் கொண்டு செயற்பட்டால் பெரிதும் உதவியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, வன்னியில் இருந்து குருநகர் வரும் குடும்பங்களுக்கு வீடுகள் செல்ல அனுமதிக்கப்படும் வேளையில் அவர்களுக்கான அடிப்படைத் தேவையான சட்டி, பானை, குடிநீர்க் கோப்பைகள், பாய்கள் மற்றும் இருவார காலத்துக்குத் தேவைப்படும் உலர் உணவுகளை வழங்கினால் அக்குடும்பங்களுக்குப் பெரிதும் ஆறுதலாக இருக்கும்.

இவ்வகையான உதவிகள் தற்போது வழங்கப்படாமை காரணமாக மிகவும் அடிமட்டத்தில் வாழ்கின்ற குடும்பங்கள் பலரிடமும் கையேந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன. போதிய உடுபுடவைகள் தானும் இல்லாத நிலையில்தான் அடிமட்டக் குடும்பங்கள்யாழ்ப்பாணம் வருகின்றன.

இவ்விடயத்தில் இவ்விதம் துன்பப்படும் குடும்பங்களுக்கு வலிந்து உதவும் தொண்டர் நிறுவனங்கள் கூட எவ்வித ஆதரவையும் உதவிகளையும் வழங்காமல் மௌனித்து இருக்கின்றனஎன்பதையிட்டு துன்பமடையும் குடும்பங்கள் மிகுந்த விசனத்தை வெளிப்படுத்தியுள்ளன.

அதேசமயம் இவ்வாறான குடும்பங்களில் இருக்கின்ற பாடசாலை மாணவர்கள் உடனடியாகவே தமது கிராமங்களில் இருக்கின்ற முன்பு கல்வி பயின்ற பாடசாலைகளிலும் கல்வியைத் தொடர முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கு செல்வதற்கான சீருடைகள், கல்வி உபகரணங்கள் இல்லாமையும் முக்கியகாரணங்களில் ஒன்றாகும்.

மேலும் வன்னியில்இருந்து யாழ் மீள வந்து விட்ட குடும்பங்கள் தமது உலர் உணவு அட்டைகள், முத்திரைகள் போன்றவற்றினைப் பெற கிராம அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்குப் பல முறை செல்ல வேண்டிய நிலையிலும் உள்ளன.

இவர்களுக்கான மீளக் குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்படுவதிலும் கணிசமான தாமதங்களும் ஏற்படுகின்றன. நிர்வாக இழுத்தடிப்புகளும் இடம் பெறுவதாகத்தெரிகின்றது.

தற்போது குருநகர் இறங்குதுறை ஊடாக தினசரி பல குடும்பங்கள் யாழ் வந்து கொண்டிருக்கின்றன என்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை திருகோணமலையில் இருந்து கப்பல்மூலம் யாழ்ப்பாணம் வரவுள்ள குடும்பங்களுக்கு வசதிகள், வாய்ப்புகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும் என்ற அடிப்படையில் புனர்வாழ்வுப் பகுதி ஊழியர்கள் வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாகவும், இது விடயத்தில் சில உள்ளூர் அரசு சார்பற்ற நிறுவனங்களிடமும் சில உதவிகளை வழங்க முன் வருமாறும் கோரப்பட்டுள்ளமை பற்றியும் அறியப்படுகின்றது.

## சுயதொழில் மூலம் சொந்தக்காலில் நிற்க அகதிகளுக்கு ஆலோசனை

### செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை

அகதி முகாமில் இருப்பவர்கள் தம்மை அகதிகள் என்று கூறிக்கொண்டிருப்பதை விடுத்து தாமாக சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைத்தலைவர் ரி. வசந்தராஜா தெரிவித்தார்.

வாழைச்சேனை கல்மடு அகதி முகாமில வசித்துவரும் வடமுனை, புனாணை, ஊத்துச்சேனை கிராமங்களைச் சேர்ந்த யுவதிகளுக்கு வாழைச்சேனை செஞ்சிலுவைச்சங்கக் கிளையினால் தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் அவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நாம் எமது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் ஏதாவது சுயதொழில் முயற்சியில் ஈடுபட வேண்டும். அதற்காகவே இந்த தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டுளளது என்றார்.

மேற்படி வைபவத்தில் மட்டக்களப்பு கிளைச் செயலாளர் கே. கணேசானந்தன், பொருளாளர் ஜே இக்னேசியஸ், வாழைச்சேனை கிளைத்தலைவர் கே. இராஜகோபால், உபதலைவர் பி. புண்ணியமூர்த்தி, பொருளாளர் வி. ஜீவரெத்தினம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை மேற்படி சங்கத்தின் உதவியுடன் அகதி முகாம் மக்களின் தேவைக்கென 18 கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

## 1949-லேயே திருக்குறள் இசைப் பாடல்கள்

திருக்குறள் கருத்துக்களைக் கொண்ட இசைப் பாடல்களின் தொகுப்பு நூல்ஒன்று அறத்துப் பாலில் உள்ள அதிகாரம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பாடல், ஒவ்வொரு பாடலிலும் குறள் அமைய யாக்கப் பெற்றுள்ளது.

இதுவரை சொற்பொழிவுகள் மூலமும் நாடகங்கள் மூலமும் மட்டுமே திருக்குறள் சிறப்பும், கருத்துக்களும் பரப்பப் பெற்று வந்தன. இசை மூலமும் பரப்பும் ஒரு வழியை இந்நூல் இயற்றியதன் மூலம் பாவலர் தொ.ப. வேலாயுதசாமி காட்டிவிட்டார். ஆங்காங்குத் தமிழ்க் கச்சேரிகள் நடத்தும் இசையறிஞர்கள் என்போர் இப்பாடல்களை இசைப்படுத்திக் கொண்டு தமிழ்ப் பெருமையை வளர்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். தமிழிசைக் கழகங்கள் இது போன்ற நூல்கள் வெளிவரப் பல்வகையாலும் ஆசிரியர்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கூற விரும்புகிறோம். இதை வெளியிட்ட தென்றல் நூற்பதிப்புக் கழகத்தாரைப் பாராட்டுகிறோம்.

இதன் விலை 8 அணா
தென்றல் நூற்பதிப்புக் கழகம்
சலகண்டபுரம், சேலம் மாவட்டம், தமிழ்நாடு.
நூல்நிறை வெளியிட்ட இதழ்: பொன்னி, (10-10-49 நாளிட்ட ஏடு) தகவல்: உவமைக் கவிஞர் சுரதா

www.padippakam.com



## வாசகர் நெஞ்சம்

அன்புள்ள ஆசிரியரே!

இலங்கை முழுவதும் நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ள சந்திரிகா, நாடாளுமன்றத் தேர்தலை விரைவில் நடத்தி முடிக்க உள்ளார் என்ற செய்தி, ஈழசுதந்திரன் முதற்பக்கச் செய்தியை மெய்ப்பிப்பதாகவே உள்ளது.

கி. சந்திரசேகரன், புதுக்கோட்டை.

''சிங்களக் கொலைவெறி தமிழர் மீது மட்டும்தான் பாய்கிறது. தமிழ்ப் போராளி இயக்கக் கொலை வெறியோ சகோதரத் தமிழர்களையும் விட்டுவைப்பதாக இல்லையே!'' என்ற சென்ற இதழின் முதல் பக்கப் பெட்டிச் செய்தியின் இறுதி வரிகள் மனச்சான்றுள்ள ஒவ்வொரு ஈழப் போராளியையும் சிந்திக்கத் தூண்டுவதாகும்.

சி.எஸ். குணா, மதுரை-4.

''போர் புலிகளுடனா? தமிழ்ப் பொதுமக்களுடனா?'' என்ற ஆசிரியத் தலையங்கம் தேவையற்றது. ஏனெனில் சிங்களப் பேரினவாதத்தின் அரக்கத்தனமான யுத்தம் அடிநாள் தொட்டே தமிழ்ப் பொது மக்களுக்கு எதிரானதுதான்.

மா. கணபதிப்பிள்ளை, நெல்லை-1.

எம்.எஸ். சுபாஷின் ''குருவும் குப்பமும்'' என்ற சிறுகதை கற்பனையாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு அகதி முகாமில் நடந்ததாகவே தெரிகிறது. அதில் வரும் குரு போன்றவர்கள் எல்லா முகாம்களிலும் இருக்கத்தான் செய்கின்றனர். டி. தனராஜினியின் 'இருளில் தோன்றிய ஒளி' சிறுகதை அவருடைய கன்னிப்படைப்பாகத் தெரிகிறது. இன்னும் பட்டைத் தீட்டப்பட வேண்டும்.

மா. சுந்தரமூர்த்தி, சென்னை-106.

கவிதைச் சரத்தில் யோகேஸ்வரி. கீதா, சுமதி, செல்வி, நிவேதிதா, கிருமாலினி எனப் பெண்பாற் கவிஞர்களின் கவிமலர்களையே தொடுத்து அசத்தி விட்டீர்கள். அத்தனையும் வாசமலர்கள்! ஆனால் இத்தனை பெண் கவிஞர்கள் எழுதியிருந்தும் முதல் கவிதையாக ஒருஆண் கவிஞரின் படைப்பைப் பிரசுரித்திருந்தது ஆசிரியரின் ஆணாதிக்க மனோபாவத்தையே காட்டியது.

கவிஞர் வெண்ணிலா, சென்னை-83.

தலைமைத்துவப் பயிற்சி கட்டுரையில் நேரத்தைத் திட்டமிடல் பற்றிய பகுதி கச்சிதமாக உள்ளது.

ஆர்.என். சூரியா, சேலம்-1.

அகதி முகாம்களில் வாழும் மக்களின் மனநலப்பிரச்சினைகள் பற்றிய தொடர்கட்டுரை ஏதோ ஓர் ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பாக, அதுவும் தமிழ் ஒழுங்கு இல்லாத, எழுத்துக்கு எழுத்து அப்படியே மொழிபெயர்ப்பாக உள்ளதேயன்றி. இங்கே உள்ள முகாம் மக்களின் உண்மையான மனநிலைக்குப் பரிகாரம் சொல்வதாக இல்லை.

மா. வழித்துணைவன், சென்னை-11.

ஈழத்தமிழர் வரலாற்றுத் தொடர் தமிழக வரலாற்றிலும் பல முடிச்சுகளை அவிழ்ப்பதாக இருக்கிறது. அதற்காக கலாநிதி சிற்றம்பலத்துக்கு தமிழகத் தமிழினம் சார்பிலும் நன்றி கூறுகிறேன்.

புலவர் அம்பலவாணன், ஊற்றுமலை.

''இலங்கை இனச்சிக்கல் தீர்க்கப்பட உலகத்தமிழ்ப் புத்தி சீவிகள் செய்ய வேண்டியதென்ன?'' என்ற தலைப்பிலான இ. நடராசாவின் கட்டுரை அறிவு பூர்வமானது. ஆனால் ''இந்திய மத்திய அரசு தன் பிராந்தியத்தில் அமெரிக்காவின் தலையீட்டைப் பொறுத்துக்கொண்டு சும்மா இருக்கும் என எண்ணிப் பார்க்க முடியுமா?'' என்ற தொடர் அனாவசியம். ஏனெனில் எமது இந்திய ஆட்சியாளர்களுக்கு காஷ்மீர்தான் முக்கியமேயொழிய, மற்றதைப்பற்றிக் கவலை கிடையாது.

எஸ். திராவிடமணி, அம்பாசமுத்திரம்.

தந்தை செல்வா பற்றிய வரலாற்றுத் தொடரும், ஒரு குறள் விளக்கமும் அருமை.

க. நமசிவாயம், அரியலூர்.

# செம்மணி புதைகுழிகள் மர்மம் அம்பலமாகட்டும்

### வீரகேசரி நடுநிலை நாளேடு ஆசிரியவுரை

தமிழ்மக்களைக் கொன்று புதைத்த செம்மணி புதை குழிகளின் மர்மம் அம்பலமாக வேண்டும் என்று, 'வீரகேசரி' தமிழ்நாளேடு தனது 24-7-98 இதழில் எழுதியுள்ள ஆசிரியவுரை வருமாறு:

செம்மணி புதைகுழி விவகாரம் தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த கவலையையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலைமையில், செம்மணி புதை குழிகள் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சி.ஐ.டி.யினருக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும், குற்றமிழைத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டு வர உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அரசு உறுதியளித்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் எம் எஸ். விக்கிரம ஆராச்சி தெரிவித்துள்ளார்.

#### காணாமல் போன 600 பேர் எங்கே?

கிருஷாந்தி குமாரசுவாமி கற்பழிப்பு கொலை வழக்கில் முதலாவது குற்றவாளி, செம்மணி பகுதியில் 400 சடலங்கள் வரையில் புதைக்கப்பட்டிருப்பதாகவும், இவற்றை தன்னால் அடையாளம் காட்ட முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

இக்கூற்றையடுத்து, கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் உட்பட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர், சர்வதேச அமைப்புக்கள் என்பன தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்தன இந்தவிதமான அழுத்தங்களின் பின்னணியில் செம்மணி புதைகுழிகள் விவகாரம் மெல்லச் சூடுபிடித்து 'விசாரணை' என்ற மட்டத்துக்கு தற்போது வந்துள்ளது.

பிரதானமாக வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை அடுத்துசுமார் 600 பேர் வரையில் காணாமல் போயுள்ளதாக அவர்களின் பெற்றோர், உற்றார், உறவினர்கள் புகார் செய்துள்ளமை தெரிந்ததே.

#### மக்களின் சந்தேகம்

இவ்வாறு காணாமல் போனவர்கள் கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என்று அவர்களின் உறவினர் நம்புகின்றனர். காணாமல் போனவர்கள் பற்றிய விபரத்தை இதுவரை சம்பந்தப்பட்டவர்களால் வழங்க முடியாத சூழ்நிலையில், காணாமல் போனவர்களின் நியாயமான சந்தேகத்தையும் புறக்கணிக்க முடியாது.

மனித உரிமைகளை மதிக்காது அவற்றை மீறும் விவகாரத்தில் எந்த அரசும்; ஒன்றுக்கு ஒன்று சளைத்ததில்லை. என்ற உணர்வே தமிழ் மக்கள் மத்தியில் நிறைந்து போயுள்ளது. இவ்வாறான மக்களின் அபிப்பிராயங்களைப் போக்குவதற்கேனும் அரசு துரித முயற்சியில் இறங்க வேண்டும்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பாராளுமன்றத்தில் பேசுகையில்:-

'செம்மணி பகுதி புதைகுழிகள் தொடர்பாக அரசு கவனம் செலுத்தும். ஐ.தே.க. ஆட்சியில் நடைபெற்றது போன்ற மனித உரிமை மீறல்களுக்கு நாம் இடமளிக்கமாட்டோம் இந்த புதைகுழி விவகாரம் தொடர்பாக பூரண தகவல்கள் திரட்டப்பட்டதும் அரசு அது பற்றிப் பாரபட்சமற்ற விசாரணையொன்றை மேற்கொள்ளும் என்று தெரிவித்துள்ளார்.

செம்மணி புதைகுழிகள் தொடர்பாக அரசு மௌனம் சாதிப்பதையிட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த பலத்த கண்டனங்களை அடுத்தே அமைச்சர் பெர்ணாண்டோ புள்ளே இவ்வாறு கூறியிருக்கிறார்.

#### ஏன் இந்த மவுனம்?

இதே வேளை, மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.க. எம்.பி அலிசாஹிர் மௌலானா உரையாற்றுகையில்:-

'தெற்கில் சூரியகந்த புதைகுழிகளை தோண்டிய அரசு செம்மணி புதைகுழிகள் தொடர்பாக மௌனம் சாதிப்பது ஏன்? என்று கேள்வி எழுப்பியுள்ளதுடன், புதைகுழிகள் தோண்டப்படுமானால், சர்வதேச மனித உரிமைகள் தாபனம் அல்லது அது தொடர்பான அரசுசார்பற்ற நிறுவனங்களின் முன்னால் தான் தோண்டப்படவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

சூரியகந்த புதைகுழி விவகாரத்தால் எவ்வாறு தென்பகுதி சிங்கள மக்கள் மனங்கொதிற்று வேதனையடைந்து காணப்பட்டார்களோ; அதே பேரன்றே செம்மணி புதைகுழி விவகாரத்தால் தமிழ் மக்கள் மனம் தளர்ந்து ஏங்கிப்போயுள்ளனர்.

#### கண்துடைப்பா?

இலங்கை தொடர்பாக சர்வதேச ரீதியில் தோன்றியிருக்கும் சந்தேகங்களையும், களங்கத்தையும் மேலும் உறுதிபடுத்தும் வகையிலேயே செம்மணி விவகாரம் அமைந்துள்ளதாகையினால், அதன் உண்மை நிலையைக் கண்டு அறியவேண்டிய அவசியமும் இன்று எழுந்துள்ளது.

மேலும் காணாமல் போனோர் குறித்தும், அடாவடித்தனமான கைதுகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் அரசு தொடர்ந்து மௌனம் சாதிப்பது ஆரோக்கியமானதல்ல. கடந்த ஆட்சியை மக்கள் வெறுத்தொதுக்கியதற்கும், ஆட்சி மாற்றத்தை விரைந்து எதிர்பார்த்தமைக்கு இதுவே மூல காரணமாகும்.

இதனிடையே வடபகுதியில் காணாமல் போனோர் தொடர்பான கண்டுபிடிப்புக்களை கேற்கொள்ளும் விவகாரம் வெறும் 'கண் துடைப்பு' நடவடிக்கை என தமிழ் மக்கள் மனம் நோகின்றனர். அதே நிலைமை 'செம்மணி' புதைகுழிகளுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதே தமிழ் மக்களின் விருப்பமாகும்.

## வியாபாரமும் நாணயமும்

அமெரிக்காவில் 'வயாகரா' மாத்திரை சாப்பிட்டு, அதனால் மாரடைப்பு ஏற்பட்ட ஒருவர் 'வயாகரா' தயாரிப்பாளர்களிடம் ரூ.3 கோடி நட்ட ஈடு. கேட்டு வழக்குத் தொடுத்து இருக்கிறார்.

அமெரிக்காவில் 'சிலிகான்' மார்பு வைத்துக் கொண்ட பெண்கள் அதனால் புற்று நோய் ஏற்பட்டு 'சிலிகான்' தயாரிப்பாளர்கள் மீது ரூ.150 கோடி நட்ட ஈடு கேட்டு வழக்குப் போட்டிருக்கிறார்கள்

சிகரெட்டுக் குடித்ததால் புற்று நோய் வந்தது என்று இன்னொரு வழக்கு, ரூ. 100 கோடி நட்ட ஈடு கேட்கிறார்கள் இதுவும் அமெரிக்காவில் நடக்கும் வழக்குத்தான்.

அங்கேயெல்லாம் 10 கோடி, 20 கோடி, 100 கோடி, என்பது சர்வ சாதாரணம். நாம் அப்படிப் போகாவிட்டாலும் பத்து இலட்சம், இருபது இலட்சம் என்று வியாபாரிகளிடம் நட்ட ஈடு கேட்கலாம் அல்லவா? அப்போது தான் வியாபாரிகள் நேர்மையாக இருப்பார்கள்.

— அ. இரபியுத்தீன்

படிப்பகம்

www.padippakam.com



### மூதூர் வைத்தியசாலையில்

# மாவட்ட வைத்திய அதிகாரி நியமனத்தில் தாமதம்; மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு

மூதூர் மாவட்ட வைத்திய சாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள நீண்ட தாமதமும் மருந்து தட்டுப்பாடும் தொடர்வதனால் சுமார் 75 ஆயிரம் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

மூதூர் வைத்தியசாலையில் கடமையாற்றிய மாவட்ட வைத்திய அதிகாரிகள் இருவர் நான்கு மாதங்களுக்கு முன்னர் மாற்றலாகிச் சென்றதை அடுத்து மூதூர் பிரதேசத்திற்கு கடமையாற்றுவதற்கு எம். பி. பி எஸ். வைத்தியர்கள் எவரும் முன்வருவதாக இல்லை என்றும் விரைவில் ஒருவரையாவது நியமிப்பதற்கு முயற்சி செய்து வருகின்றோம் என்றும்மாவட்ட சுகாதாரத் திணைக்கள அதிகாரியான டாக்டர் குணாளன் தெரிவித்தார்.

தற்போது இவ்வைத்திய சாலையில் தற்காலிக மாவட்ட வைத்திய அதிகாரி பொறுப்பிலும் இருந்துவரும் பல் வைத்திய அதிகாரி எஸ். எல். பலாகுதீன் வைத்தியமனை பற்றிக் கூறும் போது,

## மருந்து தட்டுப்பாடு

இங்கு உதவி மருத்துவ அதிகாரிகள் இருவரும் நானும் கடமையில் இருந்து வருகின்றோம். இவர்களில் ஒருவர் பெண் உதவி மருத்துவ அதிகாரியாவார். இவர்களோடு தற்காலிகமாக தோப்பூர் வைத்திய மனையில் பணியாற்றி வந்த மருத்துவ அதிகாரி சௌந்தரராஜாவும் கடமையாற்றுகின்றார் என்றார்.

பொதுமக்கள் தொடர்ந்தும் வெளிக்கடைகளில் மருந்துகள் வாங்கும் நிலை குறித்து பலாகுதீனிடம் கேட்டபோது, எமது வைத்தியசாலைக்கு ஒரு வருடத்தில் 4 கட்டமாக மருந்துகள் அனுப்பப்படுகின்றன. ஆனால் இவை சீரான முறையில் உரிய நேரத்தில் அனுப்பப்படுவதில்லை. சில வேளைகளில் இவை யாவும் வருட இறுதியில் அல்லது நடுப்பகுதியில் மொத்தமாகவும் வழங்கப்படும் சந்தர்ப்பங்களே அதிகம்.

## வெளிக்கொள்வனவு

இத்தகைய சூழ்நிலையில் வருடத்தின் ஆரம்ப காலங்களில் மருந்துகள் தட்டுப்பாடு நிலவுகின்றது.

அதுமட்டுமன்றி தற்போது இங்குள்ள பல வைத்தியமனைகள் பூட்டப்பட்ட நிலையில் இருக்கின்றன. அப்பகுதி மக்களும் இங்கு வருவதனால் தற்போதைய மருந்துகள் போதாது உள்ளன. அத்தோடு இரத்தப் பரிசோதனை மருந்துகள் நீண்டகாலமாக இல்லாமலே இருக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் மருந்துகள்வெளியில் கொள்வனவு செய்யவேண்டியது தவிர்க்கமுடியாமல் உள்ளது என விபரித்தார்.

# மகனை இழந்து வாடும் ஜேசுரட்ணத்திற்கு 'ஈழசுதந்திரன்' அனுதாபம்

'முகத்தார்' ஜேசுரட்ணம் எமது ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் முன்னாள் செயல்திட்ட ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவர். இலங்கை வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பல அரிய நாடகங்களைத் தந்து நட்சத்திரமாக மின்னியவர் என்பதோடு, இலங்கையில் தயாரான தமிழ்த் திரைப்படத்திலும் ஒளி சிந்திய தாரகையாவார்.

அவருடைய அன்பு மகனும் பிரான்சில் வாழ்ந்தவருமான திரு மகராஜன் அவர்கள் 7-7-98 அன்று காலமானார் என்ற செய்தி கேட்டுத் துடித்துப் போனோம். 20-8-1964ல் பிறந்தவரான அவர், முப்பதாவது வயதிலேயே அகால மரணமடைந்தது தாங்க முடியாத இழப்பாகும்.

அந்த இழப்பால் வாடும் முகத்தார் ஜேசுரட்ணம் அவர்களுக்கும், அன்னாரது குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர் ஈழசுதந்திரன்

# எங்கள் மகராஜன்!

(இரங்கல் கவிதை)



செந்தமிழின் அழகுபோல் சிரித்தமுகம்—பொதுச்
சேவையெனும் கடமை கொண்ட உயர்ந்த குணம்—எம்
சிந்தையெல்லாம் நிறைந்திருந்த மனிதனாய் நீ
சிறப்பாக வாழ்ந்தவனே! இறப்பால் எமை, ஏன் பிரிந்தாய்..?
வந்தாரை வரவேற்பாய், பொதுப் பணிக்காய் உனைக்
கொடுப்பாய், இன்று
வெந்துயரில் எமையெல்லாம் வேகவிட்டு எங்கு சென்றாய்?!
உன் எண்ணத்தால் உருகியழும் அன்னைதந்தை கண்ணீரும்
தம் உள்ளத்தால் மனையாளும் உதிரமான பிஞ்சொன்றும்
கண்ணான சகோதரனை பாதிவழியில் பறிகொடுத்துப்
பரிதவித்துக்
கண்ணீரில் கரைந்துருகும் உடன் பிறப்புக்களும், உறவுகளும்
—இந்த
மண்ணிலே உன்னோடு வாழ்ந்து நின்ற நண்பர்களும்
அயலாரும்
வஞ்சமிலா உன் முகத்தை மீண்டும் மீண்டும் காணவென
மறுபடியும் மறுபடியும் நினைந்து நினைந்து வாடுகின்றார்—
எங்கே?
எம் 'மகராஜன்', 'மகராஜன்' என ஏங்கிட ஏன் வைத்தாய்?
விந்தை இது விந்தை! விந்தையிலும் விந்தை!! இறைவனின்
திருவிந்தை
தந்தையே காலனை, பலமுறை விரட்டியுள்ளான்—
உனக்கவன்.
தந்த வாழ்வு, பாதிவரை தானோ, மகனே மகராஜ்! எம்
நெஞ்சை விட்டகலாத நேசத்தின் இருப்பிடமே,—எம்
நினைவுகளில் மலராகி, மணம் பரப்பும் பூச்சரமே,—
என்றென்றும்
இரங்குகின்றோம் இறைவனிடம்! இரைஞ்சுகின்றோம்
அவனிடமே!!...
எங்கள் மகராஜனுக்கு, சாந்தியைக் கொடுத்துவிடு!
மீண்டும் மகராஜனை, மண்ணிலே பிறக்கவிடு!!

முகத்தார் ஜேசுரட்ணம்
பிரான்சு

# ஈஸ்வரன் தந்தையானார்

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் தன்னார்வத் தொண்டர்களில் ஒருவரும், திருச்சி மண்டலத்தில் அகதிகள் நலப்பணி ஆற்றி வருபவருமான திரு. இரா. ஈஸ்வரன் அவர்களின் துணைவி 11-8-98 அன்று ஆண் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார்.

தந்தை ஈஸ்வரனுக்கும், தாய் மல்லிகாவிற்கும், அவர்களின் அன்பு மழலைக்கும் நம் இனிய நல்வாழ்த்துக்கள்!

ஈழசுதந்திரன்




நா.ம. நடராசன்-தாம்பரம்

கே: சந்திரிகாவை விட்டால், தமிழர் பிரச்சினையில் இந்த அளவுக்குக் கூட கரிசனை காட்ட வேறு சிங்களத் தலைவர் ஒருவர் கூடக் கிடையாது என்கிறார்களே?

ப: முன்பு டி. எஸ். சேனநாயகாவை, பண்டாரநாயகாவை, ஜெயவர்த்தனாவைப் பற்றிக் கூட அப்படித்தான் கதைத்தனர். ஆனால் அவர்களால் தமிழ் மக்களுக்கு விளைந்த நன்மை என்ன? பிரச்சினை யாரோ ஒரு சிங்களத் தலைவரின் கரிசனையில் தங்கியிருக்கும் வரை தமிழர்களுக்கு விடிவில்லை.

வே. பிரியந்தன்-மதுரை-9.

கே: ஒன்பது கோடித் தமிழர்கள் உலகில் இருந்தும் ஒரு கோடிச் சிங்களவரிடம் எதையும் சாதிக்க முடியவில்லையே?

ப: ஓரிரு மரங்கள் ஒன்றாக நின்றாலும் அது தோப்புத்தான். ஒரு நூறு மரங்கள் இருப்பினும் சிதறிக்கிடந்தால் அவை தனி மரங்களே. ஒன்று பட்டு நிற்பவர்கள் சாதிக்கிறார்கள். துண்டுபட்டுக் கிடப்பவர்கள் சேதிக்கப்படுகிறார்கள்.

கே.எஸ்.ராம்பாபு-செங்கல்பட்டு

கே: ஜெயவர்த்தனாவுக்கு ஒரு ஹமீது! சந்திரிகாவுக்கு ஒரு கதிர்காமர்! விளக்குவீரா?

ப: சிங்கள சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சராக இருந்தாலும் ஹமீது இலங்கை வாழ் முஸ்லிம்களின் தனி நலனில் தனிக்கவனம் செலுத்தினார். கதிர்காமரோ, சிங்களருக்கும் மிஞ்சிய சிங்கள நலன் விரும்பியாக நடந்து கொண்டு, தமிழின நலன்களைக் காட்டிக் கொடுக்கிறார். இந்தியாவைத் கொண்டே ஈழத் தமிழரின் தனி நலனைக் குலைக்க சந்திரிகாவுக்கு வழியேற்படுத்திக் கொடுக்கிறார்.

ஆ. மணவாளன்-திருநின்றவூர்

கே: தமிழனைத் தமிழனே படுகொலைசெய்வது இலங்கையில் என்றுதான் நிற்கும்?

ப: தமிழனைத் தமிழனே காட்டிக் கொடுப்பது நிற்கும் போது!

ஆனால் ''தான் மட்டுமே தமிழன். தன்னை எதிர்ப்பவனெல்லாம் துரோகி'' என்று நினைக்கும் தமிழனுக்கு, கூட்டாளி கருத்து மாறுபடினும் காட்டிக் கொடுப்பவனாகவே தெரிவான்! தன் நிழலையே தனக்கு எதிரியாகக் கருதும் இந்தக் குணம் தமிழனிடமிருந்து மாற வேண்டும்.

மா. தீனதயாளன்-வண்டலூர்

கே: இந்தியத் தமிழனுக்கும் ஈழத் தமிழனுக்கும் என்ன வேறுபாடு?

ப: இடையில் கடல் இருப்பது ஒன்று தான்!

எம்.எம். வீராசாமி-காஞ்சிபுரம்

கே: சாதி மதம் இரண்டில் எது தமிழனை அதிகம் கெடுக்கிறது?

ப: சாதி எனும் வியாதி தான்!

எதிர்மனசிங்கம்-சென்னை-5

கே: ஈழப் போராட்டம் தொடங்கிய காலத்தில் கொழும்பில் இருக்கும் தமிழர்கள் வெறுப்போடு பார்க்கப் பட்டனர். அது உச்ச நிலையில் இருக்கும் இன்றோ, இலஞ்சம் கொடுத்துக் கொழும்பில் குடியேறுவது அதிகரிக்கக் காரணம் என்ன?

ப: கொழும்பில் இருந்தால் ஒரு பக்கம்தான் இடி. ஈழத்தில் இருந்தால் இரு பக்கமும் இடி என்கிற நிலைமை தான்!

வை.பா. குமார்-திருமழிசை

கே: ஈழக்கனவு பலிக்குமா?

ப: ஈழம் கனவு அல்ல, இயக்கம். அது வெற்றி பெறுவது வரலாற்றுக்கட்டாயம்.

# சமூகத் தொண்டர் 'மில்க் வைற்' கனகராசா காலமானார்

பிரபல தொழிலதிபரும், சூழல் பாதுகாப்புத்திட்ட முன்னோடியும், பிரபல சமூக சமய சேவையாளரும், சிவநெறிப் புரவலருமான மில்க்வைற் கனகராசா ஐயா, தனது 72ஆவது வயதில் யாழ் போதனா வைத்தியசாலையில் காலமானார்.

தொழில் அதிபராக மட்டும் நின்றுவிடாமல் சூழல் பாதுகாப்புக்கான திட்டங்களைமுன்னின்று நடத்தியவர் யாழ் குடாநாட்டில் மட்டுமன்றி கிளிநொச்சிப் பகுதியிலும் பனை மரங்களை நட்டு அவற்றை வளர்த்ததோடு, ஏனைய மரங்களையும் நட்டு வடக்கில் சூழல் பாதுகாப்புக்கு பெரும் தொண்டாற்றியவர்.

அண்மைக்காலமாக நோய் வாய்ப்பட்டு கொழும்பில் சிகிச்சை பெற்று வந்த இவர், பின்னர் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும்போது மரணமானார்.

இவரது இறுதிச்சடங்குகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவரது மறைவு குறித்து பனை அபிவிருத்திச் சபை ஆழ்ந்த அஞ்சலியை தெரிவித்துள்ளது.

www.padippakam.com



# இருண்ட ஜூலை! இன்னமும் விடியவில்லை!!

**தொகுப்பு: க. இரத்தினராசசிங்கம்**

ஜூலை மாதம் என்பது இலங்கையைப் பொறுத்த வரையில் அதுவும் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் கறுப்பு ஜூலையாகவே கருதப்பட்டு வருகிறது. அதுபோல் 1998 ஜூலை மாதத்தில் என்ன நடக்குமோ என்று பயந்து கொண்டிருந்த வேளையில் நடக்கக் கூடாதது நடந்து முடிந்துவிட்டது.

ஆம், ஜூலை 25ந் திகதி சனிக்கிழமை இந்தியக் கடல் பகுதி விழுங்கிக் கொண்ட ஈழத் தமிழர்கள் தான் கறுப்பு ஜூலைக்குப் பலியாகி விட்டனர்.

ஏறக்குறைய 47 பேர் வரையில் இந்தச் சம்பவத்தில் இறந்து விட்டதாக நம்பப்படுகிறது. ஏழு பேர் வரையில் மட்டும் தப்பிக் கரை சேர்ந்துள்ளனர். ஈழத்தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வரத் தொடங்கிய காலத்தில் இருந்து இவ்வளவுபேர் ஒரே நேரத்தில் கடலில் சங்கமித்துப் போனது இதுவே முதல் தடவை என்றும் கூறப்படுகிறது.

நெஞ்சை உருக்கும் இச்சம்பவம் பற்றி அதில் இருந்து தப்பிய சிலர் இவ்வாறு கூறுகின்றனர்: படகு கவிழ்ந்து எனது மனைவியும் மகளும் உதவி கேட்டு அழும் சத்தத்தை என்னால் கேட்க முடிந்ததே தவிர என்னால் உதவ முடியவில்லை.

இந்த விபத்தில் இருந்து தப்பியவர்களில் ஒருவரான வேலாயுதத்தின் கூற்று இது.

மேலும் அவர் கூறியதாவது:

1984 ஆம் ஆண்டில் விமான ஷெல் தாக்குதல்களில் எனது ஒரு காலை இழந்து 7 மாத கர்ப்பிணியான தயாநிதி மற்றும் மூன்று வயதான எனது மகள் பானுமலர் ஆகிய இருவரையும் இந்தச் சம்பவத்தில் இழந்து விட்டேன். படகு கவிழ்ந்த போது எனது மனைவியும் மகளும் உதவி கேட்டு அழும் சத்தத்தை என்னால் கேட்க முடிந்தது. நான் உதவ முடியாதவனாக இருந்தேன். நீஞ்ச முயற்சித்தேன் அவர்கள் இருவரும் இறந்து விட்டனர் என நிச்சயமாகக் கூறுகிறேன்.

அவர்கள் இருவரும் மரணமடைந்த போது நான் ஏன் நீந்தி வந்தேன் எனக் குழம்புகிறேன். விபத்தின் அதிர்ச்சிலிருந்து மீளாத உயிர் தப்பிய 13 வயதான வசந்தன், 11 வயதான காண்டீபன் ஆகிய இரு சிறுவர்களும் எவ்வாறு உயிர் தப்பி நீந்திக் கரை சேர்ந்தனர் என்பதை விவரிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

சூரிய ஒளி வரும் வரை தான் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தேன். மீனவர்கள் விரைவாக வந்து என்னைக் காப்பாற்றினார்கள் எனக் காண்டீபன் தெரிவித்தார். படகில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. பாரிய அலை வீச்சினால் நீர் உட்புகுந்து படகு கவிழ்ந்தது என்று உயிர் தப்பிய புஷ்பராஜ் என்பவர் கூறினார்.

மற்றும் ஜூலை 25 நிகழ்வு தொடர்பாக தமிழக சஞ்சிகையான குமுதம் 13-8-98 இதழில் வெளியான அகதிகளின் கதை பின் வருமாறு:

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என ஐம்பத்திரண்டு பேர் என்பதால் படகில் கனம் அதிகம் தான். அதோடு அவர்களது ஒரே உடைமையான சின்னப் பெட்டிகள், மூட்டை முடிச்சுகள்.

படகு கரையை விட்டு நகர்ந்து 'ஸ்பீடு' கூடினதும் காற்றின் வேகமும் அதிகரித்தது.

ஈடுகொடுத்து படகை ஓட்ட முடியவில்லை.

காற்றின் வேகத்தில் படகு நடுக் கடலில் தத்தளித்த போது படகிலிருந்த குழந்தைகளிடம் ஒரே அழுகை; பயம், அலறல்கள்.

''இன்னும் ஐந்து கி.மீ. சென்றால் தனுஷ்கோடி தாண்டி தமிழக எல்லை வந்துவிடும்'' என்ற நம்பிக்கையோடு பலர் இருந்த போது, காற்றின் வேகம் அதிகரித்தது.

அதற்குள் படகின் இற்றுப் போன அடிப் பகுதியிலிருந்து தண்ணீர் படகிற்குள் வர ஆரம்பித்தது. இன்னும் அலறல் எல்லோரும் சேர்ந்து தண்ணீரை எடுத்து வெளியே ஊற்ற ஊற்றத் தத்தளிப்பு அதிகரித்தது. தண்ணீர் இன்னும் அதிகமாக உள்ளே வருகிறது. பீதியுடன் படகிலிருந்தவர்கள் படகுக்குள்ளேயே அங்கும் இங்கும் ஓடும் போது அலைச் சுழிப்பில் படகு ஆடிக் கவிழ்ந்தது.

மேல் மட்டத்தில் உப்புத் தண்ணீரைக் குடித்தபடி பெண்களும், குழந்தைகளும், வயதான சிலரும் கொஞ்சங் கொஞ்சமாக மூழ்கிக் கொண்டிருந்தார்கள். சிலர் சிரமத்துடன் நீச்சலடித்துக் கொண்டிருந்தார்கள்.

எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சம்பாதிச்சு படகுக் காரங்ககிட்டே எட்டாயிரம் ரூபாயை கொடுத்துதான் படகில் ஏறினோம். ஜெய்ராஜ் என்பவருக்கு சொந்தமான படகு அது, சுமாரான படகு. மாலை ஐந்தரை மணிக்கே கிளம்பிட்டோம். பெண்களும் குழந்தைகளுமாக ஒரே அடைசலா அடைஞ்சிருந்தாங்க, இடையில் இலங்கை நேவிகப்பல்கிராஸ் பண்ணியதால் அங்கங்கே படகை நிறுத்திக்கிட்டுத்தான் வந்தாங்க. ஒரே காத்து வேற, அதுக்கிடையில் படகின் கீழ்ப் பகுதியில் என்ன ஆச்சோ? தண்ணீர் வர ஆரம்பிச்சிடுச்சு. எல்லோரும் தண்ணியை இறைத்தும் முடியலைங்க, காத்து பலமாக அடிச்சதும் படகு கவிழ்ந்திருச்சு. ரொம்ப தூரம் கரையும் தெரியலை. நீந்திக்கிட்டே வந்தபோது மீனவங்களோட படகு வந்தது. சத்தம் போட்டுக் கூப்பிட்டோம். எங்க நாலு-பேரை படகில் ஏத்திக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தாங்க.'' சொல்லும் போதே குரல் நடுங்குகிறது. பத்தொன்பது வயதான ஜெனட்டருக்கு. இவரது அக்கா புனித ராணி கடலில் மூழ்கி இறந்ததைச் சொல்லும் போது இன்னும் கூடுதலான படபடப்பு அவரது முகத்தில். தப்பித்த அதிர்ச்சியில் மற்ற ஏழு பேருக்குப் பேச்சே வரவில்லை.

சமீபத்தில் அகதிகளை ஏற்றி வந்த சில நல்ல பிளாஸ்டிக் படகுகளை 'இந்தியன் நேவி' கைப்பற்றி வைத்துக் கொண்டதால் சில மோசமான படகுகளில் அகதிகளை ஏற்றி வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. முன்பு தமிழகத்திற்கு வர ரேட் பத்தாயிரம் ரூபாய் [இலங்கைப் பணத்தில்] இப்போது எட்டாயிரம் ரூபாய்!

''நாற்பத்தி நான்கு பேர்கள் வரை காணவில்லை. ஹெலிகாப்டர், இந்தியக் கடற்படைக் கப்பல் படகுகள் மூலம் தேடியும் அந்தப் படகு கவிழ்ந்த இடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இந்த அளவு எண்ணிக்கையில் இறந்திருப்பது இதுதான் முதல் முறை சிலர் நீந்தித் தப்பித்த தகவல் கிடைத்ததும் உடனே ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று முதலுதவி பண்ணியிருக்கிறோம். காற்று அடிக்கிற திசைப்படி பார்த்தால் படகிலிருந்து விழுந்து இறந்தவர்களின் உடல்கள் கச்சத் தீவு பகுதியிலோ, இலங்கை கடற்கரையிலோ ஒதுங்கலாம், இந்தியக் கடற்படை தேடுதல் பணியில் இருக்கிறது'' என்றார் ராமேஸ்வரம் சப் இன்ஸ்பெக்டரான சிவகுமார்.

இவர் சொன்னது மாதிரியே கச்சத் தீவு அருகே ஒரு சிறுவனின் பிணமும், புதுக்கோட்டைக் கடலோரத்தில் வயதான ஒரு பிணமும் ஒதுங்கியிருக்கின்றன.

அகதியாக ஒதுங்க நினைத்த மண்ணில் சடலமாக ஒதுங்க நேரிடுவது எத்தனைக் கொடுமை?

---

**மின் பற்றாக்குறையால் மாணவர்கள் கல்வி தடை படாமல் தொடர**

## அகதி முகாம்களுக்கு 28 சூரிய சக்தி விளக்குகள் ஈழஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் அன்பளிப்பு

தமிழ்நாட்டில் உள்ள மின் சார வசதி குறைந்த இலங்கை தமிழ் அகதி முகாம்களுக்கு ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் சூரிய சக்தியினால் இயங்கும் சூரிய மின் விளக்குகளை வழங்கியுள்ளது.

சென்னை மண்டலத்தைச் சேர்ந்த ஏழு முகாம்களுக்கும், திருச்சி மண்டலத்தைச்சேர்ந்த ஏழு முகாம்களுக்கும், ஈரோடு மண்டலத்தைச் சேர்ந்த ஏழு முகாம்களுக்கும், நெல்லை மண்டலத்தைச் சேர்ந்த ஏழு முகாம்களுக்கும் மொத்தம் 28 விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

முகாம்களில் மின்சார வசதி குறைவாக இருப்பதன் காரணமாக பல மாணவர்கள் மண்ணெண்ணை விளக்கின் துணை கொண்டே படித்து வருகின்றனர். முகாமில் குடும்ப அட்டைக்கு வழங்கப்படும் மண்ணெண்ணையின் அளவு போதாமையால் பல பெற்றோர் அதிகப்படியான விலை கொடுத்து வெளியே மண்ணெண்ணை கொள்முதல் செய்கின்றனர்.

இதற்கு வசதி இல்லாதவர்களது பிள்ளைகள் இரவில் படிக்க முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன் பரீட்சையிலும் தேறத் தவறி விடுகின்றனர். இதனைக் கருத்தில் எடுத்துக் கொண்ட ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகம் மாணவர்களது எதிர்காலம் இருண்டு விடக்கூடாது என்பதற்காகவும், கல்வி வாய்ப்பினை மாணவர்கள் இழந்து விடக் கூடாது என்பதற்காகவும் இத் திட்டத்தினை முகாம்களில் செயல்படுத்தியுள்ளது.

மேற்படி சூரிய சக்தியினால் இயங்கும் விளக்கினை முகாமில் வைத்துப் பராமரிக்கவும் பேணவும், முகாம் மக்களில் இரண்டு நபர்களுக்கு பயிற்சி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சூரிய விளக்கின் பயன்பாடு வெற்றியளிக்கும் பட்சத்தில் அதனைப் பராமரிக்கும் முறை நல்லபடியாக இருக்கும் நிலையிலும் இதுபோன்றவேறு பல முகாம்களுக்கும் இத்திட்டம் தொடரப்படலாம் எனக் கருதப்படுகிறது.

இதுபோல் பல முகாம்களில் புகையில்லா அடுப்புகளையும் ஏற்படுத்தி சுற்றுப்புறச் சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கும் கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சில முகாம்களில் புகையில்லா அடுப்பு நல்ல பலனைக் கொடுத்து வருகிறது.

---

## செய்திச்சாரம்

**21-7-1998**

இலங்கையில், தொடர் மழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் ஒருவர் பலியானார் 12,500 பேர் வீடிழந்தனர்.

(தினமணி)

இலங்கையில் வெளியாகும் வீரகேசரி தமிழ் பத்திரிகையின் வவுனியா நிருபர் பி. மாணிக்க வாசகம் நேற்று கைது செய்யப்பட்டார்.

(தினமணி)

ராமேஸ்வரம் அருகே தங்கச்சி மடத்தில் தங்கியிருந்த டெலோ இயக்க போராளி குயில்ராஜ் என்ற விச்சு (32) நேற்று கைதுசெய்யப்பட்டார்.

(தினமணி)

**22-7-1998**

இலங்கைப் போராளிகள் எவரும் தமிழ்நாட்டில் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருக்க மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருவதாக நேற்று மக்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அத்வானி தெரிவித்தார்.

(தினமணி, தினகரன், தினமலர்)

இலங்கை அரசு, விமானப் படைக்காக ரஷ்யாவிடமிருந்து அதிக சக்தி வாய்ந்த 3 ஹெலிகாப்டர்களை வாங்கியுள்ளது.

(கதிரவன்)

**23-7-1998**

இலங்கையில் தங்களுக்கு கிடைத்து வந்த நிவாரணப் பொருட்களை மீண்டும் அனுப்ப அரசை நிர்ப்பந்திக்குமாறு சர்வதேச அமைப்புகளுக்கு அங்கு அனுமதி பெற இலங்கையில் அகதிகளாக உள்ள தமிழர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(தினமணி)

புலிகளின் 3 படகுகள் கடற்படையினரிடம் சிக்காமல் இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்தன என்று இலங்கை இராணுவம் கொழும்பில் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவிக்கிறது.

(தினமணி)

www.padippakam.com



# கவிதைச் சரம்

## தண்ணீரிலா? கண்ணீரிலா?

(ஒரு அகதிக்குடியிருப்பின்
மழைக்காலத்து அவலம்)

எங்கள் வாழ்வைப்போல்
வானமும் இருண்டு கிடந்தது
மழையின் அறிகுறியாக
மின்னல் வந்து
மிரட்டிச் சென்றது
மழை வருமா?
மனம் பதைத்தது
மாலை விளையாட்டாக
மணல் வீடுகள் கட்டிய
மழலைச் செல்வங்கள்
மழையின் பயத்தில்
''மழையோ! வெயில்வா!''
என்று
மன்றாடத் தொடங்கின!
இவர்களை
இடிமிரட்டி
இருப்பிடம் விரட்டியது
தூறல் தொடங்கியது
நானும்
அரசாங்கம் அளித்த
தற்காலிக தாஜ்மஹாலுக்குள்
தஞ்சம் புகுந்தேன்
அந்த
குடைசாய்ந்த வீட்டுக்குள்
குடைபிடித்து அமர்ந்திருந்தனர்
என் குடும்பத்தினர்
ஓட்டைக் கூரை
ஒழுகியது
ஓரமாக
நானும் அவர்களுடன்
ஒண்டிக் கொண்டேன்
வீட்டுக்கு வெளியில்
ஈழத்தில் போராடும்
ராணுவமும் புலிகளும்போல்
காற்றும் மழையும்
கைகலப்பு நடத்தியது
வழக்கம்போல்
சேதம் எங்கள் வீடுகளுக்கு!
தரையில் ஒழுகிவிழும்
தண்ணீரைத் தடுக்க
தங்கை பாத்திரம் வைத்தாள்
பாத்திரத்தின் அடியில்
பாதை இருந்ததை த
பார்க்கவில்லை அவள்
பார்க்கும் முன்பே
மின்னல் போதுமென்று
மின்சாரம் நின்றுவிட்டது
இருட்டைக் களைவதற்கு
மெழுகுவர்த்தி பொருத்தினேன்
கண்சிமிட்டியதும்
எங்கள் நிலமைகண்டு
கண்ணீர் வடித்தது
தரையைப்பார்த்தேன்
தண்ணீர் ஓடியது.
அந்தக்
கண்ணீர் நேரத்திலும்
எனக்கு ஒரு
ஹைக்கூ கவிதைவந்தது
தலைப்பு;
பட்டிமன்றம்
எங்கள் வீடுகள் நனைந்தது
தண்ணீரிலா? அல்லது
எங்கள் கண்ணீரிலா?

(இது வாழவந்தான் கோட்டை
அகதிமுகாமின் உண்மை
நிலவரம்)

சி. சிவா
வாழவந்தான் கோட்டை

## வேற்றுமை எனும் விஷம்!

ஈழமே! நீ மலர்வதற்காக நாங்கள்

உனக்கு உரமாக அறப்போரையும் மறப்போரையும்
இட்டோமே! ஏன் நீ மலரவில்லை?

எம் இளைஞர்கள் தங்கள் உடல்களை
எருவாகவும், தங்கள் உயிர்களை
நீ சுவாசிக்கக் காற்றாகவும்
தந்தனரே! ஏன் நீ மலரவில்லை?

ஓ . நீ பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை
மலரும் குறிஞ்சிப்பூ என்றெண்ணி
குருதியை நீராக்கி, உணர்வுகளைச் சேறாக்கி
ஈந்தோமே! அப்போதும் ஏன்நீ மலரவில்லை?

பன்னிரு ஆண்டுகளல்ல பன்னிரு யுகங்களாயினும்
உன்வரவு எமக்கு உறாது என்பது
இப்போதுதான் எமக்குப் புரிகிறது
ஏனெனில்...

உனக்கு நாங்கள் உரமிடும்போதும்
நீர்பாய்ச்சும்போதும் சீர்செய்யும்போதும்
வேற்றுமையெனும் விஷத்தையும் அல்லவா
தூற்றிவிடுகிறோம்! களையென்று
ஒற்றுமையை அல்லவா பிடுங்கி விடுகிறோம்!

வி. ஜெகன்
இ.அ. முகாம், கொட்டப்பட்டு

## மாறியது நெஞ்சம்! மாற்றியது யாரோ?

ரத்தம் தோய்ந்த பெற்ற மண்ணில்-நம்
சித்தம் கெட்டுப் போனதில்லை
மொத்தமாகப் போனதிங்கே!-பண்பை
சத்தியமாய்க் காணவில்லை

சொத்து சுகம் மிகவே கொண்டு-அங்கு
சொந்த பந்தம் பலவும் கண்டு
இன்புற்றே வாழ்ந்த இனம்-இங்கு
துன்புற்றுப் போனதேனோ?

அன்பு இல்லை பண்பு இல்லை-எவரும்
அடுத்தவரை மதிப்பதில்லை
தொன்று தொட்ட தமிழர் குணம்-பிறர்க்குத்
துணை புரிய நினைக்குதில்லை

நல்லவரைக் காணவில்லை-இன்று
நல்லகுணம் எவர்க்குமில்லை
வல்லவராய் இருந்தவரோ-புதுப்
பொல்லாச் செயல் புரிகின்றார்

கல்வி கற்க விருப்பமில்லை-பெற்றோர்
கற்பிக்க முனைவதில்லை
கண்ட கண்ட உறவு கொண்டு-தான்
கொண்ட பெயர் இழக்கின்றார்

குண்டு விழும் மண்ணதிலே-இன்று
குறைகளது கொஞ்சம் தான்
கண்டு இதை உணர்ந்திடுவீர்-இல்லையேல்
கறைபடியும் வாழ்க்கை தான்

தஞ்சம் கொண்ட மண்ணினது-சில
தன்மையோடு வாழ வேண்டும்
தாய் மண்ணின் பெருமையோடும்-நம்
தற்பெருமை காக்க வேண்டும்

திருமலையூர் மனோ

(முகாம்களில்-வாழும் ஒரு சிலரிடம் காணும் ஒரு சில குறைகளையே கண்டு இதை எழுதுகின்றேன். ஒட்டுமொத்தத் தமிழனையும் குறிப்பிட்டு எழுதவில்லை)

## நினைத்தாலே தமிழ்நெஞ்சு துடிக்கின்றதே!...

காலம் கரைசேர்க்குமா
சோகக் கதை மாறுமா
ஈழத்தமிழா உன்வாழ்வே தினம் போராட்டமா?
செந்நீர்தானடா-கண்ணீர்தானடா

படிப்பகம்

தாய்ப்பசு இழந்த கன்றினைப்போலே
தாய்மடி தேடும் அழுகுரல் அங்கே
தீய்க்கிரையாகி எரிகின்ற வீட்டில்-உயிர்
கூக்குரல் கேட்டு ஓய்ந்திடும் அங்கே
நோய்க்கிரையாகி சாய்பவர் அங்கே-போர்
பேய்க்கிரையாகி மாய்பவர் அங்கே
தாய்மண்ணில் அங்கே விடிவுவராதா?-ஈழத்
தமிழர்கள் கண்ணில் ஒளி தெரியாதா?
நினைத்தாலே தமிழ் நெஞ்சம் துடிக்கின்றதே
ரத்த நாளங்கள் நெஞ்சுக்குள் வெடிக்கின்றதே

மழைவந்தபோது ஒதுங்கிடக்கூடு
தமிழனுக்கேது மரங்களே வீடு
பசிக்கும்போது யார்தருவாரோ
உண்பதற்கங்கே வயிற்றுக்குச் சோறு
கணவனை இழந்து விதவைகளானார்
கால்தனை இழந்து முடவர்களானார்
வாழ்வினை இழந்து அனாதைகளானார்
தாய்மடிமீதே அகதிகளானார்
நினைத்தாலே தமிழ்நெஞ்சம் துடிக்கின்றதே
ரத்த நாளங்கள் நெஞ்சுக்குள் வெடிக்கின்றதே

கவிஞர் சண்முகப்பிரியா
14, பர்மா காலனி, ஆழியாறு நகர்
பொள்ளாச்சி, கோவை-1.

## கறுப்பு ஜுலைகள் கழிவது எப்போது?

கண்கள் குளமாகுதே...
நெஞ்சம் தடுமாறுதே...
தாய்நாட்டின் நிகழ்வுகள் நாள்தோறும் கேட்கையிலே
எப்போது விடுதலை கிடைக்குமோ?
எந்தப்புல்லும் நம்பார்வையால் கருகியதில்லை
எந்தப் பிராணிகளும் நம்காலால் மிதிபட்டு மரணமடைந்ததில்லை

எந்தத் தளிர்களும் நம்கைவீச்சினால் ஒடிந்ததில்லை
மொட்டை மலருமுன்னே கசக்கியதில்லை
காய்கனியும் போதே வெம்பியதில்லை
பெண்மை இருக்கும்போதே விதவையானதில்லை
ஆண்மை உள்ளபோதே கைவிலங்கு போட்டதில்லை
நாய்க்கு கல்லெறிந்து அலறி ஓடியதைப் பார்த்ததில்லை
ஆடு அம்மா என்று கத்த குழை அள்ளிப் போடாமலில்லை

ஊரிலே பூகம்பமில்லை
எரிமலை பிளந்ததில்லை
காற்றும் ஒருகணம் வீசமறந்தது
கடலும் ஒருநொடி அமைதியாய் கிடந்தது
நாய்கள் ஊளையிட்டன
நம்பொழுது இப்படியா போனது!
நம் உயிர் எப்படியாய் இருந்தது?

நம்மை வேரறுக்க; வேரோடு மண்அறுக்கப்
புறப்பட்டது சிங்களப் பேரினவாதம்!

அதுதான் கறுப்பு ஜூலையின் ஆரம்பம்
அன்று முதல் இன்றுவரை தொடர்கிறது கறுப்பு ஜூலை.

ஒன்றுபடடா தமிழா! உறுதுயர்
ஓட எழுந்து நில்!!

வென்றுபுகழ் கொண்டு வாடா-விடுதலை
வேண்டும் தமிழனுக்கு!!!

பொழுது புலர்ந்திடுமா?
மண்வாசனை மீண்டும் வருமா?

இளம்பரிதி
இ.அ. முகாம், லேனாவிளக்கு

## நம்பிக்கை ஓசை!

கோயிலில் கேட்பது மணியோசை
கடலில் கேட்பது அலையோசை
வானத்தில் கேட்பது இடியோசை
என் இதயத்தில் கேட்பது
அன்பே உன் குரலோசை

பழகத் துடிக்கும் இளமை
பழகிய பின்னே இனிமை
பிரிவு என்பது கொடுமை
பிரிய வேண்டிய நிலைமை
ஆனால், என்றோ ஒருநாள்
கூடுவோம் என்ற நம்பிக்கை!

எஸ். கவிதா

www.padippakam.com



# அறிவியல் பகுதி

# சமுதாய அடிப்படையிலான மறுவாழ்வு...

இதுவரை கேள்வி-பதில் வழியாக சமுதாய அடிப்படையிலான அணுகுமுறை பற்றி விளக்கங்கள் தரப்பட்டது. தற்போது தென் அமெரிக்கா நாடுகளில் பணிபுரிந்த Dr. டேவிட் அவர்களின் மருத்துவக் குழுவினரின் கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன. இது குறித்து வாசகர்களின் சந்தேகங்கள் கேள்விகளை ஈழசுதந்திரனுக்கு அனுப்பிவைக்கவும்.

## ஊனங்களைத் தடுத்தல்-முன்பாதுகாப்பு
## Preventing Disabilities

மக்கள் வழக்கமாக ஊனங்களைப்பற்றி அக்கறை காட்டுவதில்லை. ஆனால் தமது அன்பிற்குரியவர்கள் பாதிப்புக்குள்ளாகும் போதுதான் அவர்களுக்கு உதவுவது முக்கியத்துவம் அடைகிறது. ஆகவே பாதிக்கப்பட்ட குழந்தைக்கு உதவியளிப்பதில் குடும்பத்தினருக்கு முதலில் வழிகாட்டிட வேண்டும். அதன் பின்னர் இவ்வாறான பாதிப்பு குடும்பத்திலும், சமூகத்திலும், ஏற்படாதவாறு முன்கூட்டியே தடுக்கும்வழிமுறைகளில் அவர்களது கவனத்தைத் திரும்பச் செய்யலாம்.

இதனைக் குறிப்பிடுவதற்கு முக்கிய காரணம் சுகாதாரத் துறை நிபுணர்கள் தடுப்பு முறைகளுக்கு (Prevention) முதலிடம் கொடுத்து சமூகத் திட்டங்களை உருவாக்கும் போது அவற்றில் அதிக அக்கறை காட்டுவதில்லை என்பதைக் காணக்கூடியதாக உள்ளது. எனினும் பெற்றோர்கள் பாதிப்படைந்த தமது குழந்தைகளுக்கு உதவி கோரி வரும்போது அவர்களது உடன்டித் தேவைகள் நிறைவு செய்யப்பட்டபின் அவர்களை குழுவாக ஒன்றிணைத்து, இவ்வாறான பாதிப்புகள் ஏற்படாமல் தடுப்பதில் ஈடுபடுத்த வேண்டும். ஊனங்களுக்கான காரணங்களைக் கண்டறிவதும் அவற்றைக் கட்டுபடுத்த உதவும். உலகில் பல பகுதிகளில் ஊனத்தை ஏற்படுத்தும் காரணங்கள் வறுமையுடன் தொடர்புள்ளவையாக இருக்கின்றன.

உதாரணங்கள்-கர்ப்ப காலத்தில் போதியஅளவு உணவு கிடைக்காத காரணத்தால் குறைமாதக் குழந்தைகள் அல்லது எடை குறைந்த குழந்தைகள் பிறக்கின்றன. இப்படிப்பட்ட குழந்தைகள் மூளை வாதத்தால் (Cerebral Palsy) அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன.

### நோய்த் தொற்று

குழந்தைகளிற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளில் மூளை வாதம் மிக முக்கியமானது. அத்துடன் கர்ப்பத்தின் ஆரம்ப காலத்தில் ஏற்படும் ஊட்டச் சத்துக்குறைவும் சில பிறவிக் குறைபாடுகள் உண்டாகக்

போதிய உணவு கிடைக்காத சிறுவர்களும் குழந்தைகளும் விரைவாகவும் கடுமையாகவும் நோய்த்தொற்றுக்கு ஆளாகலாம்.

உ-ம்:- உடல் பருத்த குழந்தைக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டாமல் அது லேசான பாதிப்பாக இருக்கலாம். அதே வேளை மெலிந்த ஊட்டச் சத்துக் குறைந்த குழந்தைக்கு ஏற்படும் வயிற்றோட்டத்தால், கடும் நீரிழப்பு, கடும் காய்ச்சல் மட்டுமன்றி சில வேளைகளில் மூளையும் சேதமடைந்து வலிப்பு அல்லது மூளைவாதம் போன்றவையும் உண்டாகலாம்.

சுகாதாரமற்ற, இடநெருக்கடியான சூழல், பற்றாக்குறையான உணவு ஆகியனவற்றால் காசம் போன்ற கடும் தொற்று நோய்கள், பெருமளவில் குழந்தைகளைப் பாதிக்க வழி ஏற்படுத்துகிறது. இந் நோய்களால் கடுமையான ஊனங்களும் ஏற்படலாம்.

சுகாதார சேவை மற்றும் மறுவாழ்வுச்சேவைகள் கிடைக்காத வறிய மக்களிடையில் அதிகளவில் ஊனம் ஏற்படுவதுடன், கடுமையான பின் விளைவுகளும் ஏற்படுகின்றன. அநேக சந்தர்ப்பங்களில் பின் விளைவாக ஏற்படும் பாதிப்புகளில் பலவற்றை உரிய பராமரிப்பு வழங்குவதன் மூலம் ஆரம்பத்திலேயே தடுத்து விடக்கூடியவை.

### வறுமையின் விளைவுகள்

வறுமையால் ஏற்படும் உடல் பாதிப்புகளை முழுமையாகத் தடுக்க எமது சமூக அமைப்பில் பெரும், மாறுதல் தேவை. நிலம், பொருளாதார வளங்கள்தகவல்கள், அதிகாரம் போன்றவை நியாயமான முறையில் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். இந்த மாற்றங்கள் ஏற்படுவதற்கு வறியமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமது உரிமைகளைக் கோரும் அமைப்பை கட்டியெழுப்பும் தைரியம் தேவை.

உடல் ஊனமுற்றவர்களும் அவர்களது குடும்பத்தினரும் முன்னின்று முயற்சிக்கலாம். நியாயமான சமுதாய அமைப்பு ஒன்றினால் மட்டுமே வறுமை

களைத் தடுப்பதற்கான துணிச்சலான நிரந்தரதீர்வைக் காண முடியும்.

வறுமை காரணமாக ஏற்படும் உடல் ஊனங்களை முற்றாகத் தடுப்பதில் சமுதாய அமைப்பு மாற்றத்தின் பங்கு இருந்தாலும் அந்த மாற்றங்கள் ஏற்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கும். எனினும் அதுவரை காத்திருக்காது குடும்ப மட்டத்திலும், சமுதாய மட்டத்திலும்; தேசிய மட்டத்திலும் உடனடி நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் சில உடல் ஊனங்களையாவது தடுத்துக் கொள்ளலாம். இதற்குச் சில உதாரணங்கள்-

### இளம்பிள்ளை வாதம்

இளம்பிள்ளைவாதம் -இந் நோயை தடுப்புமருந்தை உரிய முறையில் வழங்குவதன் மூலம் தடுக்கலாம். (எனினும் சொட்டு மருந்தைப் பயனுள்ள வகையில் வழங்குவது பல காரணிகளில் தங்கியுள்ளது.) தடுப்புமருந்து கிடைக்காத இடங்களிலும் தடுப்புமருந்து பயனற்றதரக உள்ளவிடங்களிலும் பின்வரும் வழிமுறைகளை கையாண்டு வாதம்(Paralysis) ஏற்படுவதைக் குறைக்கலாம்"

தாய்ப்பால் கொடுக்கும் காலத்தை முடிந்தளவு நீடித்தல்

தேவையற்ற ஊசிமருந்து ஏற்றுவதை தவிர்த்தல்.

### முள்ளந்தண்டுக் காயங்கள்

மூளைச்சேதமும், வலிப்பும் (Brain Damage and Saizures) கர்ப்ப காலத்திலும், பிரசவ நேரத்திலும் தனிக் கவனம் செலுத்துவதன் மூலமும், குழந்தைகளுக்கு தட்டம்மைத் தடுப்பு மருந்து (Measles Vaccine) வழங்குவதன் மூலமும் இவற்றைத் தவிர்க்க முடியும். இதில் கப்பிணிகளும், மருத்துவத் தாதியரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

பிறவிக் குறைப்பாடுகளும் (Congenital Defects) மூளை வளர்ச்சிக் குறைபாடுகளும் (Mentalretaradation) இவற்றைத் தடுக்க கர்ப்ப காலத்தில் பல மருந்துகளைப் பாவிப்பதை தவிர்த்து அதன்மூலம் மிஞ்சும் பணத்திற்கு ஊட்டச்சத்து உணவுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

முண்ணாண் காயங்கள்

## பிச்சை எடுப்பதும் ஒரு மனநோயே!

பல தரப்பட்டவர்கள், பல்வேறு காரணங்களுக்காக பிச்சை எடுக்கிறார்கள். என்றாலும், பிச்சை எடுப்பதற்கு நோய்தான் அடிப்படைக் காரணம். அது உடல் நோயாகவோ, மன நோயாகவோ இருக்கலாம். உடல் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உழைத்து வாழ இயலாமையால் பிச்சை எடுக்கிறார்கள் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. கண்பார்வை இழந்தவர்கள், முடமானவர்கள் எத்தனையோ பேர் மற்றவர்களைச் சாராமல் உழைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும் இது எப்படிச் சாத்தியம்? அவர்களுக்கு அங்கக் குறைபாடுகளே தவிர மனநோய் கிடையாது. அதனால் அவர்கள் எந்தத் துன்பத்திற்கும் ஆளாவதில்லை. தன்னம்பிக்கையுடன் வாழ்கிறார்கள். பிச்சை எடுக்க வேண்டிய நிலைஅவர்களுக்கு ஏற்படுவதில்லை.

நோயும், நோயால் ஏற்படும் துன்பமும்தான் பிச்சை எடுக்கக் காரணமென்றால் துன்பத்திற்கு என்ன காரணம்? ஆசையா? அறியாமையா? வறுமையா? எதுவுமில்லை. துன்பத்திற்கு காரணம் ஆரோக்கியமின்மையே.

உடலும், மனமும் ஆரோக்கியமாக இருந்தால் துன்பம் யாரிடமும் நெருங்காது: ஆசை, அறியாமை, வறுமை ஆரோக்கியமானவர்களிடம் தலைகாட்டாது.

சோம்பலே ஒரு நோய்தான். உழைத்து வாழ்வதற்காக படைக்கப்பட்ட கைகளையும், கால்களையும் மற்றவர்களிடம் ஏந்தி இரப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்வதேசோம்பலால்தானே.

சோம்பேறிகளிடம் உடல்நோயும், மனநோயும் குடி கொள்கிறது. அதனால் அவர்கள் பிச்சை எடுக்கும் நிலை ஏற்படுகிறது.

— தங்க. காமராஜ்

கள் மதுவருந்தவும், வீண் சண்டையிலும் செலவிடும் நேரத்தை சமூகப் பாதுகாப்புப் பணிகளிலும், கல்வியிலும் செலவிட்டால் முள்ளந்தண்டுக் காயங்களைப் பெருமளவு குறைக்கலாம்.

### தொழுநோய்

தொழுநோய் (Leprosy) இந்த நோய் பற்றிய மக்களின் பயத்தையும், இந்நோயாளரை வெறுத்து ஒதுக்குவதையும் இல்லாமல் செய்தால் தொழு நோயைத் தடுப்பதில் வெற்றி காண முடியும். அத்துடன் நோயாளிகள் ஒழுங்காக மருத்துவச்சிகிச்சைபெற்றால் அதன் பின் மற்றவர்களுக்கு நோயைப் பரப்ப மாட்டார்கள். ஆகவே நோயின் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து வீட்டில் சிகிச்சை பெற ஊக்குவித்து நோயாளிக்கு ஆதரவளிப்பதன் மூலம் நோய் பரவுவதை தடுக்கலாம்.

### பார்வைக் குறைபாடு

பார்வைக் குறைபாடு (Visual Defects சில நாடுகளிலுள்ள சிறுவர்களின் உணவில் போதியளவு விற்றமின்'ஏ' கிடைக்காத படியால் பார்வையிழப்பு உண்டாகின்றது. இதுவும் வறுமையுடன் தொடர்புள்ளதுதான் என்றாலும் தமது குழந்தைகளுக்கு கரும்பச்சைக் கீரைகளையும். மஞ்சள் பழங்களையும் சில காட்டுப்பழங்கள் இலைகள் போன்றவற்றை உண்ணக் கொடுப்பதன் மூலமாகப்பார்வையிழப்பைத் தடுக்கலாம் என்பது பலருக்கு தெரிவதில்லை.

சில குழந்தைகளுக்கு ஏற்படும் காது கேளாமை, மூளை வளர்ச்சிக் குறைபாடு ஆகிய

கலந்த கறியுப்பை கர்ப்பகாலத்தில் பயன்படுத்தலாம்.

உணவு, நீர், காற்று மற்றும் வேலைத்தலங்களில் கலந்து விடும் நஞ்சுகளால் [Pollution] ஏற்படும் ஊனம் அண்மைக்காலங்களில் உலகெங்கும் பரவலாக பாவிக்கப்படும் பூச்சிக் கொல்லிகள், களைக்கொல்லிகள் போன்ற வேதிப் பொருட்களால், கடும் சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. விவசாயியும், அவனது குடும்பத்தினரும், பூச்சி கொல்லிகளால் உண்டாகும் தீங்குகளை உணராமல் அல்லது உரிய முன்னெச்சரிக்கைகளைக் கடைப்பிடிக்காமல் பாவித்து வருகின்றனர். இதன் விளைவாகப்பலருக்கு, கைகால் செயலிழப்பு, பார்வையிழப்பு அல்லது வேறு வகையான பாதிப்புகள் [Disabilities]

[உம் - இதய நோய்கள், புற்றுநோய்கள், மூளை, சிறுநீரகம், ஈரல் பாதிப்புகள்] ஏற்படுகின்றன.

### கண்டிகோடு

கண்டிகோடு வியாதி (Kandigodu Disease) கர்நாடக மாநில சிக்மகளூர், சிமோகா மாவட்டங்களில் கடுமையான மூட்டுநோய் பரவலாக காணப்படுகின்றது. இவர்கள் அனைவரும் மலத்தியோன், அன்றின் போன்ற பூச்சி கொல்லிகள் தெளிக்கப்பட்ட வயல்களிலிருந்த நண்டுகள், மீன்கள் ஆகியவற்றைச் சாப்பிட்டவர்கள் ஆவார்கள். இந்த நோய் சிறுவர்களை முடமாக்கியது மட்டுமன்றி அவர்களின் வளர்ச்சியையும் பாதித்தது. அத்துடன் பல குழந்தைகள் பிறவிக் குறைபாடுகளுடன்

(10-ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com





## சந்தியில் சந்திக்கிறோம்

### பழியும் பலியும்

எதிர்ப்பார்ப்புகள் எல்லாம் விழலுக்கிறைத்த நீராய்ப் போய் விட்டதே என்ற ஆதங்கத்துடன் வந்தமர்ந்தார் சுப்பர்.

சோமர் : என்னண்ணை உங்களுக்குள்ளேயே கதைத்துக் கொண்டிருக்கிறியள். யார் உங்களை ஏமாத்தியது!

சுப்பர் ; என்னை ஆரும் ஏமாத்தேல்ல தம்பி, எங்களையல்லோ ஏமாத்திப் போட்டினம். ''சார்க்'' மாநாடு முடிந்த கதையைத்தான் சொல்லுறன்.

சோமர் : கொஞ்சம் விபரமாக சொல்லுங்கோவன்.

சுப்பர் : சார்க் மாநாடு அதுவும் பத்தாவது மாநாடு கொழும்புல நடக்கிறபோதே பல தமிழ்க் கட்சிகள் இந்தியப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பேயி அவாகளை சந்திக்க முற்பட்டவையாம். ஆனால் ஆளும் கட்சி தரப்பில அதற்கு அனுமதி கொடுக்கேல்லையாம். அதுமட்டுமல்ல உவையள் மேல நம்பிக்கை வைக்காத மக்கள் சரி இந்திய தரப்பிலாவது ஈழப்பிரச்சினை தீர்வதற்கு ஏதாவது பேச்சுக்கள் ஆரம்பிக்கப் படலாம் என ஆவலோடு எதிர்பார்த்திருந்திருப்பர். ஆனால் அதுபற்றி எதுவுமே பேசப்படாததுதான் ஆச்சரியமான விசயம் எல்லா அரசியல் கட்சிகளும் ஆட்சிக்கு முன் பேசப்படுவதுபோல் ஆட்சிக்குப் பின் நடந்து கொள்வதில்லை என்பதற்கு இது நல்ல உதாரணம் கண்டியோ!

சுப்பர் : அதுமட்டுமல்ல சார்க் மாநாடு நடந்ததும் போதும்; கொழும்பு மக்கள் பட்ட பாடும் போதுமாம். ஏன் எண்டு கேட்கிறியே. பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டன. இளைஞர்கள் இளைஞிகள் அதுவும் தமிழர்கள் வெளியே தலை காட்டவில்லையாம். இடக்கு முடக்காக வெளியில கண்டபடி திரிந்தவையும் இப்ப கம்பி எண்ணுவினமாம்.

சுப்பர் : அதுமட்டுமல்ல 1999ல் பெப்ரவரி மாதத்தில் இலங்கை உள்நாட்டுப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்கும் காலம் என உள்நாட்டு சாத்திரியார் ஒருவர் சாத்திரம் சொல்லியுள்ளார் மூன்றாந்தரப்பு நாடு ஒன்றின் அனுசரணையுடன் சமரச ஒப்பந்தம் ஒன்று பெப்ரவரி மாத நடுப் பகுதியில் செய்து கொள்ளப்படலாம் எனவும் அந்த சாத்திரியார் கூறியுள்ளார். எல்லாம் நல்லா நடக்கவேணும் எண்டு ஆண்டவனைத்தான் நாம் கேட்க முடியும். ஆள்பவர்களை கேட்க முடியுமா?

சோமர் : யாழ்ப்பாணத்தில் மிதி வெடிகளில் கால் இழப்போர் தொகை அதிகமாக இருக்கிறதாமே.

சுப்பர் ; ஓமடப்பா அதுவும் ஒரு பெரிய கதை. மிதி வெடிகளை எடுக்கிறேன் பார் என்று ஐ. நா. குழுவொன்று யாழ்ப்பாணம் சென்று அங்கு வேலைகளைத் தொடரமுடியாத துரதிருஷ்ட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனராம். உத்தேச மதிப்பீட்டின்படி இன்றுவரை குடாநாட்டில் 1800 பேர் வரையில் மிதி வெடிகளால் பாதிக்கப்பட்டுள்ளனராம். மற்றும் ஐ. நா. அபிவிருத்தித் திட்டப் பிரிவினர் தொலைத் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்த இலங்கை அரசு தடைவிதித்துள்ளதாம். அதுமட்டுமல்ல அவர்களுக்குரிய தேவையான உதவிகள் வழங்குவதிலும் அரசு மெத்தனப் போக்கை கடைப்பிடித்து வருகிறதாம். எனினும் மிதிவெடி தொடர்பான அச்சத்தை மக்கள் மத்தியில் யாழ்-பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை, ஜேர்மன் தொழில்நுட்பநிறுவனம், யுனிசெப் ஆகியவற்றுடன் இணைந்து கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. ஆனாலும் இப்போது மக்களுக்கு அறிவுறுத்தல் மட்டும்மே வழங்க முடியும் என்றும், என்னதான் முயற்சி எடுத்தாலும் குடாநாட்டில் இருந்து முழுமையாக மிதிவெடிகள் அகற்றப்படப் போவதில்லையாம். இன்னும் யார் யார் கால்களை இழக்கப் போகிறார்களோ!

சுப்பர் : மாங்குளத்தைப் பிடிக்கிறேன் பார் என முன்னேறிய இராணுவத்தினர் மாங்குளத்தில் இருந்து பத்துக் கட்டை தூரம் தள்ளி நிற்கினமாம். ஒரு இடத்தில் வாங்கின அடியில அதிகப்படியான படையினர் செத்துப் போகவே கையாலாகாத்தனமான படையினர் கிளிநொச்சிப் பகுதியில் உருத்திரபுரம் கிராம மக்கள் மீது குண்டு வீசித் தாக்குதல் நடத்தியுள்ளதில் 25க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளார்கள். இதுமட்டுமல்லாமல் பல பேர் காணாமலும் போயிருக்கிறார்களாம் பலி ஓரிடம். பழி இன்னுமொரு இடம்.

# நெல்லை மண்டலத்தில் நடைபெற்ற

# ஈ.ஏ.ம.க. தையல்கலைக் கலந்துரையாடல்

18-6-98ம் திகதி ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் சார்பில் நெல்லை மண்டல அலுவலகத்தில் சென்னை தலைமையிலிருந்துசெயலாளர் சூரியகுமாரி, திருமதி. அகிலா, செல்வி தேன்மொழி ஆகியோர் நெல்லை மண்டல தையற்கலை கலந்துரையாடலில் பங்குகொண்ட போது 41 பெண்கள் வருகை தந்திருந்தனர். இவர்களில் தையல் பயிற்சி பெற்று தற்போது தொழில் புரிவோரும், ஆரம்ப தையல் நிலையங்களில்தொழில் புரிவதற்கு, பயிற்சி நுட்பங்களை அறிந்து கொள்வதற்கும் ஆரம்பத் தையல்கள் தெரியாத நிலையில் ஆரம்பப் பயிற்சியை பெறுவதற்காகவும், இக்கலந்துரையாடலில் கலந்து கொள்வதாகத் தெரிவித்தனர்.

1. வெட்டித் தைக்கக் கூடிய நிலையில்-9 பேர்.

2. வெட்டிக் கொடுத்தால் தைக்கக் கூடியவர்கள்-5 பேர்.

3. ஓரளவு தையல்தெரிந்தவர்கள்-2 பேர்.

4. ஏனையோர்க்குதையல் அனுபவம் உள்ளது. மேலதிகப் பயிற்சி வழங்கப்படல் வேண்டும்.

இந்நிலை கலந்துரையாடலின் போது தெரிய வந்தது. சென்னை தையல் மையத்தில் தைக்கப்பட்ட ஆடைகள் பார்வைக்கு வைக்கப்பட்டன. பார்வையிட்டதன் போது பலரின் கருத்து, ஆடைகளை இவ்வளவு நேர்த்தியாகத் தைக்கும் அளவுக்குப் பயிற்சி போதாது, இதற்கான பயிற்சியைத்தந்தால் மேலும் வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்பதே. தையலின் தேர்ச்சியை அறியும் முகமாக இருவருக்கு நைற்றி தைப்பதற்குத் துணி வழங்கப் பட்டது.

### முகாம் செவலூர்

செவலூர் முகாமில்இருந்து வருகை தந்தோர் முகாமில்பலர் பயிற்சி வழங்கக் கூடிய ஆசிரியை முகாமில் இல்லை எனவும் தெரிவித்தனர். இதேநிலை சங்கரன் கோயில், குளத்து வாய்பட்டி முகாம்களில் இருப்பது அறிய முடிந்தது.

### தாளமுத்து நகர் முகாம்

தாளமுத்து நகர் முகாமில் இருந்து திருமதி மார்கிறேட் என்பவர் வந்திருந்தார். மண்டபம் முகாமில் தையல் பயிற்சி பெற்றதாகவும், தற்போதுதாளமுத்து நகர் முகாம் பெண்களுக்கு தையல் பயிற்சி வழங்கிடுவதாகவும் தெரிவித்தார். அவரிடத்தில் பயிற்சி பெற்ற ஒரு மாணவியின் கட்டிங் நோட்டு மற்றும் குறிப்புகள் அனைத்தையும் செயலாளர் பார்வையிட்டார். சிறப்பாக அமைந்திருந்தது. ஒரு முறை சென்னை ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் மையத்திற்கு வந்து செல்லக் கேட்டுக்கொண்டார்.

### மல்லரங்கிணறு முகாம்

மல்லாங்கிணறு முகாமில் ஆசிரியை-இவர் ஓர் விதவை) வந்திருந்தார். தையல் மூலமே வருவாயை ஈட்டுவதாகத் தெரிவித்ததுடன், ஆயத்த ஆடைகள் தைக்கும் நிலையங்களை உருவாக்கி, தமக்கும் வேலை வாய்ப்பு தந்திடுமாறு உதவி கோரினார். போகநல்லூர் முகாமிலிருந்து J.R.S ஆசிரியை சாந்தி வருகை தந்திருந்தார். இவர் ஆர்வமுள்ளவராகக்காணப்பட்டார்.

### கோபால சமுத்திரம் முகாம்

இங்குள்ள சிவகௌரி 1995இல் கழகத்தால் தையல் பயிற்சி பெற்றுள்ளார். தற்போது முகாமில் தையலைத் தொழிலாகச்செய்து வருவாயை ஈட்டி வருகின்றார். மேலும் கழகத்தால் மேலதிகத் தையல் பயிற்சி பெற விருப்பம் தெரிவித்தார்.

### பெருமாள்புரம் முகாம்

திருமதி சரசு, முகாமில் தையலை தொழிலாகச் செய்து வருகின்றார். முகாமில் தையல் பயிற்சி பெற்றவர்கள் அநேகமானோர் இருப்பதால் புதிய தையல் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்துதரும்படி கேட்டார். ஏற்கனவேநெல்லை மண்டலத்தில் ஊடாக தையல் இயந்திரம் ஒன்ற வழங்கியதாகவும்; அது பழையதாக காணப்படுவதால் சீராகத்தைக்கமுடியவில்லை என்றும் தெரிவித்தார். செயலாளர் இதுகுறித்து மண்டலப்பொறுப்பாளர் திரு. மகேஸ்வரனுடன் பேசியபின் மாவட்டத்தொண்டர் மூலம் புதிய தையல் இயந்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பதிலளித்தார்.

அதனைத் தொடர்ந்து முகாமில் இருக்கும் ஏனையப் பெண்களுக்கும் சிறுதொழிலான (1) மெழுகுவர்த்தி (2) ஊதுபத்தி தயாரிக்கும் தொழிலையும் கற்றுப்பயனடைந்திட ஆவன செய்யும்படி உதவி கேட்டார் சந்தைப்படுத்தும் இடங்களை அடையாளம் கண்டால் இது போன்ற திட்டங்களுக்குக் கழகம் உதவி செய்திடுமெனச் செயலாளர் பதில் கூறினார். (முகாமில் மாதர்சங்கம்உண்டு)

### வெமபக்கோட்டை முகாம்

தையல் பயிற்சி ஆரம்பித்திட உதவி கோரியுள்ளனர். ஆசிரியைகள் (1) செல்வி. டில்ருக், (2) திருமதி சாவித்தரி (மண்டபம் முகாமில் பயிற்சி பெற்றவர்). முகாமில் எந்த ஆசிரியையை நியமிப்பதுஎன்ற இடாப்பாடு இருப்பதால பயிற்சியை ஆரயபிக்கத் தாமதம் இருப்பதாக அறிய முடிகிறது இதனை மண்டலப பொறுப பாளரை நேரில சென்று விசாரித்துத் தீர்த்து வைக்குமாறு கூறப்பட்டது.

செபமாலை பாவா - இவர் ஒரு T.B நோயாளி, பழவிளை முகாமைச் சேர்ந்தவர். முகாமில் குழந்தைகள் காப்பகத் திட்டத்தில் சேர்த்திடலாம். 3 பிள்ளைகள் - 1 மகள் இலங்கையில், 1 மகள் கலியாணம் வயது மகள் கூலி வேலை செய்கிறார்.

திருமதி மி. சரோஜினி குள்ளூர்ச்சந்தை முகாமில் வைசிப்பவர். 6 பிள்ளைகள், 4 ஆண்கள், 2 பெண்கள், கணவர் ஆமி அடிபாட்டில் உயிரிழந்து விட்டார். 1 மகள் திண்டுக்கல்லில் பஞ்சம்பட்டி ஆச்சிரமத்தில் தங்கிப்படிப்பதாகத்தெரிவித்தார். மூத்தமகள் சுகயீனமில்லாதவர் எனவும் தெரிவித்தார். குடும்ப வறுமை காரணமாக உதவி கோரினார். தொடர்ந்து திருமதி. அகிலா கழகச்சேவைகள் மற்றும் சத்துமாத் திட்டத்தினைத் தெளிவாகக் கூறியதுடன், இதில் அடங்கியுள்ள சத்துக்கள் பற்றியும் இவ்வுணவை எவ்வாறு உட்கொள்ள வேண்டுமெனவும் இத்திட்டத்தில் பெண்களின் பங்களிப்புப்பற்றியும் கூறினார்.

செயலாளர் அவர்கள் பெண்கள் தகைமைப்படுத்தல் பற்றியும், முகாமில் மாதர்சங்கச்சேவைகள் பற்றியும் கூறியதுடன், தையல் கலையை மேம்படுத்துவதற்கு கழகம் நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், முகாமில் பெண்களும் ஒன்றிணைந்து ஏனையப்பெண்களை ஊக்குவித்து இத்திட்டத்தினை நல்ல முறையில பெற்றுப்பயனடைய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

வேலாயுதத்தின் நன்றியுரையுடன் கலந்துரையாடல் இனிதே நிறைவு பெற்றது,

தொகுப்பு - தேனா.

## திருக்கோயில் அகதி மக்களின் குறைபாடுகள்!

திருக்கோயில் பிரதேசத்தில் அகதிகளாக இருக்கும் 2704 பேர்களுக்கு கடந்த இரு மாதங்களாக உலர் உணவுகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அகதிகள் பலர் தற்போது பிச்சை எடுத்து சீவியம நடத்த தொடங்கியுள்னர்

பாதுகாப்புக்காரணங்களால் தமக்கு வேறு தொழில்கள் எதையும் செய்ய முடியாததினால் தாம் பட்டினிச் சாவை எதிர் நோக்கி யிருப்பதாகவும் அகதிகள் தெரிவிக்கின்றனர்.

திருக்கோயில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் எமக்கான உலர் உணவுகள் வழங்கப்பட்டு வந்தது. இரு மாதங்களாக அவை வழங்கப் படவில்லை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனதிற்கு கொண்டு வந்த போதிலும் இன்றுவரை எவ்வித பயனும் இல்லை.

எங்களுக்காக குரல் கொடுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட எங்களுக்கு உதவுவதற்கு முன் வருவதாக இல்லை எனவும் அகதிகள் தெரிவிக்

படிப்பகம்

www.padippakam.com



# ஈழத் தமிழர் வரலாறு

## (கி. பி. 1000 வரைக்கானது)

கலாநிதி சி. க. சிற்றம்பலம்
(வரலாற்றுத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

## 8. தமிழ்க் கல்வெட்டுகள்

ஈழத்தின் நாகரிக கர்த்தாக்கள் இன்றைய சிங்கள/தமிழ் மொழி பேசுவோரின் மூதாதையினரே என்பதைக் கடந்த இரு சகாப்தங்களாக நடைபெற்ற அகழ்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.96 பெருங் கற் கால கலாசாரத்தினைப் பேணிய இவர்கள் தென்னிந்தியாவிலிருந்தே ஈழத்தினை அடைந்தனர். தென்னிந்திய மொழிகளான தமிழ்,கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய இக்கலாசாரத்திலிருந்து துளிர்த்தது போன்றே ஈழத்துத் திராவிட மொழிகளான தமிழ், சிங்கள மொழியின் பழைய வடிவமாகிய எலுஆகியனவும் தளிர்த்தன.

பண்டு தொட்டே ஈழத்தில் தமிழ் வழக்கிலிருந்ததை இன்றும் யாழ் குடா நாட்டில் வழக்கிலிருக்கும், சங்க காலச் சொற்கள் மட்டுமின்றி, சங்கம் வளர்த்த மதுரைக்குச் சென்று தாம் இயற்றிய பாக்களை அரங்கேற்றிய ஈழத்துப் பூதந்தேவனாரின் பாடல்களும் எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய பாடல்கள் சங்க இலக்கியங்களில் பழையனவாகக் காணப்படும் அக்நானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய நூல்களில் காணப்படுகின்றன97. இக்கூற்றினை உறுதி செய்வதாகக் காணப்படுவது தான் ஈழத்துக் கிறிஸ்தாப்த காலத்திற்கு முந்திய பிராமிக் கல்வெட்டுகளிலும், பானைஓடுகளிலும் காணப்படும் பழைய திராவிட வரிவடிவங்களும், திராவிட இனக்குழுப் பெயர்களான ஆய், வேள், பரத போன்றனவும், விருதுப் பெயர்களான பருமக போன்றனவும் ஆகும்.

இவை யாவும் காலகதியில் கிறிஸ்தாப்தத்தின் ஆரம்பத்தில் பௌத்தத்தின் மொழியாகிய பாளி மொழியின் செல்வாக்கால் வழக்கிழந்தும். உருமாறியதையுமே இப்பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

எனினும் ஈழத்தில் சிங்கள மொழி இப்பிராமி வரிவடிவத்தில் இருந்து வள்ர்ச்சி பெற்றதைக் குறிக்கும் விதத்தில் சான்றுகள் காணப்படுவது போல் தமிழ்மொழியும் ஈழத்தில் வழக்கிலிருந்த திராவிட வரிவடிவத்தில் இருந்து பெற்ற வளர்ச்சியை எடுத்துக் காட்டும் கல்வெட்டுக்கள் இற்றைவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனினும் கி.பி. 9ம், 10ம் நூற்றாண்டுக்குரிய மூன்று தமிழ்க் கல்வெட்டுகள் அநுராதபுரத்திற் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவற்றுள்

நான்கு நாட்டார் கல்வெட்டாகும் 98. வெண்பா வடிவில் அமைந்துள்ள இதனை ஈழத்திற் காணப்படும் மிகப்பழைய தமிழ்க்கல்வெட்டாகக் கொள்ளப் படுவதால் ஈழத்தில் இக்காலத்திற்கு முன்னர் விருத்தியடைந்த இலக்கிய மரபை இது குறிக்கலாமெனவும் கொள்ளலாம்.

இக்கல்வெட்டை வெளியிட்டவர்கள் வர்த்தகக் குழுவினராகிய நான்குநாட்டார் ஆகும். இவர்கள் அநுராதபுரத்தில் சேனாவர்மன் காலத்தில் அமைத்த மாக்கோதைப் பள்ளி என்ற பௌத்தவிகாரை பற்றி இது கூறுகின்றது. மாக்கோதை இன்றைய கேரள மாநிலத்திலுள்ள இடமாகையால் இவ்வர்த்தகக் குழுவினர் அங்கிருந்தே தமது நடவடிக்கைகளை மேற்கொண்டனர் எனலாம்.

### அநுராதபுரக் கல்வெட்டு

இக்காலத்திற்குரிய இன்னுமிரு தமிழ்க் கல்வெட்டுக்கள் அநுராதபுரத்திலுள்ள இந்து அழிபாடுகள் மத்தியிலே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்கள் இன்னொரு வர்த்தக கணமாகிய குமார கணத்தாருக்குரியது99. இவற்றுள் முதலாவது இங்குள்ள ஆலயமொன்றுக்கு முப்பது ஈழக்காசை இவ்வர்த்தக கணத்தார் சிறீசங்கபோதி மாறயன் காலத்தில் அளித்ததைக் கூறுகின்றது சேக்கினான் சங்கன் என்ற வணிகனிடமிருந்து கடனாகப் பெற்ற இம்முப்பது காசும் இங்கு நித்திய பூசைக்கும் நந்தாவிளக்கெரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது.

இரண்டாவது கல்வெட்டும் மேற்கூறிய நோக்கிற்காகவே மேற்கூறிய தொகை இவ்வர்த்தக கணத்தால் மேற்குறிப்பிட்ட மன்னனின் ஏழாவது ஆட்சியாண்டின் அளிக்கப்பட்டதைக் கூறுகின்றது. தமிழ் மொழி பேசியோர் இக்காலத்து அரசியல், இராணுவநிருவாகத் துறைகளிற் பங்கு கொண்டிருந்ததை இக்காலச் சிங்களக் கல்வெட்டுகளிற் காணப்படும் மேகாப்பர், மேலாட்சி, பெரிநாட்டியம், பெரிநாட்டுவம், உல்பாடு கணக்கர், கொல்பாட்டி, மந்திராண்டி, பெரிலாகி போன்ற பதங்கள் எடுத்துக் காட்டுகின்றன.100

இவ்வாறே தமிழகப் படைவீரர் இராணுவத்துறையில் கொண்டிருந்த பங்கினைப் போரில் தமிழர் பயன்படுத்திய வாத்தியக் கருவிகளாகிய துடி, சொலி போன்றவை சிங்கள அரசில் செல்வாக்குப் பெற்றதற்கான சான்றுகளும் உணர்த்துகின்றன.

9ம் 10ம் நூற்றாண்டுகளில் தமிழகத்தோடு கொண்டிருந்த தொடர்பினால் சிங்கள அரசின் தலைநகரான அநுராதபுரத்திலும் பிறஇடங்களிலும் தமிழரின் எண்ணிக்கையும் செல்வாக்கும் அதிகரித்ததை இக்காலச் சிங்களக் கல்வெட்டுகளிற் காணப்படும் தெமென்கபல்ல, தெமளத்வலதெமின், தெமள்கம்பிம் போன்ற பதங்கள் எடுத்துக் காட்டுகின்றன. 101

இவற்றுள் முதலிரண்டும் தமிழருக்குரிய நிலங்களைக் குறிக்க, இறுதியான பதம் தமிழருக்குரிய கிராமத்தைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. தமிழருக்குரிய இத்தகைய, நிலங்கள் ஈழத்தின் வட-கிழக்குப் பகுதிகளிலும் காணப்பட்டதை இதே கல்வெட்டுகள் குறிப்பதும் அவதானிக்கத்தக்கது. நான்காவது காஸப்பன் காலத்தில் (கி.பி. 898-914) வடபகுதியில் காணப்பட்ட 'தெமென் கபல்ஸ்' தமிழருக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் பற்றி இம் மன்னனின் கல்வெட்டு எடுத்துக் காட்டுகிறது102.

இவ்வாறே மூன்றாவது உதயனின் கல்வெட்டு ஈழத்தில் கிழக்குப் பகுதியிலுள்ள பரிசாகுழிய என்ற இடத்திற் காணப்பட்ட தமிழருக்குரிய நிலங்கள் பற்றிக் கூறுகின்றது103. நான்காவது மகிந்தனின் (கி.பி. 956-972) கல்வெட்டிலும் கிழக்குப் பகுதியிற் காணப்பட்ட தமிழரின் நிலங்கள் பற்றிய குறிப்புளது.104 அத்துடன் இம்மன்னனின் அநுராதபுரக் கல்வெட்டிலும் நான்கு திசைகளிலும் காணப்பட்ட தமிழரின் நிலங்கள், கிராமங்கள் பற்றிய குறிப்புண்டு.105

தமிழர் இக்காலத்தில் ஈழத்தின் பல பகுதிகளிலும் வாழ்ந்ததையே சூளவம்சமும் உறுதிப்படுத்துவதும் நோக்கற்பாலது.106

அத்துடன் தமிழர் நலன்களைக் கவனிப்பதற்கும் சிங்கள் அரசில் அதிகாரிகள் காணப்பட்டதையே இக்காலக் கல்வெட்டுகளிற் காணப்படும் 'தெமள அதிகாரி' என்ற பதம் உணர்த்துகின்றது இத்தகைய அதிகாரி பற்றி முதல் முதலாக இரண்டாவது சேனனின் (கி.பி. 853-887) ஆட்சிக் காலத்தில் குறிப்புக் காணப்படுகின்றது. 107 இவ்வதிகாரியின் பெயர் மகாசத்தானா ஆகும். உதூர் பண்டிராட் என்ற பெயருள்ள இத்தகைய இன்னோர் அதிகாரி நான்காவது காஸப்பனின் (கி.பி. 898-914) காலத்திலும் செயற்பட்டான்.108

இக்காலத்தில் இனத்துவ

சிங்கள மக்களுக்கென தனியான வரிகள் அறவிடப்பட்டதையும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. தமிழர் மீது அறவிடப்பட்ட வரியையே 'தெமௌ குளி' என்ற பதம் எடுத்துக்காட்டுவதாகவும், இத்தகையவரி அறவிடப்பட்டதை தெமெனின் கெடிகய, தெமௌ கினிகம் போன்ற இடப்பெயர்களும் உறுதி செய்வதாகவும் கொள்ளப்படுகிறது.109 தமிழர் மீது வரி அறவிடப்பட்டது போன்று சிங்களவர் மீதும் அறவிடப்பட்ட வரியையே இக்கல்வெட்டுகளில் இப்பதத்துடன் காணப்படும் 'கெளே குளி' என்ற பதம் சுட்டி நிற்கின்றதாகவும் கொள்ளப்படுகின்றது.110

## 9. சமூகம்

இன்றைய சிங்கள-தமிழ் மொழி பேசுவோரின் மூதாதையினர் பெருங்கற்காலச் சமுதாயவழி வந்தோரே எனக் கண்டோம். இச்சமுதாயத்தில் விவசாயமே முன்னிலைப் படுத்தப்பட விவசாயிகள், விவசாயிகளல்லாத ஆனால் அவர்களின் வாழ்வோடு தொடர்புடைய பல்வேறு தொழில்களைச் செய்பவர்கள் என்ற கூறே தென்னிந்திய திராவிட சமுதாயத்தைப் போன்று ஈழத்திலும் இதன் ஆணிவேராக இருந்தது. இத்தகைய சமுதாய அமைப்பும் வடஇந்திய ஆரிய சமுதாய அமைப்பாகிய பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர் என்ற அமைப்பும் இருவேறுபட்ட சமுதாயத்தின் சமூக அமைப்புகளே.

தமிழகத்தில் வடஇந்திய ஆரியச் செல்வாக்கேற்பட தமிழகச் சமுதாய அமைப்பில் பிராமணரும் முக்கியம் பெறத் தொடங்கினர். அத்துடன் வடஇந்திய ஆரிய கலாசாரத்தின் செல்வாக்கினால் தாய்வழிச் சமுதாயப் பண்புகளும் மாற்றமடையத் தொடங்கினாலும் கூட அடிப்படையில் தாய்வழிச் சமுதாயப்பண்புகளுடன் இன்றும் விளங்குவது இதன் சிறப்பம்சமாகும்.

ஈழத்து நாகரிகமும் பெருங்கற்கால கலாசார வழி வந்ததால் இத்தகைய பண்புகளை ஈழத்துக் கலாசாரத்தில் எதிர்பார்ப்பது நியாயமானதே.

எனினும் தமிழகம் வடஇந்திய இந்து கலாசாரத்தின்செல்வாக்கினால் ஆண் வழிச் சமுதாய அம்சங்களைப் பற்றி நின்றது போல் ஈழத்திலும் வடஇந்தியாவிலிருந்து வந்த பௌத்த கலாசாரத்தின் செல்வாக்கினால் தாய்வழிச் சமுதாய அமைப்பின் மாற்றம் காணப்பட்டாலும் கூட பழைய அம்சங்கள் பல இந்த அமைப்பினை இன்றும் நினைவு கூர வைக்கின்றன.

ஈழத்துச் சமுதாய அமைப்பை ஆராய்ந்த அறிஞர்கள் இதற்கும் தென்னிந்தியச் சமுதாய அமைப்பிற்குமிடையே இழைவிட்டோடும் ஒற்றுமையைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை. தென்னிந்திய அமைப்புப் போன்று ஈழத்துச் சாதிஅமைப்பும் தொழில் வழி வந்த அமைப்பேயாகும்111. இத்தகைய அமைப்புக்கும் தமிழக அமைப்புக்கும் உள்ள தொடர்பு விஜயனின் ஐதீகத்தில் ஒருவாறு நினைவு கூரப்பட்டுள்ளது போலத் தெரிகிறது.

விஜயனின் பாண்டிய இளவரசி ஈழத்திற்கு வரும் போது விஜயனின் நண்பர்களுக்கு மனைவியர்களாகத் தோழியர்களைக் கூட்டி வந்தது மட்டுமன்றி பதினெண் வினைஞர் குழுவையும் அழைத்து வந்தது பற்றி மகாவம்சம் குறிப்பிடுகிறது.112 இவற்றைவிட சிங்கள அரசில் கடைப்பிடிக்கப்பட்ட பலநடைமுறைகளும், பண்டைச் சேர நாட்டு வழக்கங்களை நினைவூட்டுவனவாக அமைந்துள்ளன; இவற்றுள் ஒன்றுதான் வாரிசுரிமை பற்றியதாகும். சிங்கள அரசில் வாரிசுரிமை எப்போதும் தகப்பனுக்குப் பின்னர் மைந்தர்களின் மூத்தவனுக்குச் செல்வதே வழக்கம். மூத்தவனுக்குப் பின்னர் அவனின் மூத்த தம்பிக்கே செல்வது வழக்கம். இவ்வாறு சகோதரர்கள் ஆட்சி முடிவடைந்த பின்னர் தான் மூத்தவனின் பிள்ளைகள் அரசாட்சி உரிமையைப் பெறுவது வழக்கம்.

இத்தகைய வழக்கம் சேர நாட்டில் காணப்பட்டதொன்றாகும். 113 இத்தொடர்பினை அறியாதோர் இந்தியாவின் வடமேற்குப் பகுதியிற் காணப்பட்ட இவ்வழக்கத்தினை ஆரியர் அப்பகுதியில் இருந்து ஈழத்துக்குக் கொண்டு வந்தனர் எனக் குறிப்பிட்டுள்ளமை தவறாகும். 114.

சேரநாட்டில் 'உதி' என அழைக்கப்பட்ட வம்சத்தினர்

(18ம் பக்கம் பார்க்க)

"ஈழசுதந்திரன்"
மாத இதழ் சந்தா விபரம்
ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 30-00
வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10
அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6
ஈழசுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தா சேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளவும்.
நிர்வாகி
ஈழசுதந்திரன்
14, சேட் காலனி முதல் தெரு,
மூன்றாம் மாடி
எழும்பூர், சென்னை-8

www.padippakam.com



# அகதி முகாம்களில் வாழும் மக்களின் மனநலப் பிரச்சினைகள்

தொகுப்பு: இரா. மாணிக்கவாசகர்

## 4. சுகமடையாதோர்

மனச்சோர்வு மோசமாக இருந்தால் மின்னூட்டற் சிகிச்சையை (Electorconvulsice Therapy) சிபாரிசு செய்யலாம். அத்துடன் இதனை முதியோர் நல்லமுறையில் சகித்துக் கொள்வர். உண்மையில் சிலசான்றுகளின்படி மின்னூட்டச் சிகிச்சையினால் இளம் நோயாளர்களிலும் பார்க்க முதியோரே கூடிய பயனைப் பெறுவர்.

ஒரு இலேசான மயக்க ஊசி ஏற்றப்படும். அத்துடன் அந்த நபர் நித்திரையில் இருக்கும் போது அவருக்கு தசை நார் இளகும் மருந்தும் தரப்படும். ஒரு வினாடிக்கு குறைந்த நேரத்திற்கு மின்சாரம் அவரின் மூளைக்குச்செல்லும் வகையில் ஏற்றப்படும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மின்னூட்டச் சிகிச்சை கட்டாயமாக மருத்துவரின் மேற்பார்வையுடன் தான் வழங்கப்படும். இவையெல்லாவற்றுக்கும் 15 நிமிடங்கள் மாத்திரம் எடுக்கும். அதன் பின்னர் நீங்கள் சாதாரணமாக நித்திரை கொண்டது போலவே இருக்கும். பின்பு ஒரு இலேசான குழம்பிய நிலை அல்லது தலையிடி இருக்கலாம். ஆனால் இது விரைவாகப் போய்விடும்.

மின்னூட்டச் சிகிச்சை எந்தவிதத்திலும் மூளையைப் பாதிக்குமென எந்தவொரு ஆதாரங்களும் இல்லை. மின்னூட்டச்சிகிச்சை பற்றிப் பெருந்தொகையான வதந்திகள் எழுப்பப்பட்டுள்ளன. இதுவே கடுமையான மனச்சோர்வுக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடிய சிகிச்சையாகும். இச்சிகிச்சையை எடுத்த பெரும்பான்மையினர் சாட்சிகளாக உள்ளனர்.

### சுகமாக இருத்தல்

மனச்சோர்விற்கான மாத்திரைகள் எடுத்தலை உள்ளது மருத்துவரின் ஆலோசனைப் படியின்றி நிறுத்தக்கூடாது என்பது முக்கியமானதொன்றாகும். இதற்கு காரணம் என்னவெனின், உங்களுக்கு உடல்நிலை நன்றாக உள்ளதென நீங்கள் கருதினாலும் கூட சடுதியாக மருந்து எடுப்பதை நிறுத்தினால் திரும்பவும் நீங்கள் நோய்வாய்ப்பட வாய்ப்பு உண்டு. சில (Tranquillisers) கட்டுப்படுத்தும் மருந்துகளைப் போலன்றி மன்ச்சோர்வு மாத்திரைகள் பழக்கமாகிவிடும் என்றோ, அல்லது அதற்கு நீங்கள் அடிமையாகி விடுவோமென்றோ எண்ணக்கூடாது.

உங்களது உடல் ஆரோக்கியம் நன்றாக இருந்த போதும் உங்களுக்குத் தெளிவாகக் காணக்கூடிய ஒரு தலை கீழான மாற்றம் மனச்சோர்விற்கு வழிகோலும். நீங்கள் அநேகமாக 6 முதல் 12 மாதங்களுக்கு மாத்திரம் மருந்து மாத்திரைகளில் தங்கியிருக்க சிபாரிசு செய்வார். Lithium என்ற இந்த மருந்து உங்களுக்கு ஏற்கெனவே தரப்பட்டு சுகமாகி இருக்கலாம். இது பல ஆண்டுகளாகத் தாக்கத்தைத் தடுக்கும் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டதாகும். இது மிகவும் சக்தி வாய்ந்ததாகும். ஆனால் ஒவ்வொரு மூன்று மாதம் அல்லது இது போன்ற காலப்பகுதிகளுக்கு மிகவும் எளிய இரத்தப் பரிசோதனை தேவையானதாகும்.

இங்கே சில ''செய்ய வேண்டியவைகளும்'' ''செய்யக் கூடாதவைகளும்'' வருமாறு:

### உங்களுக்கு உதவுதல்

உணவு உண்ணலைச் சரியாகச் செய்ய முயற்சிக்கவும். மனச்சோர்வு உள்ள ஆட்கள் எப்போதும் நிறை குறைந்து போவர். அத்துடன் நன்றாக இல்லாத உணவு உங்களுக்குத் தேவையான கனிப்பொருட்களையும், உயிர்ச்சத்துக்களையும் குறைத்துவிடும். முதியோரின் உடம்பு இளைஞர்களைப் போன்று ஈடுசெய்யக் கூடியதொன்றன்று.

உங்கள் உணர்வுகளை உங்களுக்குள் அடக்கி வைத்திருக்க வேண்டாம். இது உங்கள் துக்கப்படுதலைக் கூட்டி விடுவதுடன் மீண்டும் மீண்டும் துக்கப்படவும் அடிக்கடி துக்கப்படவும் ஏதுவாகும். மற்றவர்களுடன் பேசுதல் உங்களுக்கு உதவும்.

உங்கள் துன்பங்களை மறக்க மது குடிப்பதில் உங்களை அமிழ்த்த வேண்டாம். மது உண்மையில் மனச்சோர்வை மோசமாக்கும். அத்துடன் நீங்கள் எடுக்கும் மாத்திரைகளின் செயற்பாட்டிற்கு எதிர் விளைவைக் கொடுக்கும்.

சரியாக நித்திரை கொள்ளவில்லை எனில் காரணமற்று குழம்ப வேண்டாம் இது மனச்சோர்வில் ஏற்படுதல் சகஜமான நிலையாகும். சுகம் வரும்போது இது தானாக நீங்கி விடும்.

மனச்சோர்வு முதுமையையோ அன்றேல் மனக்கலக்கத்தையோ ஏற்படுத்தும் என எண்ண வேண்டாம். அது அப்படி அல்ல.

### உறவினர்களும் நண்பர்களும்

ஒரு முதியவருக்கு மனச்சோர்வு வருதலை ஒரு நண்பரோ அல்லது உறவினரோ அவதானிக்கலாம். இலேசாக உதவிகளை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் ஊக்குவியுங்கள். மனச்சோர்வு சாதாரணமானது என விளக்குங்கள்- அத்துடன் உதவியினால் பெருந்தொகையினருக்கு நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது மனநோயின் ஒரு வகை அல்லவென நீங்கள் தெளிவடையுங்கள். அல்லது மனநோய் நிபுணரைப்பார்த்தல் குடும்பத்தின் மீது அவப்பெயரை ஏற்படுத்திவிடும் என எண்ணாதீர்கள் மனச்சோர்வு உள்ள முதியோர்கள் சுலபமாகக் களைத்து விடுவர் என்பதை ஏற்றுக்கொள்ளவும். உங்களது உணர்வினை நீங்கள் அங்கே இருப்பதனை எடுத்துக்காட்டி விடுதலும் அல்லது சிலவற்றினைச்செயல் ரீதியாகச்செய்து காட்டுவதன் மூலமும் முடியும்.

வயது முதிர்ந்த மனச்சோர்வு உள்ளவர்கள் எப்போதும் உத்தரவாதத்தைக் கேட்டவண்ணம் இருப்பர். அல்லது உடல்ரீதியாகத் தங்களுக்கு ஏதாவது பிழை இருக்கிறது என நம்பிய வண்ணம் இருப்பர். இது ஏன் அவர்கட்கு நடக்கின்றது என்பதனை விளங்கிக் கொள்ள மாட்டார்கள். அல்லது பயந்த வண்ணம் இருப்பர். இயலுமான அளவில் மீண்டும் உறுதி கூறுங்கள். அத்துடன் நல்ல கேட்பவராக இருங்கள். விசேஷமாக அவர்கட்கு நீங்கள் முதுமையிலேயோ அன்றி மனக்கலக்கத்திலோ முடிவடைய மாட்டீர்கள் என உறுதி கூறுங்கள். மனச்சோர்வு உள்ளவர்கள் முதுமை மனக்கலக்கத்திற்கு உட்பட மற்றவர்கள் போலன்றி கடைசியாக சரியான முறையில் சாப்பிடவும். பருகவும். உதவுங்கள்.

முடிவாக அவர்கள் தற்கொலை செய்யும் உணர்வைக் கொண்டவர்கள் என ஆராயும் வண்ணம் கற்பனை செய்யாதீர்கள். அப்படிச் செய்யின் அவர்களே அவர்களைக்கொலை செய்வதை ஊக்கிவிப்பது போலாகும். அது ஒரு கற்பனை ஆகும். தற்கொலை எண்ணம் உதவி தேவை என்பதற்கு சரியான அடையாளம் ஆகும். அத்துடன் அநேகமான மனச்சோர்வு கொண்டவர்கள் இதனை யாருக்காவது ஒருவருக்குக் கூறுவதன் மூலம் துன்பத்திலிருந்து விடுபடுவார்கள்.

---

# சமுதாய அடிப்படை...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பிறந்தன. இந்த நோய் கண்டிகோடு வியாதி என அழைக்கப்பட்டது.

காக்கைவலிப்பு (Epilepsy) உத்திரப்பிரதேச மாநிலம் லக்மிபூர்கேரியில், உணவுத் தானியங்களைப் பாதுகாக்க பி.எச்.சி (BHC) என்ற பூச்சி கொல்லியைப் பயன்படுத்தியதால் பரவலாக காக்கைவலிப்பு ஏற்பட்டது. இந்த நோயாளிகளுக்கு திடீரென உடலை உலுக்கும் வலிப்பு, காதுகளில் இரைச்சல், பார்வையில் பல நிற ஒளிக் கதிர்வீச்சுகள், தலைச்சுற்றல், தலையடி என்பன ஏற்பட்டன.

இவ்வாறான விளைவுகளைத் தடுப்பதற்கு இந்த மாதிரியான வேதிப்பொருட்களால், மக்களுக்கு, குறிப்பாக குழந்தைகளுக்கு, பிராணிகளுக்கு, பறவைகளுக்கு, நிலத்திற்கு மற்றும் இயற்கைச் சமநிலைக்கு ஏற்படும் ஆபத்துக்களை அறிந்திருப்பது மிகவும் அவசியம். ஆபத்துக் குறைந்த வழிமுறைகளில் பூச்சிகளை கட்டுப்படுத்துவது காலப்போக்கில் நல்ல விளைவுகளை கொடுக்கும் ஆபத்தான பொருட்களை தடைசெய்யவும் தெளிவான எச்சரிக்கைகளை வெளியிடவும் சட்டம் இயற்றப்பட வேண்டும்.

### கொடிய நோய்கள்

கதிர்வீச்சு (Radiation) இதுவும் பாதிப்பை (ஊனங்கள்) ஏற்படுத்தும். ராஜஸ்தான்— ராவற்பட்டா (Rawapatta) அணுமின் நிலையத்திற்கு அருகில் வாழும் பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள் விரல்கள், பிறப்புறுப்புகள் இல்லாமை; ஒட்டியவிரல்கள், அசாதாரண அளவுதலை ஆகிய குறைபாடுகளுடன் பிறந்தன.

### நஞ்சு ஊதியம்

கேரளக்கடற்கரையில் கருமணலில் கதிர்வீச்சுத் தன்மையுள்ள தோரியத்தைக் கொண்ட மோனோசைற் தாதுப்பொருள் காணப்படுகிறது. இங்குவசிப்பவர்களின் குழந்தைகள் தோரியக்கதிர்வீச்சினால் பாதிக்கப்பட்டு மூளைவாதம், மூளை வளர்ச்சிக்குறை, காது கேளாமை, புற்றுநோய், மற்றும் பிறவிக் குறைபாடுகளுடன் காணப்படுகின்றனர்.

நஞ்சான உணவுப்பொருட்கள் இந்தியாவின் சில பாகங்களில் விவசாயத்தொழிலாளருக்கு நச்சுத்தன்மையுள்ள பருப்பு ஊதியமாக வழங்கப்படுகின்றது. இப்பருப்பை உணபவர்களுக்கு ஒருவகை பாரிசவாதம் உண்டாகின்றது. இந்த ஆபத்தைத் தெரிந்திருந்தாலும் ஏழைகளுக்கு வேறு உணவு கிடைக்காத நிலையில் இதனை உண்கின்றார்கள். நியாயமான ஊதியம் வழங்கவும் ஊழல்களை களையவும் நடவடிக்கை எடுத்து இந்நிலையைத் தவிர்கலாம்.

### பணிச் சூழல் கேடுகள்

புளோரைட் நஞ்சேறல் (Flourosts) இந்தியாவிலும் வேறுசில நாடுகளிலும்குடிநீரில் காணப்படும் அதிகளவு புளோரைட் என்பு வியாதிகளுக்கு காரணமாக உள்ளது. இதைத் தவிர்க்க சுத்தமான குடிநீர் கிடைக்க பொதுச்சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

ஆபத்தான பணிச்சூழல்கள் (Unsafe Working Condjtions) வேலைத்தலங்களில் அடிப்படைப் பாதுகாப்பு வசதிகளின்மையால் கடும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. எரிகாயங்கள் கை-கால்துண்டிக்கப்படல் பார்வையிழப்பு தலை முதுகுகளில் காயங்கள் போன்றவற்றை முக்கியமாக குறிப்பிடலாம்.

கல் நாரிழைத் தகடுகளாலான (Asbestoes) கூரைகள், சுவர்கள், உள்ள பாடசாலைகள்,வேலைத்தலங்கள்,வீடுகள் ஆகிய இடங்களில் இருப்போருக்கு, கடும் நுரையீரல் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இந்த அபாயங்கள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வுஏற்படுத்துவதுடன் பொதுச்சுகாதார விதிகளையும் உறுதியுடன் கடைப்பிடிக்க வேண்டும்.

### அவசியத் தேவை

ஆபத்தான மருந்துகள் (Dangarous Drugs) உடல் நலத்திற்கு தீங்கு ஏற்படுத்தும் சில மருந்துகள் அவைஉற்பத்தி செய்யப்படும் நாடுகளிலேயே விற்க தடை செய்யப்பட்டுள்ளன. அதேவேளை இந்தமருந்துகள் வேறுநாடுகளில் இன்றுவரையும்விற்பனையாகின்றன. உதாரணமாக வயிற்றோட்டத்திற்கு பாவிக்கும் கிளிபோகுயினோல் உள்ளடங்கிய மருந்துகளால் ஜப்பான் நாட்டில் பார்வை இழப்பு, பாரிசவாதம் என்பன உண்டாகியது. ஆயினும் பல வறிய நாடுகளில் ஆபத்தான மருந்துகள் இன்னும் பாவணையில் உள்ளன

இன்றைய உலகில், விலை உயர்ந்த மருந்துகள், அளவுக்கதிகமான மருந்துப்பாவனை, தவறான மருந்துபாவனை ஆகியவற்றில் வறியமக்களுக்கு பொருளாதாரச்சுமை கூடுவதுடன் உடற்பாதிப்புகளும் ஏற்படுகின்றன. இது பற்றிய அறிவூட்டல் பொதுமக்கள் மருத்துவர்கள் ஆகிய இரு பகுதியினருக்கும் அவசியமாகவுள்ளது. மருந்துகளின் முறையான பாவனை, மருந்து விநியோகம் தொடர்பாக சர்வதேசரீதியாக வலுவான சட்டங்கள் அவசியம் தேவையாகும்.

www.padippakam.com






## உதெல்லாம் தேவையா?

வெளியில நடமாடவே பயமாய், இருக்குதாம்! இந்த வயசான காலத்திலையும் என்னைக் கூட சந்தேகமாய்ப் பார்க்கிறார்களாம்,

என்ன சுப்பையர் உங்கட பாட்டுக்கு ஏதோ கதைச்சுக் கொண்டு வாறியள்?

இல்லையடா தம்பி உப்பத் தான் கொழும்பில் இருந்து வந்த எண்ட நண்பன் சிற்றம்பலத்தைப் பார்த்துச் கதைச்சுப் போட்டு வாறன்.

எடா தம்பி சரியான மோசமாம் கொழும்பில இருக்கிறது. எந்தப் புத்தில எந்தப் பாம்பு இருக்குமோ எண்ட மாதிரி. எந்த லாட்ஜில அல்லது எந்த வீட்டில யார் யார் இருக்கினம் எண்டது பாதுகாப்புத் துறைக்குத் தெரிய வேணுமாம். இது பாதுகாப்புப் படைக்கு கொடுக்கப்பட்டிருக்கிற நாளாந்த வேலையாம் இதனால மக்கள் எப்பபாதுகாப்புப் படைவரும், எப்பபரிசோதனை முடியும், எப்ப வீட்டில உலை வைக்கலாம் எண்டு தலையில கையை வைச்சுக் கொண்டிருக்கினமாம்.

எல்லாம் காலம் செய்யிற விளையாட்டுத்தான் தம்பி.

○

சார்க் மாநாடும் ஒரு மாதிரி நடந்து முடிஞ்சு போச்சு. என்ன பேசினார்கள் ஏது பேசினார்கள் எண்டெல்லாம் பத்திரிகைகளில் செய்தியள் வந்துட்டுது கண்டியோ! ஆனா எங்கட யாட்கள் எங்கட பிரச்சினை பற்றி ஏதேனும் பேசினவையோ எண்டால் அதுவும் ஒண்டும் இல்லையாம். ஏனெண்டு கேட்கிறியே.

தமிழ் மக்களின்ற கட்சி எண்டு சொல்லிக் கொள்ளுறவை பிரதமர் வாஜ்பாய் அவர்களைச் சந்திக்கிறதுக்கு நான் முந்தி நீ முந்தி எண்டு அடிபட்டவையாம். இதைப் பார்த்த சந்திரிகா அரசு வாஜ்பாய் அவர்களைச் சந்திக்கிறதுக்கு அனுமதியை கொடுக்கேல்லையாம். இதுதான் கண்டியோ ஒற்றுமை.

சந்திரிகா அம்மையாரும் உள்நாட்டுப் பிரச்சினை குறித்து ஏதேனும் பேசவில்லையாம், ஆனால் காஷ்மீர் பிரச்சினை பற்றித் தாராளமாகப் பேசிக் கொண்டவையாம். உதுக்கெல்லாம் ஒரு சார்க் மாநாடு தேவைதாமோ எண்டும் கேட்கினம்.

# செம்மணிபுதைகுழிகள் உண்மை வெளிவருமா?

**- நேயார் -**

யாழ்ப்பாணம் குடாநாடு இராணுவத்தின் வசம் சென்று விட்ட போது வந்த இளைஞர்களும், பெண்களும் அங்கு நிம்மதியாக வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்டிருந்தது.

இருந்தும் இடைகால அமைதியை நம்பி கல்வி கற்பதற்காகவும், வேலைவாய்ப்பிற்காகவும் யாழ் குடாநாட்டை விட்டு வெளியேறி இருந்தவர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு சென்று மெல்ல மெல்லக் குடியேறினார்கள்.

புலி பதுங்கி இருந்து பாய்வது போல் நல்ல பிள்ளை வேஷம் போட்டு மக்களை வரவேற்ற இலங்கை இராணுவத்தினர் தமது நய வஞ்சக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தவறவில்லை.

பாதுகாப்புப் படையினர் யாழ் மாவட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததையடுத்து ஆண்கள் பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட பின் 637 பேர் வரையில் காணமல் போயுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் கொழும்புத்தலைமையலுவலகத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்,

அதே நேரம் 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி இராணுவத்தினரின் பாலியியல் வல்லுறவுக்குட்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவமும், அதனைத் தொடர்ந்து அவரைத் தேடிச் சென்ற இருவரையும் இராணுவம் படுகொலை செய்ததையும் அறிந்து அதிர்ச்சியடைந்து விடுபடுவதற்குள் மேலும் நானூறு சடலங்கள் செம்மணியில் புதைக்கப்பட்டிருப்பதாக புதிய தகவல் வெளியாகியுள்ளது.

பாலியியல் வல்லுறவு கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ என்பவர் செம்மணி புதைகுழிகள் தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் செம்மணி மயானத்தில் அதிகாரிகளினால் அவ்வப்போது நானூறுக்கு மேற்பட்ட சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாகவும், அந்த இடங்களை தம்மால் அடையாளம் காட்ட முடியும் எனவும் நீதிமன்றத்தில் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன் யாழ்ப்பாண மக்கள் கொதித்தெழுந்து போயுள்ளார்கள்.

யாழ்ப்பாண நகரத்தில் இருந்து ஏறக்குறைய நான்கு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள ஒரு வெட்ட வெளியான வயல் பிரதேசமே செம்மணி என அழைக்கப்படும் பிரதேசமாகும். இதனை அண்டிய பகுதியில் தான் நாவற்குழி இராணுவ முகாமும், அரியாலை இராணுவ முகாமும் அமைந்திருக்கிறது. ஆரம்ப நாட்களில் பொது மக்கள் இப்பாதையூடாகப் போக்குவரத்து செய்வதையே தவிர்த்து வந்தார்கள். செம்மணிப் பிரதேசத்தில் இருக்கும் சுடுகாட்டுக்கு மட்டுமே மக்கள் போய் வந்து கொண்டிருந்தனர்.

பொது மக்கள் போக்குவரத்துச் செய்வதை நிறுத்திக் கொண்டதைச் சாட்டாக வைத்து அந்தப் பிரதேசத்தில் பல சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளன என்பதை நம்பலாம்.

யாழ்ப்பாணத்தில் காணமால் போனவர்கள் தொடர்பாக ஆராய ஜனாதிபதிஒரு ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும் எனத் தமிழ்க் கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தின. ஊர்வலங்களும் நடத்தின. ஆனால் கோரிக்கைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் 1988, 1989 ஆண்டுப் பகுதிகளில் இரத்தினபுரி மாவட்டத்தில் பல பாடசாலை மாணவர்கள் கொலை செய்யப்பட்டு மலைப் பிரதேசங்களில் புதைக்கப்பட்ட தகவலை ஆதாரபூர்வமாகக் கண்டு பிடித்தவர் சந்திரிகா குமாரணதுங்கா. அந்த நடவடிக்கையும், புதைகுழி விவகாரங்களை அம்பலப்படுத்தியும் பொது தேர்தல் மேடைகளில் முழங்கி ஆட்சிக்கு வந்தவர் தான் சந்திரிகா அம்மையார்.

ஆனால் செம்மணியில் புதைக்கப்பட்டதாக கூறப்படும் சடலங்கள் தொடர்பாக மௌனம் சாதிப்பது ஏன் என்று மட்டும் தெரியவில்லை. ஆனால் விலாசம் இல்லாமல் இருக்கும் பல அரசியல் கட்சிகள் செம்மணி புதைக்குழி விவகாரத்தினைக் கையிலெடுத்திருப்பது சுய நல முயற்சியே! உண்மையான உணர்வுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் இந்த விடயத்தினை சும்மா விடலாகாது. வெறும் பத்திரிகைகளுக்கான அறிக்கைகளுடன் மட்டும் அவர்களது கடமை முடிந்து விடக் கூடாது. இந்த விடயம் வெளியே கொண்டு வரப்படும் வரை போராட வேண்டும். சிங்கள மக்களுக்கு ஒரு நீதி தமிழ் மக்களுக்கு ஒரு நீதியா! என முழக்கமிடப்பட வேண்டும் அதுமட்டுமல்ல விடயத்தை வெளியே கொண்டு வந்த கோப்ரல் ராஜபக்ஷ விடயம் முழுமையாக வெளிவரும்

யாழ்ப்பாணம் குடாநாடு இப்போது இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இரவு நேரங்களில் ஊரடங்கு உத்தரவும் அமுலில் இருக்கிறது. செம்மணி புதைகுழிகளில் உள்ள சடலங்கள் இரவோடிரவாக புதைக்கப்பட்டவர்களாலேயே அகற்றப்படாமல் இருபதற்கு தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்திடம் உத்தரவாதம் வாங்கவேண்டும். அவ்வானு மனித உரிமைகள் அமைப்போ, பன்னாட்டுச் செஞ்சிலுவை சங்கமோ தற்காலிகமாக அந்த இடத்தினை மேற்பார்வை இட்டு வரலாம். அரசாங்கம் காலம் தாழ்த்துவது நல்லதல்ல. தமிழ் மக்கள் தாங்களாகவே ஒன்று திரண்டு குழியைத் தேடிப்பார்க்க மாட்டார்கள் என்பது நிச்சயமல்ல.

நானூறு பேர் படுகொலை செய்யப்பட்டு, மறைக்கப்பட்டிருப்பது ஒரு சாதாரண காரியமல்ல. எனவே உடனடியாக அரசாங்கம் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு உத்தரவிட வேண்டும். இல்லாவிடில் சர்வதேச அரங்கில் அதன் பெயர் கெட்டுப் போகவும் வாய்ப்பு ஏற்படும்.

யாழ்ப்பாணம் இராணுவத்தினர் வசம் இருப்பதன் பயன் தற்போது செம்மணி புதைகுழி மூலம் வெளிப்பட்டிருக்கிறது. இதே போல் கோம்பையன் மணல், கொட்டடி போன்ற சுடுகாட்டுப் பிரதேசங்களிலும் புதை குழிகள் இருக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

நானூறுக்கும் மேற்பட்ட உடல்கள் மறைந்து போய் விட்டன. ஆனால் நடை பெற்ற உண்மைகள் மறைந்து போய் விடக் கூடாது.

இதிலும் தமிழ்க்கட்சிகள் அரசியல் ஆதாயம் தேட முற்படாமல் பிள்ளைகளை இழந்து தவிக்கும் பெற்றோர்களுக்கு உண்மை நிலையை வெளிப்படுத்துங்கள். அதற்காக அரசாங்கத்துடன் போராடுங்கள். உங்கள் பதவியை விட மேலானது ஒவ்வொருவரினது உயிர் என்பதையும் புதைக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

---

**யாழ். கூட்டுறவுகளில்**

# நிவாரணத்திற்கு வழங்கும் அரிசி தரமற்றதென புகார்

யாழ் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் கிளைகளில் நிவாரணத்துக்கு வழங்கப்படும் அரிசி தரமற்றவையாக உள்ளதென நிவாரணம் பெறுவோர் அவ்வப்பகுதி பிரதேச செயலகங்களில் தெரிவித்துள்ளனர் என அறியப்படுகின்றது.

நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு தரமான அரிசி வழங்கப்படாமைக்கான காரணம் பற்றி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களிடம்விசாரித்தபோது தமக்கு அரச செயலகத்தின் புனர்வாழ்வுப்பகுதியினால் வழங்கப்பட்ட அரிசியையே தாம் வழங்குவதாகத் தெரிவித்தனர்.

**தலைவர்கள் கருத்து!**

இது விடயம் தொடர்பாக நிவாரணம் பெறுபவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளில் பணியாற்றுகின்ற கிளை முகாமையாளர்கள், விற்பனையாளர்கள் மீது வெறுப்பையும், கோபத்தையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆனால், இதுவிடயத்தில் நிவாரணம்பெறுபவர்கள்தமக்கு வழங்கப்படுகின்ற தரமற்ற அரிசி பற்றி அரசு செயலகத்தின் புனர்வாழ்வுப்பகுதியிடம் தமது முறைப்பாடுகளைத் தெரிவித்தால் பொருத்தமானது என கூட்டுறவுச் சங்கங்களின்தலைவர்கள் அபிப்பிராயம் தெரிவித்

அதேவேளை யாழ் மாவட்டத்தில் நிவாரணப்பொருள்கள் விநியோகத்துக்காக கொழும்பில் இருந்தே பொருள்கள் அனுப்பப்பட்டு வருகிறது.

---

## ஈழத்தமிழன் என்பதலா?

நாங்கள் சுதந்திரக்
காற்றைத்தானே
சுவாசிக்கக் கேட்டோம்!
துப்பாக்கிகளுக்கு ஏன்
மூச்சிரைக்கின்றன?
ஓ...ஈழத் தமிழன்
என்பதனாலா?

**ப. கிருஷ்ணா ஜீ**
இ. அ. முகாம்
குடியாத்தம் !!

## நாளை மீளும்!

பாச அலைகள்
பாடிவரும் போது
வேச முகங்கள்
மாறுவ தேனோ?
சோகச் சூரியன்
சுட்டெரிக்கையில்
ஏகுவதேனோ
இனிய சொந்தங்கள்?
வாழ நினைக்கையில்
ஏழை மனங்கள்
மீள மீளத்
தாழுவ தேனோ?
பாழும் அந்நிலை
பறக்கும் விரைவில்
நாளை பிறக்கும்
நமக்கு நல்வாழ்வு!

**கே. சிவக்குமார்**
இ. அ. முகாம்

www.padippakam.com



# பெண்ணின் கடமை

சிறுகதை

கௌரியின் மனம் அந்தச் சப்பவத்தால் சந்தோச அலைகளால் ஏ ரடிக் கொண்டிருந்தது. கண்கள் ஆனந்தத்தில் குளித்துவிட்டிருந்தன. நிலத்தில் கண்கள் பதியவில்லை பறப்பது போன்ற உணர்வு. இருக்காதா பின்னே! மூத்த பெண் அதுவும் தாய்க்குத் தலைமகள் வயதுக்கு வந்து விட்டால் எந்தத் தாய்க்குத்தான் சந்தோசம் பிடிபடும்! அன்றுதான் வயதுக்கு வந்திருந்த ராகவியும் தாய்க்குத் தலைமகள்தான்.

தேங்காய்க்கு மூன்று கண்கள் போல் கௌரிக்கும் மூன்று குழந்தைகள். வயதுக்கு வந்திருந்த ராகவிதான் மூத்தவள். இளையவர்கள் இரண்டுபேரும் ஆண் குழந்தைகள் அதனால் தான் தன் ஒரே மகள் பெரியவளாகி விட்டதில் இத்தனை ஆனந்தம் அவளுக்கு.

ராகவியைப் பார்க்க வந்திருந்த முகாமில் வசிக்கும் அங்கம் பக்கத்துப் பெண்களை அன்புடன் வரவேற்று தேநீர், பழம், வெற்றிலை பாக்கு என்று கொடுத்து உபசரிப்பதில் பம்பரமாய் சுழன்று கொண்டிருந்த கௌரியின் கால்கள் ஒருபுறம் ஆட்ட மெட்டிக்காய் அடிக்கடி வெளிமுற்றத்தை நோக்கி விரைந்து கொண்டும், தொடர்ந்து கண்கள் முகாமின் மெயின் வீதியை மேய்ந்து கொண்டும் இருந்தன.

வேறு எதற்கு! எல்லாம் வேலைக்குச் சென்றிருக்கும் அவள் கணவன் மதியழகனை எதிர்பார்த்துத்தான். அவன் வீடு திரும்பும் மாலை நேரமாச்சே அது! தம் அருமை மகளின் ஆனந்த நிகழ்வை அவனிடமும் சொல்லி அந்த ஆனந்த நிகழ்வை பேரானந்தமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டாமா! அதற்காகத்தான் இத்தனை துடிப்பு. ஆவலான எதிர் பார்ப்பு.

இம்முறை தூரத்தில் மதியழகன் வருவது தெரிந்ததும் அதுவரை அவளுள் அடங்கியிருந்த ஆவல் அனைத்தும் ஒருவித நிம்மதிப் பெருமூச்சாக வெளியேற சட்டென உள்ளே சென்று மேலே தொடர வேண்டிய வேலைகளில் தீவிரமானாள் கௌரி.

மதியழகன் வீட்டுவாசலை எட்டிவிட்டிருந்தான். வீட்டில் ஏதோ ஒரு மாற்றம் தெரிந்ததும் சற்று வெளியில் நின்று நிதானித்தான். அப்போது திண்ணையில் வெற்றிலை போட்டுக்கொண்டு அமர்ந்திருந்த பெண்கள் மதியழகனை நோக்கி பேசிய சூசகமான வார்த்தைகளினால் நடந்து விட்டிருக்கின்ற நிகழ்வைக் கண்டு பிடிப்பதற்கு அவனுக்கு வெகு நேரமிருக்கவில்லை. அப்பப்ப! அவனுள்ளும் எத்தனை சந்தோசம்! அந்த உற்சாகமான பேச்சே அவன் உள்ளக் களிப்பை உணர்த்தியதே!

நேரம் கடந்து கொண்டிருந்தது. ராகவியைப் பார்க்க வந்திருந்த பெண்கள் ஒருவாறு அகன்றனர். இப்போது வீடு அமைதியின் களிப்பில். மதியழகன் மகள் அருகே வந்தமர்ந்தான். ராகவி சத்தமாய்க் கேட்டாள்! "அப்பா நோட்டு வாங்கி வரச் சொன்னன் வாங்கிட்டு வந்திருக்கிறீங்களா அப்பா?" மகளின் கேள்விக்கு பதில் சொல்ல வாயெடுத்தான் மதியழகன். ஆனால் அப்போது உள்ளே எதையோ தீவிரமாய் தேடிக்கொண்டிருந்த கௌரி முந்திக்கொண்டு பதில் சொன்னாள் மகளுக்கு. "இப்ப நோட் அவசரமாக வாங்க வேண்டியதில்லை. நீ பள்ளிக்கூடம் போகும்போது வாங்கித் தரலாம்." என்றுசொல்லிவிட்டு தன் தேடலில் தீவிரமானாள் கௌரி.

கௌரி இப்படிச் சொன்னதும் ராகவியின் முகம்வேதனையில் வாடியதை மதியழகன் கவனித்துவிட்டு... "அவ கிடக்கிறா... நான் நாளைக்கே பிள்ளைக்கு நோட்டு வாங்கி வந்து கொடுக்கிறேன் சரியா...?" என்று கௌரிக்கு விளங்காதவாறு சைகை மொழியில் மகளிடம் கூறியதும்...ராகவியின் வதனம் மீண்டும் அன்றலர்ந்த தாமரையாய் மகிழ்ச்சியில் மலர்ந்தது.

அந்த வீட்டின் அன்றைய சந்தோசமான நொடிகள் அனைத்தும் நிமிடங்களாகி மணிகளாகக்கரைந்துகொண்டிருக்க கௌரி எதேச்சையாக கண் விழித்தாள். பின்பு ஏனோ தூக்கம் வரமாட்டேன் என்று அடம் பிடித்ததால் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தவள் அந்த விடி விளக்கின் மெல்லிய ஒளியில் தன் மகளின் முகத்தை கண்ணிமைக்காமல் கூர்ந்து பார்த்தாள் என்பதைவிட ரசித்தாள் என்பதே உண்மை. எந்தவித சலனமும் இல்லாமல் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த ராகவியின் பால் வடியும் பூமுகம், நேற்றுவரை இல்லாத ஒரு பூரிப்பு மட்டும் அவளிடம் இன்று ஒட்டியிருந்தது. இப்போது கௌரியின் நெஞ்சில் எங்கோ ஒரு மூலையில் ஒரு முள் தைத்தது. தொடர்ந்து சிந்தனை அலைகள் பாறைகளை மோதுவது போல் அவள் மூளையில் வந்து வந்து மோதின. அவளின் இந்த ஆழமான சிந்தனைக்கு மூல காரணமே அவள் வாழும் முகாம் சூழ்நிலைதான்.

நேற்றுவரை ராகவி முகாமில் சிறுமியாக இருந்த வரையில் கௌரிக்கு கவலையில்லை. ஆனால் இன்று குமரியாகி விட்டாளே! இனி அவளையும் அவளின் ஒவ்வொரு செய்கையையும் மற்றவர்கள் உன்னிப்பாய் கவனிப்பார்களே! குணங்கள் கூட மாறலாம் அல்லவா! ராகவி தன் பிள்ளை என்பதால் அவள் பெருமை பேசவும் தயாரில்லை. பலா மரத்தில் களாக்காய் காய்ப்பதுமில்லை. கவரிமான் வயிற்றில் கழுதைக் குட்டி பிறந்ததாக சரித்திரமும் இல்லைதான்: இருந்தாலும் அவள் வாழும் சூழ்நிலை தான் அவளை வெகுவாகப்பயமுறுத்தியது. நல்லமரத்தில்விளைந்த கனிகள்கூட அவள் வாழும் சூழ்நிலையில் விதிவிலக்காய் தவறிக்கொண்டிருப்பதை கண்கூடாக கண்டு கொண்டுதானே இருக்கிறாள்! பின் தன் பிள்ளையை மட்டும் எப்படி அவள் பெருமையாய்ப் பேசமுடியும்!

அவளைப் பொறுத்தளவில் அவளுக்கு சுயநலம் கிடையாது எல்லாப் பிள்ளைகளையும் தன் பிள்ளைகள் போலவே நினைப்பவள். ஆனால் அவள்சூழலில் வசிப்பவர்கள் எல்லோருக்கும் அந்த மனப்பக்குவம் வேண்டுமே! இன்று நமது முகாம்களின் மோசமான சூழ்நிலைக்குக் காரணம் நம்மிடையே வளர்ந்துள்ள சினிமா மோகம், அறியாமை மற்றும் பெரியவர்களின் கோபதாபங்கள் போட்டி பொறாமைகள் போன்றவைதான். இவைகளே பால்ய திருமணங்கள் நடைபெறுவதற்கும் வளர்ந்து வரும் பிள்ளைகள் சீர் கெட்டுப் போவதற்கும் குறிப்பாக பல பெண் பிள்ளைகள் மோசமான நிலைக்குத் தள்ளப்படுவதற்கும் பெரிதும் காரணமாகியிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழலில் வயதுக்கு வந்த பெண் பிள்ளைகளை வைத்து வளர்ப்பது என்பது எவ்வளவு சங்கடமான விடயம் என்று இங்கு வாழும் கௌரியைப் போன்ற தாயுள்ளங்களுக்கல்லவா தெரியும்!

நாகரிகம் மாறலாம் நமது பண்பாடு மாறலாமா?! பசுமை கலையாத நமது கலாச்சாரத்தைக் கட்டிக்காக்க வேண்டிய பெரும் கடமை பெண்ணுக்கு உண்டல்லவா! ஆண் தவறு செய்தால் உடனே அழிந்து விடுகிறது மறைந்து விடுகிறது. ஒரு பெண் செய்யும் தவறு அவள் வாழ்க்கை முழுவதும் வந்து பாதிப்பதோடு நில்லாமல் அவள் எதிர்காலத் தலைமுறையையும் அல்லவா பாதிக்கிறது. நாளைய தமிழ் சமூகத்தின் பண்பாட்டைக் கட்டிக்காக்கவேண்டிய தூண்களாக இருக்க வேண்டியவர்கள் இன்றே துரும்பாகிப்போனால் நமது சமூகத்தின் தனிப்பெருமை சிதைந்து விடுமே!

ஒரு பெண் எப்பொழுது குமரியாகிறாளோ அன்றுமுதல் தன்னையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும். கட்டிக்காக்க வேண்டிய கடமைக்குரியவளாகிறாள். அந்தக் கடமையை அவள் வாழ்க்கையின் இறுதிவரை செவ்வனே செய்ய இப்பொழுதே அவளுக்குஉறுதியான அஸ்திவாரம் தேவையல்லவா! ஒரு நல்ல வழிகாட்டி தேவையல்லவா! அது தாயாக அமைந்துவிட்டால்...

ஆம் நேற்றுவரைமுகாமில் ராகவியின் நண்பிகள் யார்என்பதைப் பற்றிக் கௌரிக்கு கவலையில்லை. ஆனால் நண்பிகள் யார்என்பதைஅவள் அறிந்துதான் ஆகவேண்டும். உறுதியான அஸ்திவாரமிடப்பட்ட வீடுகள் எந்தக் காற்றுக்கும் புயலுக்கும் அசைந்து கொடுப்பதில்லையே! ராகவியும் அப்படிப்பட்ட வீடு போல் உருவாக வேண்டுமானால் நேற்றுவரை அன்பு அன்னையாக இருந்த கௌரி இனி ராகவிக்கு அருமைத் தோழியாகவும் மாறி ஆக வேண்டும். ஆம் அதுதான் சரி! இப்படி ஒரு முடிவால் இறுதியில் கௌரியின் நெஞ்சம் அமைதி கொள்ள கண்கள் தூக்கத்திற்காகக்கெஞ்ச அப்படியே உறங்கிப் போனாள்.

நாட்கள் நகர்ந்தன, மாதங்கள் கரைந்தன, வருடங்கள் உருண்டோடின. ராகவி வயதுக்கு வந்து வருடங்கள் விரைந்து விட்டன. அவள்இப்பொழுது +2 மாணவி. படிப்பில் உறுதியாக இருந்தாள் அத்தோடு இந்த நான்கு வருடங்களில் கௌரி நினைத்ததுபோல் ராகவியின் குணங்கள் கூட பெரிதும் மாறுபட்டிருந்தது. பயப்படாதீர்கள், எல்லாம் நல்ல குணங்கள்தான். பெண்ணின் பெருமையே தன் மானம் காப்பதிலும், பண்பாட்டை கலாச்சாரத்தைக் தைக்கட்டிக் காப்பதிலும் தான் அடங்கியிருக்கிறது. இவையெல்லாம் ஒரு பெண்ணுக்கு சுமையல்ல சுகமான கடமைகளே என்பது ராகவியின் நடத்தையில் நன்கு தெரிந்தது.

சில நண்பிகளை அவளாகவே தவிர்த்தாள். கௌரி மகளிடம் அதற்கான காரணம் கேட்பாள் ராகவி சொல்வாள் "அம்மா.. பூவோடு சேர்ந்த நாரும் மணக்க வேண்டுமே ஒழிய மாறாக பன்றியோடு சேர்ந்து கன்றும் பவ்வி அருந்தி விடக் கூடாதல்லவா அதனால் தான்" என்பாள். மகள்பேச்சின் உள்ளார்ந்த அர்த்தம் கௌரிக்கு விளங்கிவிடும். கெட்ட நண்பர்களையோ, நண்பிகளையோ நமது நல்லவழிக்கு கொண்டுவர வேண்டுமே ஒழிய நாம் அவர்கள் வழிக்கு போய் விடக்கூடாது. அதிலும்நாய் வாலை நிமிர்த்த நினைத்தால் நமது நிலை தானே மோசமாகும். எனவே நாய் வாலைப் போன்றவர்களோடு நாம் நட்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்னும் ராகவியின் எண்ணம் முற்றிலும் சரிதானே!

இப்பொழுதெல்லாம் கௌரிக்கு ஏனோ தன் மகள் ராகவியைப் பற்றியோ, சூழ்நிலையைப்பற்றியோ சிறிதும் கவலையில்லை. தன் மகள் ஒரு செந்தாமரையானவள். தங்கத்தைப்போன்றவள் என்பதுதான் இந்த நான்கு வருடங்களில் தெளிவாகி விட்டதே! பின் எதற்காக அவள் இனி சூழ்நிலையைப்பற்றிக் கவலைப்பட வேண்டும்? காலம் காலமாக செந்தாமரையின் சீவியம் சேற்றில்தானே! வாழும் சூழ்நிலை சேறு என்பதால் செந்தாமரையின் குணமோ நிறமோ மாறுபடுகிறதா இல்லையே! ராகவியும் அப்படித்தான். எந்தச் சந்தர்ப்பத்திலும் தங்கத்தின் தரம் மட்டும் குறைகிறதா? அதுவும் இல்லையே! இந்த ராகவியும் அப்படித்தான்! பின் கௌரிக்குத்தான் இனி என்ன கவலை? என்ன பயம்! தன் பிள்ளையின் நல்லநிலை கண்டு கௌரியின் தாயுள்ளம் மனதிற்குள் பூரித்தாலும் தன் பிள்ளையைப் பற்றி என்றுமே அடுத்தவர்களிடத்தில் அவள் ஒரு வார்த்தை இன்றுவரை பெருமையாய் பேசியது கிடையாது.

இந்தக் கௌரியைப்போல் ஒவ்வொரு தாயுள்ளமும் இருந்துவிட்டால் நமது சமூகத்தல் என்றும், எங்கும், எப்பொழுதும் ராகவிகளுக்குத்தான் என்ன பஞ்சம்!

செல்வி

**சித்ரா தேவசகாயம்**

இ.அ.முகாம், போகநல்லூர்

## ஏக்கம்!

தாய்க் கூட்டில்
தாங்க முடியாத
தகிப்பின் தாகம்!
அன்னியக் கூட்டில்
அடைக்கலமாய்
இந்த இளம்
பறவைகள்!
அரும்பும் பொழுதுகளில்
வாழ்வைத் தொலைத்து
விட்ட இந்தக்
கண்களுக்கு
இப்போது நிழல் வேண்டும்
பாவம் எத்தனை நாள்
பாசப் பட்டினியோ!

(ஈழத்தில் இருந்து இந்தியச் சிறையில் இருக்கும் நண்பனுக்கு எழுதிய கடிதத்தில் இருந்து)

**ப. கீதா**

இ.அ. முகாம் குடியாத்தம் II

## ஈழதாகம்!

என்று தணியுமோ ஈழவர் தாகம்?
எம்மில் இழையோடிய தேனோ சோகம்?
ஒன்றுகூடி வாழ்கிறது உலகில் காகம்
ஒன்றாய் நாங்கள் என்று பாடுவோம் விடுதலை ராகம்?
அசுர வேகத்தில் ஓடுகிறதே காலம்
அமைதியை எமக்களிக்குமா இந்த ஞாலம்?
கொடிய சிங்கள இனவெறி கூட்டுவதோ வேகம்?
கொடுக்க மறப்பதேன் எங்களின் பாகம்?

**ஈழவாகினி**

இ.அ. முகாம், ஒக்கூர்

படிப்பகம்

www.padippakam.com



# வவுனியா நிலைப்பாடு

(சென்ற 1998 மே மாத இறுதி வரையிலானது)

இக்கால நிலைப்பாட்டை மூன்று வகையினதாகக் குறிப்பிடலாம். (1) இராணுவம், (2) மக்கள் (3) அகதிமுகாம்கள்.

## இராணுவம் மற்றும் காவல்துறை:

பலமுக்கிய பாதைகளில் நிலையான சோதனை அரண்கள் மேலும் பல இடங்களிலும் திடீர் சோதனை நிலையங்கள் உள்ளன. வவுனியா, மன்னார் நெடுஞ்சாலை முழுவதுமே நிரந்தரமான காவல் அரணாகவுள்ளது. அவர்களின் நடைமுறைகள் வெளிப்பார்வைக்கு கடும் போக்காகத் தெரிவதில்லை. 1987க்கு முற்பட்ட காலத்தைப்போல் இல்லாத மக்களுடன் அன்பு ஆதரவுடன் பழகுவதுபோல் தோற்றமளிக்கின்றது. மக்களைப் பயமுறுத்துவது போல் நடக்காவிட்டாலும், மக்களின் செயல்பாடுகளைக் குலைப்பதிலும் தாமதப்படுத்துவதிலும் ஈடுபாடுமுண்டு. வவுனியா முக்கிய நகரப்பகுதி முழுவதிலுமே மக்கள் எண்ணிக்கைக்குச்சமமான இராணுவத்தினரையும் காவல்துறையினரையும் காணலாம்.

## மக்கள்:

நிரந்தர வாசிகள், இடம் பெயர்ந்து குடியேறியோர் ஏனைய இனத்தவர்கள் எனப்பலதரப் படுத்தலாம். யாவருமே எந்நேரமும் பய மனநிலையில் தான் உள்ளனர். எந்நேரத்திலும் பெரிய பிரச்சினைகள் உருவாகலாம் என்ற பயம் பல மக்களிடம் உண்டு. தொழில்களோடு ஈடுபட்டிருப்பதால், வேறுவேலையற்றுச் செய்வதறியாது உள்ளனர். வவுனியா மாவட்டம் முழுவதும் விவசாயம் நன்கு நடைபெறுகின்றது. ஆனால் விவசாய மக்களின் வருமானம் பெரியதாக இல்லை. இதற்குரிய முக்கிய காரணங்கள், ஏனைய பகுதிகளில் இருந்து (சிங்களப் பகுதிகள்) பெருந்தொகையான மரக்கறி வகைகள் வருவது, வியாபாரிகளின் அநீதிகள், கடந்தகாலம் போராளிகளின் கெடுபிடிகள், இவைகளினால் விவசாயத்தில் ஓர் மந்தநிலை ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது. வியாபாரத்தைப் பொறுத்தளவிலும் தமிழ் மக்களின் பங்களிப்பு குறைவாகவேயுள்ளது.

## பிரதேச ஆக்கிரமிப்பு:

வவுனியா நகர் மையப்பகுதியில் இருந்து ஆரம்பமாகும் கண்டி வீதியும் அதன் அருகாமைப் பகுதிகளிலும் இருந்த தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகள் யாவும் இராணுவத்தினராலும் சிங்களப் பொதுமக்களினாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அதேபோல் நகருக்கு வடகிழக்குப் பகுதியில் இருக்கும் மாகாரம்பைக்குளம், ஆசிகுளம் ஆகிய பகுதிகளில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் பல சிங்கள மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அரச அனுமதிக் காணிகளுக்கு தற்போது உறுதிகள் வழங்கி நடைமுறைப் படுத்தி வருகின்றனர். ஆனால் அவ்வுறுதிகள் பெறுமதி வாய்ந்தவைகளாக இல்லை.

## வதிவிட அனுமதிகள்:


வவுனியா மாவட்ட இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதியில் வசிப்பவர்களுக்கு, வந்து செல்பவர்களுக்கு காவல்துறையினரால் பலதரப்பட்ட வதிவிட அனுமதிகள் வழங்கப்படுகின்றன. நிரந்தர அனுமதி 90 91ம் ஆண்டுப்பகுதியில் அங்கு நிரந்தரமாக இருந்தவர்களுக்கும், அரசு உத்தியோகத்தர் போன்றோருக்கும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது எவருக்கும் நிரந்தர அனுமதி வழங்கப் படுவதில்லை. மூன்று மாதகால அனுமதி:- ஏனைய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வந்து தொழில் ரீதியாக வசிப்பவர்கள் வேறு பகுதிகளுக்குச் செல்ல முடியாமல் 92-93ம் ஆண்டுக்கு பிற்பாடு தொடர்ந்து இருப்பவர்கள் போன்றோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வகை இரண்டு வித அனுமதி அட்டை உள்ளவர்களே வவுனியாவை விட்டு வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவர். ஏனையோர் செல்வதாயின் விசேட அனுமதி பெற வேண்டும். இவ்வகை விசேட அனுமதி இலகுவில் வழங்கப்படுவதில்லை. போதிய தகுந்த காரணங்கள் இருந்தாலும் இலகுவில் வழங்கப்படுவதில்லை. அத்தியாவசிய காரணங்களை முன்னிட்டு ஒருவர் வெளி மாவட்டம் செல்வதில் பலவகை இடையூறுகள் உள்ளன. இவ்வனுமதி காவல்துறை அத்தியட்சரால் (SP) மட்டுமே வழங்கப்படும் ஒருவர் தனது அவசியத்தேவையின் நிமித்தம் காவல்துறை அத்தியட்சகரைச் சந்திப்பதற்கு மணித்தியாலக் கணக்காக, நாள் கணக்காக நின்றாலும் சிலசமயம் அது சாத்தியப்படுவதும் இல்லை. மக்களைத் தாமதப் படுத்தித் துன்பப்படுத்துவதில்தான் காவல்துறையினர் செயல்படுவர்.

## அகதி முகாம்கள்:

1997ம் ஆண்டு ஆரம்பக்காலம் முதல் புலிகளின் கட்டுப்பாட்டு வன்னிப்பகுதியில் இருந்து இராணுவக் கட்டுப் பகுதிகளுக்கு வருகை தந்த மக்கள் யாவரும் அகதிமுகாம்களிலேயே வைக்கப்பட்டனர். இதற்காகப் பல பாடசாலைகளுக்கு அருகாமையிலேயே சில கட்டிடங்கள் நிர்மாணித்து அங்கு அவர்கள் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஆரம்பத்தில் நபருக்கு ரூ. 50- வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது. பின்னர் உணவுப் பொருளாக வழங்கப்பட்டது. தற்போது சமைத்த உணவுதான் வழங்கப்படுகின்றது. தொண்டு நிறுவனங்களால் இவர்களுக்கு சில உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. பாத்திரங்கள், பாய்கள், உடைகள் மாணவர்களுக்கான குறிப்பேடுகள் ஆகியன போன்றவை. இவர்கள் முகாமை விட்டு நகர்ப்பகுதிக்குச் செல்வதற்கு நான்குமணித்தியாம் அனுமதி வழங்கப்படும் முகாமை விட்டு ஏனைய இடங்களில் வசிப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. இருந்தும் பணவசதியுள்ளவர்கள் காவல் துறையினரைப் பயன்படுத்தி முகாமிற்கு வெளியிலும் இருக்கின்ற

# ஈழத்தமிழர் வரலாறு..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)




அரசாட்சி செய்ததற்கான தடயங்கள் உள. 'பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்', 'பல்லான் குன்றில் குழுமூர் உதியன்' போன்ற பெயர்கள் இவ்வம்சத்தவர்களின் பெயர்கள் ஆகும்[115]. இவ்வுதியன் என்ற பெயரே பாளி நூல்களில் 'உதிய' எனவும், கிறிஸ்தாப்த காலத்திற்கு முந்திய ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளில் 'உதி' எனவும் வழங்கப்பட்டுள்ளது.[116] 'உதி' என்பது பழைய வடிவமாகும். உதியன் என்பது பின்னர் வளர்ச்சி பெற்ற வடிவமாகும்.

இதனால் ஈழத்தில் பழைய திராவிட வடிவமாகிய 'உதி' காணப்படுவதும், இதனைச் குடியோர் அரசவம்சத்தோடு தொடர்புடையவர்களாகக் காணப்படுவதும் ஈழத்து அரச உருவாக்கத்தில் சேர நாட்டின் பங்கைப் புலனாக்குகின்றது. ஈழத்திற் காணப்பட்ட திராவிட சமுதாயத்தின் எச்சமாக இன்றும் விளங்குவது சிங்கள தமிழ் சமுதாயங்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமையாகும். இதனை வடஇந்திய கலாச்சாரப் படர்க்கையாலும் மாற்ற முடியவில்லை.

தாய் வழிச்சமுதாய அமைப்பு கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்பிருந்தே ஈழத்தில் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை ஈழத்தின் பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படும் 'பருமக' என்ற பதம் எடுத்துக் காட்டுகின்றது. எல்லாமாக நாடெங்கணுமுள்ள எட்டுக் கல்வெட்டுகளில் இப் பதம் இடம்பெற்றுள்ளது.[117] இதன் மூலத்தினை விளங்காத பரணவித்தானா பேரன் என்றும், சந்ததியான் என்றும் பொருள் தரும் சிங்களச் சொல்லாகிய 'முனும்புறு' என்ற வடிவத்தையே 'பருமக' என்ற வடிவமும் குறிக்கிறது எனக் கூறியுள்ளார்.[118]

உண்மையிலே இது ஒரு பழந்தமிழ் வடிவமாகும். மருமகன் என்றால் ஆணைப் பொறுத்தமட்டில் சகோதரியின் மகனையும், பெண்ணைப் பொறுத்தமட்டில் சகோதரனின் மகனையும் குறிக்கும் சகோதரன் சகோதரி பிள்ளைகளான மைச்சாள்; மைச்சான் திருமணமே பழைய திராவிட வழக்கமாகும். இத்தகைய வழக்கமே சிங்கள-தமிழ்ச் சமுதாயத்திலும். செல்வாக்குப் பெற்றிருந்ததை பிராமிக் கல்வெட்டிற் காணப்படும் இவ் வடிவம் மட்டுமன்றி இன்றும் கடைப்பிடிக்கப்பட்டுவரும் மைச்சாள் மைச்சான் திருமண உறவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இத்தகைய் அமைப்புத்தான் 'மருமக்கட்டாயமாக, கேரளப்பகுதியில் அநுசரிக்கப்படும் வழக்கமாக அமைந்துள்ளது. இதற்கும் வடபகுதியில் சிறப்பான வழக்கங்களான தேசவழமைச் சட்டத்திற்கும், கிழக்குப்பகுதி முக்குவச் சட்டங்களுக்கும் நெருங்கிய ஒற்றுமையுண்டு. இதில் பிரதானமானது பெண்களது சொத்து உரிமையாகும். வட இந்திய சமூக அமைப்பில் பெண்களுக்கு இத்தகைய உரிமை கிடையாது. ஆனால் கிறிஸ்தாப்தத்திற்கு முந்திய ஈழத்துக் கல்வெட்டுகளில் பெண்கள் சொத்துரிமை படைத்தவர்களாக விளிக்கப்படுவதானது பண்டைய ஈழத்தில் இத்தகைய வழக்கம் பேணப்பட்டதையே எடுத்துக் காட்டுகின்றது.

இத்தகைய சில அம்சங்கள் ஈழத்தில் நாகரிக வளர்ச்சியானது பண்டையத் தமிழக நாகரிக வளர்ச்சிப் பாதையிற் சென்றதையே எடுத்துக் காட்டுகின்றன. எனினும் பௌத்தத்தின் வருகை, வடஇந்திய கலாசாரத்தின் தாக்கம் தமிழக-ஈழச் சமுதாய அமைப்பினை வேறுபட்ட அமைப்புகளாக உருவாக்கி விட்டது மட்டுமன்று, இரு பிராந்தியங்களுக்கிடையே காணப்பட்ட அரசியல் உறவுகளும் இவற்றை இனரீதியில் வெவ்வேறான அமைப்புக்களாக வளர வழி வகுத்தது.

இதனாற்றான் பாளிநூல்களிலும், சிங்களக் கல்வெட்டுகளிலும் 'தமிள' என்ற பதம் தமிழ்நாட்டிலிருந்துஈழத்திற்குக் கால்கொண்ட வேறு கலாசார பண்புகளைக்கொண்டோரைச் சுட்டும் பதமாகவே கையாளப்பட்டுள்ளது. எனினும் இவ்வாறு தனியான கலாசாரமாக சிங்கள தமிழ் கலாசாரங்கள் வளர்ச்சி பெற்றாலும் தமிழ்க் கலாசாரத்தின் செல்வாக்கு இக்காலத்தில் தமிழகத்துடன் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமய உறவுகளால் மேலும் வளர்ச்சி கண்டது.

www.padippakam.com



## ஒரு குறளை உணர்வோம்

# அறமாகிய ஆக்கமா? அறமும் செல்வமுமா?

-''அருகோ''-

''அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்''

திருக்குறள் : 163

பரிமேலழகர் : அறன் ஆக்கம் வேண்டா தான் என்பான்- மறுமைக்கும், இம்மைக்கும் அறமும் செல்வமும் ஆகிய உறுப்புக்களைத் தனக்கு வேண்டாதான் என்று சொல்லப் படுவான்; பிறன் ஆக்கம் பேணாது அழுக்கறுப்பான்-பிறன் செல்வம் கண்ட வழி அதற்கு உதவாது அழுக்காற்றை செய்வான்.

அழுக்கறுத்தல் எனினும் அழுக்காறு எனினும் ஒக்கும். அழுக்காறு செய்யின் தனக்கே ஏதமாம் என்பதாம்.

மணக்குடவர் : தனக்கு அறனாகிய வாழ்வு வேண்டா தான் என்று சொல்லப்படுவான், பிறனுடைய ஆக்கத்தை விரும்பாதே அழுக்காறு செய்வான்.

இஃது, அழுக்காறுடையார்க்குப் புண்ணியம் இல்லை யாம் என்று கூறிற்று.

பரிதியார் : தனக்குத் தன்மத்தின் ஆக்கமாகிய செல்வம் வேண்டாதார் என்பார், பிறர் செல்வங் கண்டு அழுக்கு மனத்தாராவார்.

காளிங்கர் : தனக்கு மறுமை இன்பக் காரணமாகிய அறனும் மற்று இம்மை இன்பக் காரணமாகிய செல்வமும் என்னும் இவையிரண்டினையும் விரும்பாதான் என்று சான்றோரால் சொல்லப்படுபவன் யாவனோ எனின், பிறனொருவன் ஆக்கத்தை விரும்பாது மற்றதன் கண்ணே தமது உள்ளத்து உள்ள அழுக்கினை விடுகின்றவன்.

டாக்டர் மு.வ. : தனக்கு அறமும் ஆக்கமும் விரும்பாதவன் என்று கருதத் தக்கவனே பிறனுடைய ஆக்கத்தைக் கண்டு மகிழாமல் அதற்காகப் பொறாமைப் படுவான்.

''அறம் தழுவிய ஆக்கச் செயல்களை விரும்பாதவனே, தன்னால் முடியாத போதும் பிறன் செய்யும் ஆக்கச் செயல்களைப் பொறாமை காரணமாகச் சீர்குலைப்பான்'' என்பதே இக்குறட்பா கூறும் அறிவுரையாக இருக்க முடியும்.

மற்றப்படி மறுமை இன்பக் காரணமாகிய அறம், இம்மை இன்பக் காரணமாகிய செல்வம் என்பதெல்லாம் மிகைப்படுத்தப் படுவதாகவே தெரிகிறது. ஏனெனில் உலகப் பொது நலன்கள் ஓங்குவதற் அறவழிப்பட்ட ஆக்க வேலைகள் இன்றியமையாதனவாகும். அவற்றில் ஈடுபடுவோரே நிலையான புகழை ஈட்டிடவும் முடியும் தன்னால் அத்தகைய அறச் செயல்களைச் செய்து உலகப்புகழை ஈட்ட முடியாதவன் என்பவனே, பிறர் அத்தகைய ஆக்க வேலைகளை மேற்கொண்டு மீக் கூறும் புகழை ஈட்டுவதைக் கண்டு பொறுக்க முடியாமல், பொறாமையால் கீழறுப்பு வேலைகளை மேற்கொள்வான்.

உள்ளபடி தன்னால் செய்யமுடியாத ஆக்க வேலைகளைப் பிறன் ஒருவன் மேற்கொள்ளும்போது அதைப் பேணிப் புரக்கவேண்டிய கடமை ஒவ்வொரு மாந்தனுக்கும் உள்ளது. அப்படியிருக்க வீண் பொறாமை காரணமாக-தன் உள்ளத்தில் அழுக்கு இருப்பதன் காரணமாக அதைக் கீழறுக்க முயல்வது, உலகப் பொது அறத்திற்கே அவன் ஒவ்வாதான் என்பதை எடுத்துக்காட்டுவதாகும் என்கிறார் திருவள்ளுவர் இக்குறட்பா மூலம்.

# குறளும் கிறளும்

''சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு''

இது திருக்குறளில் உள்ள 'வான்சிறப்பு' என்ற அதிகாரத்தில் வரும் பாடல்

இதே சந்தத்தில் திருவேற்காட்டைச் சேர்ந்த சுப்புராய முதலியார் என்பார் இயற்றிய 'கிறள்' நூலில் வரும் பாடல் வருமாறு:

''சிறப்பொடு பூனை பிறப்பினில் இருந்தால்
புறப்பட மாட்டாது எலி''

எப்படி இந்தக் கிறள்?

தகவல்: உவமைக்கவிஞர் சுரதா.

# தமிழகத்திலிருந்து இலங்கைத் தமிழரை வெளியேறுமாறு உத்தரவு

### இந்திய உள்துறை அமைச்சு நடவடிக்கை என 'வீரகேசரி' தகவல்

1983ம் ஆண்டு வன் செயல்களைத் தொடர்ந்து தமிழகத்துக்கு இடம்பெயர்ந்து முகாம்களுக்கு வெளியில் வாழும் இலங்கைத் தமிழர்களை அங்கிருந்து இலங்கைக்கு திருப்பியனுப்பும் முயற்சிகளை தில்லி மத்திய அரசாங்கம்ஆரம்பித்துள்ளதாம். மத்திய உள்துறை அமைச்சின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து பதினைந்து வருடகாலமாக தமிழகத்தில் கடவுச் சீட்டுகளை புதுப்பித்துக்கொண்டு வாழ்ந்து வந்த இலங்கைத் தமிழ் மக்கள் இங்குவரத் தொடங்கியுள்ளனர்:

இதன்படி வன்செயல்களை தொடர்ந்து வடக்கு, கிழக்கிலும், மலையகம், கொழும்பு பிரதேசங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாகத் தமிழகத்தை நோக்கிச் சென்றனர்.

இவர்களில் ஒருசாரார் அரசின் முகாம்களில் தொடர்ந்து அகதிகளாகவே உள்ளனர். இன்னொரு சாரார் அகதி முகாம்களுக்கு வெளியே தத்தமது கடவுச்சீட்டுக்களை மாவட்ட குடிவரவு, கலக்டர் அலுவலகங்களில் புதுப்பித்துக் கொண்டும், தொழில் பர்மிட் பெற்றுக் கொண்டும் அரசின் சட்டதிட்ட பிரமாணங்களுக்கு அமைவாக வசித்து வந்தனர்.

**வெளியேற்ற உத்திரவு**

இவ்வாறான் இலங்கைத் தமிழர்களது பெயர் விபரங்கள் மாவட்ட கலக்டர் அலுவலகங்களிலும் அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையங்களிலும் பதிவாகவே இருந்துள்ளது.

இப்படியாக அரசின் சட்ட திட்ட பிரமாணங்களுக்குஅமைவாக விஸாவை புதுப்பித்துக் கொண்டும் தொழில் பர்மிட்டுகளை பெற்றுக் கொண்டும் தமிழக அரசுக்கு எவ்வித தொந்தரவுமின்றி வாழ்ந்து வந்த இலங்கைத் தமிழர்களை திருப்பியனுப்பும் முயற்சிகள் இப்போது ஆரம்பமாகியுள்ளன.

உள்துறை அமைச்சிலிருந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களில் எவ்வித காரணங்களும் தெரிவிக்கப்படாமல் இருவார காலத்துக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதற்கு மேலதிகமாக மாவட்ட கலக்டர் அலுவலகங்களில் இருந்தும் சென்னை, புறநகர்ப்பகுதிகளில் குடிவரவு, குடியகல்வுத் துறை அதிகாரிகளிடமிருந்தும் வெளியேற்ற உத்தரவு சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடைத்துள்ளது.

இது சம்பந்தமாக உத்தரவு கிடைக்கப்பெற்ற இலங்கையர்கள் மேன்முறையீடு செய்தும் எவ்வித பதிலும் கிடைக்காத நிலையில் சிலர், இவ்வாரம் இலங்கை வந்து சேர்ந்துள்ளனர்.

இலங்கையில் அமைதியற்ற சூழ்நிலை தொடர்ந்து நிலவுவதால் தினமும் மக்கள் படகுகளில் உயிரைப் பணயம் வைத்துக்கொண்டு தமிழகத்துக்கு சென்று கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அங்கிருந்து கடவுச்சீட்டு வைத்துள்ள தமிழர்களை திருப்பியனுப்பும் நடவடிக்கை ஆரம்பமாகியிருப்பது குறித்து பலரும் விசனம் தெரிவிக்கிறார்கள்.

இது சம்பந்தமான அறிவித்தல், உத்தரவுகள் தமிழகத்திலிருக்கும் அரசியல்வாதிகள் எவருக்கும் தெரியாத ஒரு சூழ்நிலையில் அவசரம் அவசரமாக எடுக்கப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

இந்தியாவில் பிறந்து, வளர்ந்து இலங்கையில் அகதிகளாக வாழ்ந்து வரும் இந்திய வம்சாவளியினரையும் வெளியேற்றுமாறு பிறப்பிக்கப்பட்ட இவ்வுத்தரவினால் பலரும் கலக்கமடைந்துள்ளனர். இந்திய அரசாங்கம் எடுத்துள்ள முடிவு குறித்து அங்கிருந்து கலக்கம் அடைந்து இலங்கையிலுள்ள தமது உறவினர்களுடன் மேல் நடவடிக்கை குறித்து தொடர்பு கொண்டுள்ளனர்.

இவ்வாறு, கொழும்பிலிருந்து வெளியாகும் 'வீரகேசரி' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# படகில் சென்ற அகதிகளின் அவலச் சாவுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்

### ஈ.பி.டி.பி. கண்டனம்!

இன்றைய யுத்தத்தின் தாக்கங்களே வட கிழக்கு மக்களின் உயிர் வாழ்வதற்கு உத்தரவாதம் இல்லாமல் செய்துள்ளன என்று ஈ.பி.டி.பி. அரசியல் செயலாளர் ரமேஷ் நடராசா எம்.பி. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இருந்து தமிழகம் சென்ற அகதிகள் 40க்கும் மேற்பட்டோர் நடுக்கடலில்பலியாகியுள்ளனர். இந்த துயரத்துக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் தெரிவிக்கிறார்.

அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வன்னிக்கு உணவுப் பொருட்கள் தாராளமாக அனுப்பி வைக்கப்படுவதாக கூறப்பட்டு வருகிறது. ஆனால் அக்கூற்றுக்கு மாறாகவே அங்குள்ள நிலைவரங்கள் இருக்கின்றன. இந்நிலையில் நிவாரண வெட்டும் அம்மக்களை பட்டினிச்சாவுக்கு இரையாக்கப்போகின்றது என்று அஞ்ச வேண்டியுள்ளது.

**நரக வாழ்க்கை**

இதேவேளை விமானக் குண்டு வீச்சு, ஷெல் வீச்சு போன்றவற்றாலும் பல்லாயிரக் கணக்கான வன்னி மக்கள் இடம்பெயர்ந்து வானமே கூரையாக வாழ்ந்து வருகின்றார்கள். மேலும் தொடரும் யுத்த நடவடிக்கைகள் இடம்பெயர்ந்த மக்களை தொடர்ந்தும் நரக வாழ்க்கைக்கு தள்ளுவதுடன் மேலும் மேலும் இடம்பெயர்வுகளை உருவாக்கி வருகின்றன.

இவ்வாறான துயரச் சூழலில் இருந்து தப்பிக் கொள்ளவே தமிழர்கள் சிலர் தமிழகம் நோக்கித் தப்பிச் செல்லுகின்றனர்.

யாழ் குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தும் ஆயிரக்கணக்கானோர் தமிழகம் நோக்கி புகலிடம் தேடி ஓடுவது அரசின்மீதும் அதன் பாதுகாப்பிலும் அவர்கள் நம்பிக்கை இழந்து விட்டதன் பிரதிபலிப்பேயாகும்.

**தொடர்கதை ஆவதா?**

யுத்தத்தை தொடர்ந்தபடி அதற்கு சர்வதேச சமூகத்திடமும் உள்நாட்டிலும் அரசு விளக்கம் கூறுவதைவிட்டுசர்வதேச சமூக மத்தியஸ்தத்துடன் அரசியல் தீர்வுக்கான உண்மையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு மாறான யுத்த நாட்டம் அவலங்களை தொடர்கதையாக்கும்.

சொந்த மண்ணில் அகதியாகி அயலக மண்ணில் புகலிடம் தேடி ஓடியபோதுபலியான மக்களுக்கு ஈ.பி.டி.பி. தமது அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# தந்தை செல்வா



த. சபாரத்தினம்

## கொழும்பில் வீடு வாங்காத காரணம்

### அங்கம்-7

ஏப்ரல் 20 ஞாயிற்றுக் கிழமை.

தந்தைக்கு அவரின் இறுதி பத்தாண்டுகள் வரை யோகா சனப் பயிற்சியளித்த ஈ. சபா ரத்தினம் டெலிபோன் செய்து,

''இன்று வெளிவந்த பகுதியில் ஒரு தவறு''

''சொல்லுங்கள் திருத்து கிறேன்''

''தந்தைக்குச் சொந்த வீடு இல்லை''

''ஏன்? அவர் குடியிருந்த கொள்ளுப்பிட்டி அல்பிரட் ஹவுஸ் கார்டினிலுள்ள 16ம் இலக்க வீடு?''

''அது வாடகை வீடு, செல்லமுத்து சிவநாதனுக்குச் சொந்தமானது. தந்தை இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்புதான் அவ்வீட்டை அவரின் மகன் வசீகரன் வாங்கினார். உறுதி எழுதிய வழக்கறிஞரின் பெயர் காமினி ஜயசிங்க''

''தந்தையின் தெல்லிப் பளை வீடு?'' என்று கேட்டேன்.

''சீதனம்''

தந்தை வீடு பற்றி பற்றி நான் விட்ட தவறைச் சுட்டிக் காட்டி அருள் மா. இராசேந்திரன் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். இராசேந்திரன் தந்தையின் செயலாளராக நீண்ட காலம் பணியாற்றியவர் தந்தையைப் பற்றிய நிறைய விடயங்களைத் தெரிந்து வைத்திருப்பவர்.

இராசேந்திரன் எழுதியிருப்பது இதுதான்:

தந்தை செல்வா கொள்ளுப்பிட்டியில் குடியிருந்த வீடு அவருக்குச் சொந்தமானது அல்ல. அது அவர் வாடகை கொடுத்து வசித்து வந்த வீடு அவருக்கு கொழும்பில் வீடு ஏதும் இருக்கவுமில்லை.''

நான் 16 அல்பிரட் ஹவுஸ் கார்டனுக்கு 1957 முதல் அடிக்கடி போயிருக்கிறேன்.

''செல்வநாயகம் வீட்டுக்குப் போய்விட்டு வருகிறேன்'' என்று அப்பொழுது நான்பணிபுரிந்த 'தினகரன்' அலுவலகத்தில்சொல்லிவிட்டுப்போனேன்.

பின்பு சிலர் அவ்வீடு தந்தை செல்வாவின் சொந்த வீடு என்று சொன்னதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அது என் மனதில் பதிந்து விட்டது.

பிரபல வழக்கறிஞராகி, நிறையச் சம்பாதித்தவர் தந்தை செல்வா என்பது எனக்குத் தெரியும். அவரின் 'சேம்பேர்ஸ்' இல் எத்தனையோ பிரபல வழக்கறிஞர்களைப் பார்த்திருக்கிறேன். புலர் அவரிடம் போய் சட்ட ஆலோசனை கேட்பார்கள்.

கொள்ளுப்பிட்டி வீடு தந்தைக்குச் சொந்தமானதுஎன்று அவரின் எதிரிகள் ஒரு காலத்தில் பிரசாரம் செய்ததாகவும் அது பலதடவைகள் மறுக்கப்பட்டதாகவும் இராசேந்திரன் தனது கடிதத்தில் எழுதியுள்ளார்.

''கொழும்பில் வீடு வைத்திருக்கிறார். தேயிலைத் தோட்டங்கள் வைத்திருக்கிறார். சிங்களத் தலைவர்கள் பலரின் குடும்ப நண்பர். தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக

நூல் தந்தையின் அரசியல் வாழ்க்கை பற்றியது. ஜெயரத்தினம் வில்சன் ஆங்கிலத்தில் எழுதியது.

வழக்கறிஞர் தொழில் புரியும் போது நிறையப் பணம் சம்பாதித்த தந்தை கொழும்பில் வீடு வாங்காததற்கான கவனத்தை காரணத்தை வில்சன் கொடுத்துள்ளார்.

''கொழும்பில் வீடு வாங்குவதை அவர் வேண்டுமென்றே தவிர்த்தார். கொழும்பில் வீடு வாங்கினால் தனது பிள்ளைகள் கொழும்பில் வேரூன்றி



இது செல்வநாயகம் தம்பதியினரின் திருமண புகைப் படம். எஸ்ஜே வி. 1927ம் ஆண்டு எமிலி கிரேஸ் பார் குமாரகுலசிங்கத்தைத் திருமணம் செய்தார். தென்னிந்திய திருச்சபை ஆகம விதிகளின்படி இத் திருமணம் நடைபெற்றாலும் வழமையாக மேற்கத்திய பாணியில் உடை அணியும் தந்தை செல்வா, தனது திருமணத்தின்போது தமிழ் முறைப்படி உடையணிந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சமஷ்டி, தமிழரசு என்றெல்லாம் பேசுகிறார்'' என்று பிரச்சாரம் செய்யப்பட்டது எனக்குத் தெரியும்.

நான் அவற்றிலெல்லாம் கவனம் செலுத்தவில்லை. அரசியலில் இத்தகைய பிரசாரம் சகஜம்.

'கரெக்டர் அசசினேசன்' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். குணாதிசயக் கொலை என்று தமிழில் கூறலாம். ஒருவரைக் கெட்ட குணங்களையுடையவர் எனக் காட்ட முயல்வதே அம்முயற்சி.

தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாறு பற்றி இது வரை ஓரேயொரு நூல் மட்டுமே வெளிவந்துள்ளது.

நூற்றி நாற்பது பக்கங்களைக் கொண்ட அச் சிறு

பெற்றோரின் சொந்த ஊரான தெல்லிப்பளைக்கு அந்நியராகி விடுவரோ எனப் பயந்ததே அதற்குக் காரணம். பிள்ளைகள் தமது விடுமுறையின் பெரும் பகுதியை தெல்லிப் பளையிலுள்ள மணியகார் குமாரசிங்கியின் வீட்டிலேயே கழித்தனர்''

### சிறந்த பண்புகள்

அதே புத்தகத்தில் வில்சன் கொடுத்துள்ள இரண்டு தகவல்கள்:

* தந்தையின் நண்பர்களில் அக்காலத்தில் சட்டத்துலையில் கொடிகட்டிப் பறந்த எச்.வி. பெரோரா, சர்எட்வேர்ட் ஜயதிலக, பி. நவரத்னராஜா என். சின்னத்தம்பி ஆகியோரும் அடங்குவர்.

* தந்தையும் அவரின் நண்பர்களான சர். எட்வேர்ட் ஜயதிலக, பி. நவரத்தினராசா. என். சின்னத்தம்பி ஆகியோர் தேயிலைத் தோட்டங்களை வாங்கி அவற்றைத் திருத்துவதில் ஈடுபட்டனர். தன் வயோதிப காலத்துக்கு உதவுவதற்காக இரண்டு தேயிலைத் தோட்டங்களில் தந்தை முதலீடு செய்தார். காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் 1972ம் ஆண்டில் அத் தோட்டங்களை அரசு எடுத்துக் கொண்டது.

இராசேந்திரன் தனது கடிதத்தில் வேறொரு விடயத்தையும் குறிப்பிட்டிருந்தார்.

தந்தை இறுதிக் கட்டத்தில் 7000 ரூபா கடன் வாங்கியதை எழுத வேண்டுமா என்பதே அது.

நான் மிகவும் ஆழ்ந்து சிந்தித்த பின்பே தந்தை செல்வா வாழ்க்கைத் தொடரை ஆரம்பித்தேன்.

வாழ்க்கை வரலாற்றில்:-
வாழ்க்கைக் குறிப்பு
பிறந்த, படித்த சூழல்
குணாதிசயங்கள்
வரலாற்றின் போக்கு
அது ஏற்படுத்திய பாதிப்பு
அப் பாதிப்புக்கான எதிர் கொள்ளல்
வரலாற்றைப் பாதித்தமை
அப் பாதிப்பின் விளைவுகள்
மதிப்பீடு

முதலிய அம்சங்கள் இடம் பெறுதல் அவசியம்.

எல்லாரும் தந்தை செல்வாவாகவில்லை. தந்தை செல்வா தான் அவ்விடத்தைப் பெற்றார். அதற்கு அவரின் சிறப்புக் குணங்கள் தான் காரணம்.

நேர்மை, பணவிடயங்களில் அப்பழுக்கற்ற தன்மை, சிந்தித்து, பிரார்த்தித்து, எடுத்த முடிவை கடைப்பிடிக்கும் இயல்பு.

முதலாவது அங்கத்திலேயே தந்தையின் இப்பண்புகளை வெளிக் கொணர்வதே என் நோக்கமாகவிருந்தது.

மாதம் 10,000 ரூபா சம்பாதித்த பெரும் வழக்கறிஞர் (அப்போது ஒரு சாப்பாடு 25 சதம். தினகரனின் விலை 5 சதம், தேனீர் 5 சதம், வடை 5 சதம், பயிற்சி பெற்ற ஆசிரியரின் சம்பளம் 40 ரூபா) அரசியலில் இறங்கி கட்சியும் கட்சிப் பத்திரிகையும் நடத்தி பணமுடையால் கஷ்டப்பட்டார்.

கட்சித் தொண்டர் ஒருவர் பணம் கொடுக்க முன்வந்தும் அதை ஏற்கமறுத்து விட்டு-

கடன் வாங்கினார்.

தானே அக்கடனை அடைக்கும் நோக்குடனேயே வட்டிக்கு கடன் எடுத்தார்.

விட்டதாலேயே மகன் சந்திரகாசனுக்கு அப்பொறுப்பு போனது.

பிள்ளைகளிடம்கூட அவர் உதவி பெற விரும்பவில்லை.

... சம்பவங் ... ள்

... ... ... அரசியல் சட்டத்துக்கு தமிழ் மக்களின் எதிர்ப்பைக் காட்டுவதற்காக காங்கேசன்துறை எம்.பி. பதவியை தந்தை இராஜினாமா செய்தார். அதனால் எம்.பி.க்குரிய சலுகைகள் யாவும் பறிபோயின.



கிங்ஸ் கவுன்சில் (கே.சி.) ஆக சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு முன் பாரிஸ்டர் விக் குடன் தந்தை. 1946ம் ஆண்டுப் புகைப்படம்.

தந்தையின் அலுவல்களை கவனிக்க செயலாளர் கூட இல்லை.

அப்பொழுது தமிழ் எழுதுவினைஞர் சங்க அலுவலகம் கொள்ளுப்பிட்டியில் 647ல் மேல் வீட்டில் இருந்தது.

ஒரு நாள் பின்னேரம்.

எஸ்.ஜே.வி. படிகளில் மெதுவாக ஏறிமேலே போனார்.

அவரைக் கண்டதும் எல்லாரும் எழுந்து நின்றனர்.

''இங்கே எதற்கு வந்தீர்கள்'' என்று கேட்டார், தமிழர் எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் பேரின்ப நாயகம்.

''எனக்கு உதவி தேவை தேவை அதுதான் வந்தனான்''.

தந்தையை அமர வைத்து விட்டு அவருக்குத் தேவைப் படும் உதவி பற்றி விசாரித்தார்கள்.

''எனக்கு உதவி செக்கிட்டரி தேவை''.

தனது கடிதப் போக்குவரத்துக்களை கவனிப்பது தான் முக்கிய வேலை என்று சொன்னார்.

தான் ஒவ்வொரு நாளும் பிற்பகல் 3 மணிக்கு வந்து வேலையைச் செய்வதாக பேரின்பநாயகம் சொன்னார்.

''எனக்கு சம்பளத்துக்கு ஆள் பிடித்துத் தாருங்கள் நான் சம்பளம் கொடுப்பேன்'' என்றார் தந்தை செல்வா.

''சம்பள விஷயத்தைப் பின்பு பார்ப்போம். இப்ப நான் வந்து வேலை செய்கிறேன்'' என்றார் பேரின்பநாயகம்.

அடுத்த நாள் 3 மணிக்கு பேரின்பநாயகம் தந்தையின் வீட்டுக்குப்போனார். அவர் வேலை செய்து கொண்டிருக்கும் போது சமயலறையில் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. சற்று நேரத்தில் கப்

(16ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# தந்தை செல்வா...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

சோசரில் அடிக்கும் தடதட சத்தம். பேரின்பநாயகம் நிமிர்ந்து பார்த்தபோது தேநீருடன் தந்தை.

"உதென்ன வேலை. என்க்கேன் இப்ப தேத் தண்ணி".

"குடியுங்க. குடிசிட்டு வேலை செய்யுங்கோ".

"நீங்கள்போய்தேத்தண்ணி போட்டுக் கொண்டு வர வேணுமே!"

"நான் போட்ட தேத் தண்ணி நீங்கள் குடிக்கக் கூடாதா?" என்று கேட்டார் தந்தை.

அந்தக் காலத்தில் தந்தை தன் காரை திருத்த வேலைக்கு கராசுக்கு அனுப்பிவிட்டார்.

பலர் தமது கார்களைக் கொடுக்க முன் வந்தனர். ஏற்க மறுத்துவிட்டார்.

அடிக்கடி கால்பேசுக்கு உலாத்தப் போவது அவரின் வழக்கம். அதைத் தொடர முடிவு செய்தார்.

"பேரின்பநாயகம் வா. வோக்குக்குப் போவம்".

இரண்டு பேருமாக காலி ரோட்டைக் கடந்து பஸ் ஹோல்ட்டில் போய் நிற்பார்கள். அந்தக் காலத்தில் டபிள் டெக்கர் பஸ்கள் ஓடின. டபிள் டெக்கர் பஸ் வரும் வரை இருவரும் நிற்பார்கள்.

தந்தை முன்னால் ஏறுவார் பேரின்பநாயகம் அவருக்குப் பின்னால் ஏறுவார்.

தந்தைதான் இரண்டு பேருக்கும் டிக்கட் வாங்குவார்.

சில நாட்களுக்குப் பின்பு "நீங்கள் பஸ்ஸிலை போறதை...?"

"போனால் என்ன?"

"நீங்கள் ஒரு கட்சியின் தலைவர்".

"தலைவர் என்றால் என்ன?"

"ஆட்கள் ஒரு மாதிரிக் கதைப்பினம்".

"ஏன் பஸ்ஸிலை போனால் மதிப்புக் குறைவா?"

"அப்படித்தான்"

"அப்படியானால் பஸ்ஸிலை பயணம் செய்யும் எல்லாச் சனங்களும் மதிப்புக் குறைந்தவர்களா?"

"தந்தையுடன் தர்க்கித்துக் கொள்ளமுடியாது" என்கிறார் பேரின்பநாயகம்.

தந்தை எதையும் தர்க்க ரீதியாகத் தான் அணுகுவார்.

## அத்துவக் காத்து

அதற்குக் காரணம் அவர் தனது வாழ்நாளில் மூன்றில் ஒரு பகுதியை வழக்கறிஞராகக் கழித்தமையே.

1918ம் ஆண்டில் விஞ்ஞானப் பட்டதாரியான எஸ். ஜே வி. வெஸ்லி கல்லூரியில் ஆசிரியத் தொழில் புரிந்த காலத்தில் சட்டக்கல்லூரியில் சேர்ந்து அத்துவக் காத்தாக பயின்று 1924ம் ஆண்டில் சட்டத்துறையில் புகுந்தார்.

இப்பொழுது வழக்கறிஞர் தொழில் புரியும் யாவரும் அட்டர்னி-அற்-லோ என்று அழைக்கப்படுகிறார். முன்பெல்லாம் அப்படியல்ல.

அத்துவக்காத்து, புரக்கிறாசி
என்று இரு பிரிவு வழக்கறிஞர்கள் இருந்தனர்.

பட்டதாரியான எஸ்.ஜே. வி. அத்துவக்காத்தாக சுப்ரீம் கோட்டில் பதவிப்பிரமாணம் எடுத்தார்.

அப்பொழுது அவருக்கு26 வயது.

அவரின் ஒரேயொரு இலட்சியம்.

பிரபல வழக்கறிஞராகி சுப்ரீம் கோட்டு நீதியரசராவது.

ஆனால் பிரபல்யமடைந்த மற்ற வழக்கறிஞர்கள் சென்ற கிரிமினல் சட்டப் பாதையில் நடக்காது சிவில் சட்டத்துறையைத்தேர்ந்தெடுத்தார் தந்தை.

(தொடரும்)



அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் 1947ம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றபோது எடுக்கப்பட்ட படம். தமிழ்க் காங்கிரஸ் தலைவர் (வலம்) ஜி. ஜி. பொன்னம்பலம், கோப்பாய் எம்.பி. ஆகத்தெரிவு செய்யப்பட்ட சி. வன்னியசிங்கம் (இடம்) ஆகியோருடன் அன்று காங்கிரசின் பிரதித் தலைவராக விளங்கிய தந்தை.

# மீளமைப்பு நடவடிக்கை காரணமாக 30 ஆயிரம் குடும்பங்கள் நிவாரணம் பெறும் தகுதி இழப்பு

## 'நிவாரண வெட்டு' தொடர்பாக அரசாங்கம் அறிக்கை

யாழ். குடாநாட்டில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் அகதிகளுக்கு வழங்கப்படும் உணவு நிவாரணத்தில் மீள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதே தவிர அகதிகளுக்கு வழங்கப்படும் உணவு நிவாரணத்தில் வெட்டு என்ற செய்தியில் உண்மை இல்லை என அரசாங்கம் வெளியிட்டு உள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அகதிகளுக்கு வழங்கிவரும் உணவு நிவாரணம் குறைக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் வெளியூர் பத்திரிகைகளில் வெளியான செய்திகள் தொடர்பாக எமது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் யாழ். அரசாங்க அதிபருக்கு வழங்கியுள்ள கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் 1998ம் ஆண்டு மே மாதம் வரை 81 ஆயிரத்து 224 பேருக்கு உணவு நிவாரணம் வழங்கப்பட்டது. நிவாரணம் வழங்குவதன் மூலம் அகதிகளின் பிரச்சினைகளுக்கு நீர்வு காண முடியாது. அதனால் அகதிகளை சொந்த இடங்களில் குடியமர்த்தி அவர்கள் விவசாயம் மற்றும் ஏனைய வாழ்க்கையை ஆரம்பிக்க சகல உதவிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் கணிப்பின் படி 1996ம் ஆண்டு 7 ஆயிரத்து 400 குடும்பங்களும் 1997ம் ஆண்டு 36 ஆயிரத்து 600 குடும்பங்களும் மீளக்குடி அமர்த்தப்பட்டுள்ளனர். 40 ஆயிரம் குடும்பங்களை குடியமர்த்துவதற்கென 20 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

அத்துடன் விவசாயத்தை மேற்கொள்ளவும் உதவிகளும் வழங்கப்பட்டது. இவ் உதவிகளை பெற்றவர்கள் இப்பொழுது தங்கள் விவசாய அறுவடையையும் மேற்கொண்டு வருகின்றனர். இவற்றைக் கவனத்திற் கொண்டு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அகதிகளுக்கு வழங்கப்படும் உணவு நிவாரணத்தை மீளமைப்பு செய்துள்ளார் இதனால் 30 ஆயிரம் குடும்பங்கள் உணவு நிவாரணம் யெறும் தகுதியை இழந்துள்ளன.

அத்தோடு யாழ். விவசாயிகள் தங்கள் விவசாய பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் ஏனைய வழிவகைகளை அறிமுகம் செய்துள்ளார். இதன் படி விவசாய பொருட்களை பருத்தித்துறையிலிருந்து கப்பலில் கொண்டு வர கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

உணவு நிவாரணங்கள் வழங்குவதைவிட நீண்டகால நோக்கமாக கொண்டு விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வன்னி மாவட்டத்தில் உள்ள அகதிகளை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து செல்வதற்கென பல கோடி கோடி ரூபாவை அரசு செலவு செய்து வருகிறது. அத்துடன் திருகோணமலை, மன்னார் மாவட்டங்களில் இருந்து தினமும் 350 அகதிகளை அழைத்து செல்லவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆகையால் அகதிகளுக்கு வழங்கப்படும் உணவு நிவாரணம் குறைக்கப்பட்டுள்ளது என கூறப்படுவதில் எந்த வித உண்மையும் இல்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஒடுக்குமுறை?..

(1ம் பககத் தொடர்ச்சி)

ழர்கள் சிங்கள மக்களுக்கு மத்தியில் வாழ்வதாலும் அவர்களின் பிரச்சினை வடக்கு கிழக்குத் தமிழ்மக்களின் பிரச்சினையிலிருந்து முற்றிலும்மாறுபட்டது என்று அவர்களாலேயே கருதப்படுகிறது. அதனால் வடக்குக்கிழக்குத் தமிழ் மக்களின் போராட்டங்களிலிருந்து அவர்கள் எப்போதும் விலகியே இருந்து வருகிறனர்.

அத்துடன் மலையகத் தமிழ்மக்கள் மத்தியிலுள்ள பெரிய அமைப்பான இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் 1977ஆம் ஆண்டு முதலே அரசாங்கத் தரப்பில் இருந்து வருகிறது. தற்போதைய சந்திரிகா அரசிலும் அது அங்கம் வகிக்கிறது. மலையகத் தமிழ்மக்களின் மூத்த தலைவர் தொண்டமான் சந்திரிகா அமைச்சரவையிலும் பொறுப்பு மிக்க அமைச்சராக இருக்கிறார்.

இவ்வளவு இருந்தும் அவர்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற ஒரே காரணத்திற்காகச் சகல துறைகளிலும் புறக்கணிக்கப்படுகிறார்கள். அவர்களிடையே படிப்பறிவே குறைவு. அப்படியிருந்தும் அவர்கள் மத்தியிலிருந்து படித்துவிட்டுவரும் இளைஞர்களுக்குத் தகுதியிருந்தும் வேலைவாய்ப்பு மறுக்கப்படுகிறது. இராணுவமும், காவல்துறையும் காரணமின்றியே அவர்களைக் கைது செய்து கொடுமைப்படுத்துவது அதிகரித்து வருகிறது.

இதனால் மலையகத்திலும் வன்முறைப் போக்கு வளர்ந்து வருகிறது என்று சிங்களப்பத்திரிகைகளே எழுதுகின்றன.

இவையெல்லாம் விடுதலைப்புலிகளுக்கு எதிராக மட்டும் நடைபெறுகின்ற காரியம் தானா?

இல்லை; தமிழ்மக்களுக்கு எதிராக, இந்தியமக்களுக்கு எதிராக நடைபெறும் இனவாத நடவடிக்கைகள்தான் இவை யென்றால் மிகையாகாது.

எனவே, சிறீலங்கா அரசு புலிகளைச் சாக்கிட்டு இனவாதப்போரை நடத்திக்கொண்டிருப்பதை உடனே நிறுத்த வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிரான சகல ஒடுக்குமுறைகளையும்கைவிட வேண்டும்.

அண்மையில் சந்திரிகாவே சொன்னதைப்போல மூன்றாவது நாடு ஒன்றின் மத்தியஸ்தத்தை ஏற்று பேச்சு வார்த்தையை மீண்டும் தொடங்க வேண்டும்.

இதற்கு இந்திய அரசும் தன் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு ஈழத்தமிழர்பாதுகாப்புக் கழகம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

Edited, Printed, Published and Owned by ARUNACHALAM GOPALAN, No. 14, Sait Colony 1st Street, Egmore, Chennai-6000
Printed at Kuralneri Achagam, 4/77, Subethar Garden, Cholaimedu, Chennai-94

சனநாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை